# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 322 புரட்டாதி 28ஆம் நாள் சனிக்கிழமை 14 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20

பக்கங்கள்: 28


## மைத்திரிக்கு எதிராக இன்று கறுப்புக் கொடிப் போராட்டம்

### யாழ்ப்பாணத்துக்கு அவர் வரும் பாதைகளில் நடக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 14

பாடசாலை மட்ட தேசிய தமிழ் மொழித் தின விழாவில் கலந்துகொள்வதற்காக இன்று யாழ்ப்பாணம் வருகை தரும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு கறுப்புக்கொடி காட்டப்படவுள்ளது. தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டங்களுக்கு செவிசாய்க்க அவர் தவறியிருப்பதால் அவரது யாழ்ப்பாண வருகையை எதிர்த்து கறுப்புக்கொடி காட்டப்படும் என்று அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர்.

"தமிழ் அரசியல் கைதிகளுக்குத் தீர்வு வழங்காமல் அரச தலைவர் மைத்திரி நாளை (இன்று) நிகழ்வுகளில் பங்கேற்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவாராக இருந்தால் அதற்கு எதிர்ப்பு வெளியிடப்படும். நிகழ்வுகளில் பங்கேற்க அவர் செல்

» 04




## ஆளுநர் அலுவலகம் முன்பாகவும் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.14

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வலியுறுத்தி நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் நடத்தப்பட்டன. யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக ஆரம்பித்த ஊர்வலம் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்குச் சென்றது. அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஊர்வலம் ஆளுநர் அலுவலகத்தை அடைந்தபோது

» 25

## அரசியல் கோசங்களால் ஆர்ப்பாட்டத்தில் சலசலப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14

அரசியல் கைதிகள் விடுதலையை வலியுறுத்தி நேற்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் அரசியல் சார்புடைய கோசங்கள் எழுப்பப்பட்டன. கத்தோலிக்க மதகுரு ஒருவர் அதைச் சுட்டிக் காட்டியதையடுத்து கோசம் எழுப்புவது நிறுத்தப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், சட்டத்தரணி சுகாஸ் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். ஏ 9 வீதியை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டபோது அவர்கள் "ஜனாதிபதியும் வேண்டாம் சம்பந்தனும் வேண்டாம்"" என்று கோசம் எழுப்பினர்.

உடனே அங்கிருந்த கத்தோலிக்க மதகுரு ஒருவர் அவர்களின் அருகில்

» 25

## கிளிநொச்சியிலும் நேற்றுக் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஒக்.14

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், அநுராதபுரம் சிறையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றக் கோரியும் கிளிநொச்சியில் நேற்றுக்

» 04

# முழு அடைப்பினால் முடங்கியது வடக்கு!

## அரசியல் கைதிகளுக்கு ஆதரவான நேற்றைய போராட்டம் முழு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்ரோபர். 14

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி நடத்தப்பட்ட முழு அடைப்புப் போராட்டத்தால் வடக்கு மாகாணம் முடங்கியது. இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது. வடக்குத் தமிழ் பேசும் மக்கள் ஓரணியில் திரண்டு தமது ஒற்றுமையான மன உணர்வை வெளிக்காட்டினர். அசம்பாவிதங்கள் எதுவுமின்றி போராட்டம் முழுமையான வெற்றி பெற்றது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



கடைகள், சந்தைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. நகரங்களில் மட்டுமல்லாமல் கிராமங்களில் இருந்த சிறு சிறு கடைகளும் மூடப்பட்டிருந்தன. இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளோ, தனியார் பேருந்துகளோ வடக்கின் எந்தவொரு மாவட்டத்திலும் சேவை நடத்தவில்லை. பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தரவில்லை. அரச அலுவலகங்கள் மக்கள் இல்லாமல் வெறிச்சோடியிருந்தன. பாதிக்கும் மேற்பட்ட அலு

» 25

## பாதுகாப்பு இம்முறை பன்மடங்கு அதிகரிப்பு

### அச்சுறுத்தலால் திட்டம் மாறவும் கூடும்

யாழ்ப்பாணம், ஒக். 14

அரச தலைவர் மைத்திரிபால யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகைதரவுள்ள நிலையில் அவருக்கான பாதுகாப்பு கடுமையாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்

» 04

## மைத்திரியிடம் இருந்து சாதகமான பதில் இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 14

அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து எந்தவொரு ஆக்கபூர்வமான பதிலும் கிடைக்கப் பெறவில்லை. சட்டமா அதிபருடன் பேசுவேன் என்பதையே மீண்டும் தனது பதிலாக அரச தலைவர் கூறியுள்ளார்.

அமைச்சர் மனோகணேசன் நேற்று மதியம் அரச

» 25

## சம்பந்தர் எழுதிய கடிதத்துக்கும் மைத்திரியிடமிருந்து பதிலில்லை

யாழ்ப்பாணம், ஒக். 14

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எழுதிய கடிதத்துக்கு நேற்றிரவு வரை பதில் கிடைக்கவில்லை. சந்திப்புக்கும் நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்படவில்லை.

அநுராதபுரம் சிறைச்சாலையில் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் 19 நாள்களாக தொடர் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்

» 25

## வவுனியாவிலும் உணவு ஒறுப்பு போராட்டம்

வவுனியா, ஒக்.14

தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று வவுனியாவில் அடையாள உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

வவுனியாவில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்

» 04



அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கக் கோரியும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரியும் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்னால் நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (5)

see more news in newuthayan.com

## குழப்பம் விளைவிக்காது போராட்டம் நடத்தலாம்

### நீதிமன்று உத்தரவு

» 25

## மைத்திரி பங்கேற்கும் நிகழ்வுகளை மாகாண சபையினரும் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் இன்று பங்கேற்கும் நிகழ்வுகளைப் புறக்கணிக்க வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் தீர்மானித்துள்ளனர். வடக்கு மாகாண சபையின் அமைச்சர்களும், அரச தலைவரின் நிகழ்வுகளில் பங்கேற்கமாட்டார்கள் என்று தெரியவருகின்றது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறும்

» 25

### அடைப்புப் போராட்டங்களால் ஆகப்போவது எதுவுமில்லை

## வடக்கு அரசியல்வாதிகளுக்காக புலிகளை விடுவிக்கவே முடியாது

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, ஒக். 14

சிறையில் அடைக்கப்பட்டுள்ள அனைவருமே விடுதலைப் புலிகள். வடக்கு அரசியல்வாதிகள் சொல்வதற்காக புலிகளை விடுதலை செய்ய முடியாது. வடக்கில் முழு அடைப்பு நடத்தி சாதிக்கப்போவது ஒன்றுமில்லை. வடக்கின் அரசியல் நாடகமே முழு அடைப்புப் போராட்டம்.

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன தெரிவித்தார். பியகம பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் ருவான் பங்கேற்றிருந்தார். நிகழ்வு முடிவடைந்த பின்

» 25




புதுவிதி PUTHU VITHI இன்

பரிசு மழையில் நனையத் தயாராகுங்கள்

ரூ 200,000/= இற்கும் அதிகமான பணப் பரிசை வெல்வதற்கான அரிய சந்தர்ப்பம்

போட்டி விவரம் உள்ளே பக்கம் 15

மேலதிக விவரங்களை அறிய இன்றே "புதுவிதி" வார இதழை வாங்கிப்படியுங்கள்

# முடங்கியது வடக்கு

## அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரி



யாழ்ப்பாணம்



கிளிநொச்சி



மந்திகை




முல்லைத்தீவு



நெல்லியடி




பருத்தித்துறை




அச்சுவேலி



புதுக்குடியிருப்பு





தண்ணீரூற்று



திருநெல்வேலி



வல்வெட்டித்துறை



வவுனியா

# டெங்கைக் கட்டுப்படுத்த சிறப்பு வேலைத்திட்டம்

## எதிர்வரும் 31ஆம் திகதி சிறப்புக் கூட்டம்

கொழும்பு, ஒக்.14

தேசிய ரீதியில் டெங்குத் தாக்கம் அதிகம் காணப்பட்ட கொழும்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தேசிய டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை, தேசிய ரீதியில் டெங்குத் தாக்கத்தில் இரண்டாவதாக உள்ள யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்படவுள்ளது. எதிர்வரும் 31ஆம் திகதி அரச தலைவரின் செயலாளர் தலைமையில் இது ஆராயப்படும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

குடாநாட்டில் அதிகரிக்கும் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விசேட கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் நிமால்க்கா, தகவல் திணைக்களப் பணிப்பாளர் நிர்மலி, மாவட்ட செயலர் ஆகியோர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட தேசிய டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வது தொடர்பில் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவும், தகவல் திணைக்களமும் இணைந்து முன்னெடுக்கவுள்ளன.

அதற்கு சகல ஊடகங்களும் ஒரே தினத்தில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இலத்திரனியல் மற்றும் தொலைக்காட்சி ஊடகங்கள் நேரடி ஒளிபரப்பை மேற்கொள்ள தகவல் திணைக்களம் ஏற்பாடு மேற்கொள்கின்றது. இந்த விசேட வேலைத் திட்டம் தொடர்பில் எதிர்வரும் 31ஆம் திகதி கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. என்றார். கூட்டத்தில் சுகாதாரத் திணைக்களத்தின் பிரதிநிதி கருத்துத் தெரிவித்தார்.

"அடுத்த முறை வீட்டுத் தரிசிப்பின்போது ஒவ்வொரு வீட்டுக்கும் ஓர் பரிசோதனை அட்டை வழங்கப்படவுள்ளது. அதில் பார்வைக் குறிப்புகள் பதிவு செய்யப்படும். அதை வீட்டு உரிமையாளர்கள் பேணிப் பாதுகாக்க வேண்டும். வீட்டுத் தரிசிப்புகளின்போது அதைக் கண்டிப்பாகக் காட்ட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 14 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 9 பிரிவுகளிலேயே டெங்குத் தொற்று அதிகம் காணப்படுகின்றது." என்று அவர் தெரிவித்தார். (ற-101)



## நல்லிணக்கம் ஏற்படுத்த முழுமையான ஒத்துழைப்பு

### ஐ.நா. அறிக்கையாளரிடம் வடக்கு ஆளுநர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஒக்.14

நல்லிணக்க நகர்வுகளில் வெற்றி பெற முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே. ஐ.நாவுக்கான விசேட அறிக்கையிடும் நிபுணர் பெப்லொ டி கிரீப் தலைமையிலான குழு நேற்று வடக்கு மாகாண ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடியது. அதன்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வடக்கின் முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. காணி விடுவிப்பு விவகாரங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் விரைவில் காணிகளை விடுவிக்கும் நகர்வுகளை முன்னெடுப்பது தொடர்பிலும் வடக்கு ஆளுநரிடம் ஐ.நா. பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர். அரசியல் நிலமைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. நல்லிணக்கத்தை முன்னெடுக்கும் இலங்கை அரசின் பயணத்தில் தாம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கிச் செயற்படுவதுடன் தொடர்ந்தும் தாம் நல்லிணக்க விவகாரங்களை அவதானித்து வருகின்றோம் என்று ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். "நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு பெரும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. புதிய அரசமைப்பு மற்றும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் கையாள எடுத்துவரும் நகர்வுகள் நல்லிணக்கத்தில் பெரும் வெற்றியை உருவாக்கியுள்ளன." என்று வடக்கு ஆளுநர் ஐ.நா. அதிகாரிகளுக்குத் தெரிவித்தார். (ற-31)

## வேப்பமரக் குற்றிகள் மீட்பு

ஓட்டமாவடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வேப்ப மரக் குற்றிகள் மீட்கப்பட்டன என்றும், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்றும் வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நடத்தப்பட்ட தேடுதலில் பழைமைவாய்ந்த 18 வேப்பமரக் குற்றிகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## சைட்டத்துக்கு எதிராக மாணவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக்.14

சைட்டம் மருத்துவக் கல்லூரியைத் தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி தென்கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பல்கலைக் கழக ஒலுவில் வளாகத்துக்கு அருகில் போராட்டம் நடத்தப்பட்டது. சைட்டத்தைத் தடை செய்ய வேண்டும் என்றும், கைது செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மூவரை விடுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். "சைட்டத்தை இரத்துச் செய், மாணவர்களை துன்புறுத்தாதே, மணவர்கள் மீதான அடக்குமுறையை நிறுத்து, கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். (ற-ரி2)

## முன்னாள் எம்.பி. சூசைதாசன் காலமானார்

யாழ்ப்பாணம், ஒக்.14

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் மன்னார் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான பி.ஏ.சூசைதாசன் தனது 84ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

மன்னார், வங்காலையைச் சொந்த இடமாகக் கொண்ட சூசைதாசன் 1977ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் மன்னாரில் போட்டியிட்டு நாடாளுமன்றுக்குத் தெரிவானார். பின்னர் தனிநாட்டுச் சட்ட மூலம் 1983ஆம் ஆண்டு நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டபோது அதைக் கண்டித்து அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகியபோது இவரும் பதவி விலகியிருந்தார்.

1933ஆம் ஆண்டில் பிறந்த இவர் நோய்வாய்ப்பட்டு அனுராதபுரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுக் காலமானார். (ற-101)

## தனித்திருந்த மூதாட்டியை தாக்கி நகைகள் கொள்ளை

நாவற்குழி, ஒக்.14

வீட்டில் தனித்திருந்த மூதாட்டியைத் தாக்கிய திருடர்கள் அவரது கண்களைக் கட்டிவிட்டு அணிந்திருந்த மோதிரங்கள், வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நாவற்குழி, கேரதீவில் நடந்துள்ளது.

அதிகாலை 3.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. தாக்குதலுக்குள்ளான விஜயச்சந்திரன் பத்மலோஜினி (வயது62) சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கணவனை இழந்த இவர் வெளிநாட்டில் உள்ள சகோதரர் ஒருவரின் உதவியுடனே வாழ்ந்து வந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி2,9)

## தப்ப முயன்ற கைதியை பிடிக்க துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஒக்.14

நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்ட கைதியொருவர் தப்பியோட முயன்றபோது சிறைக்காவலர்களால் சூடு நடத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுப் புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

கைதி சிறைச்சாலையிலிருந்து புதுக்கடை நீதிமன்றத்துக்கு வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட வேளையிலேயே நீதிமன்ற வளாகத்தில் வைத்து குறித்த கைதி தப்பிச் செல்ல முயற்சித்துள்ளார்.

சிறைக்காவலர்கள் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு மேற்கொண்டு கைதியை மீண்டும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

## பொது இடத்தில் போதையில் குழப்பம்: 40 மணிநேர சமூகப் பணி

சாவகச்சேரி, ஒக்.14

மதுபோதையில் பொது இடத்தில் குழப்பம் விளைவித்த இருவரை 40 மணித்தியாலங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்துமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார்.

இருவரையும ஆறு மாத காலத்துக்குள் 40 மணித்தியாலயங்கள் சமூகப் பணியில் ஈடுபடுத்த நீதிமன்ற சமுதாயஞ்சார் சீர்திருத்தப் பிரிவில் ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ற-ரி2,9)

## இளைஞர்கள் மூவர் மீது நேற்று மாலை வாள்வெட்டு

### வவுனியாவில் கத்தி, கொட்டன்களுடன் வந்த கும்பல் அட்டகாசம்

வவுனியா, ஒக்.14

வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் வவுனியா நொச்சிக்குளத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் நேற்று மாலை வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வாள், காட்டுக் கத்தி, முள்ளுக் கம்பி சுற்றப்பட்ட கொட்டன் போன்றவற்றுடன் நொச்சிக்குளம் பகுதிக்கு வந்த சுமார் 20 பேர் கொண்ட குழுவினரே இந்த இளைஞர்களை வெட்டிவிட்டுத் தப்பித்துச் சென்றார்கள் என நொச்சிக்குளம் கிராமத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஓமந்தை நொச்சிமோட்டைப் பகுதியில் பாடசாலைக்கு அருகே நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வவுனியா புதியசின்னகுளம் மற்றும் நொச்சி மோட்டைப் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய நிலையிலேயே இந்த வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றதாகவும் கிராமத்தவர்கள் கூறுகின்றனர்.

நொச்சிக்குளத்துக்கு நேற்று வந்த குழுவினர் அங்குள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நின்றவர்கள் மீது திடீரென சரமாரியாகத் தாக்கத் தொடங்கினர். கடையில் நின்ற ஒருவரை முதன்மைச் சாலைக்கு இழுத்து வாளால் வெட்டினர். இதனால் அவர் தலை மற்றும் தோள் பகுதியில் பலத்த காயமடைந்தார். அவருடன் மேலும் இருவர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

சம்பவத்தில் மயூரன் (வயது 29), நிதர்சன் (வயது 22), சங்கீதன் (வயது 38) ஆகியோர் காயமடைந்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாள், காட்டுக்கத்தி, முள்ளுக்கம்பி சுற்றப்பட்ட கொட்டன்கள், கத்திகள் என்பவற்றை மீட்டனர். விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (உ-21)

# 500 அத்தியாவசியப் பொருள்களுக்கு பண்டிகைக் காலத்து விலைக்குறைப்பு

## அமைச்சர் ரிசாத் அறிவிப்பு

பண்டிகைக் காலத்தில் 500 அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைகளை குறைத்து லங்கா ச.தொ.ச.வில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதி வரை விலைக்கழிவும் நடைமுறையில் இருக்கும். இவ்வாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும், தொடருந்து நிலையங்களிலும், அரச நிறுவனங்களிலும் முடியுமான வரை ச.தொ.ச விற்பனைக் கிளைகளை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் குறித்து உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தனவுடன் பேச்சு நடத்தியிருக்கிறோம்.

லங்கா ச.தொ.சவில் ஒரு கிலோ அரிசி 74 ரூபாவுக்கு விற்பனை செய்யவும், நாட்டின் 25 மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்படவுள்ள மொத்த வியாபார நிலையங்களில் 74 ரூபாக்கு ஒரு கிலோ அரிசியை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் அரிசியையும், உள்நாட்டு அரிசியையும் கலந்து விற்பனை செய்யும் மோசடிகள் இடம்பெறுகின்றது. அவற்றைத் தவிர்க்கும் வகையில் அரிசிக்கான ஆகக் கூடிய உச்ச சில்லறை விலையை நீக்குமாறும் மொத்த வியாபாரிகள் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்தே உச்ச சில்லறை விலை நீக்கப்பட்டது. சந்தையில் அரிசியின் விலையை கண்டபடியும், மனம்போன போக்கிலும் எழுந்தமானமாக வியாபாரிகள் விற்கத் தொடங்கியுள்ளனர்.

இந்த அநியாயம் குறித்து மொத்த வியாபாரிகளை அழைத்து நாம் பேச்சு நடத்தியிருக்கின்றோம் - என்றார். (5,31)

# வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எப்போதுமே சு.க. ஆதரவளிக்காது

## அந்தக் கட்சியின் இளைஞர் முன்னணி தலைவர் சாந்த பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14

வடக்கு - கிழக்கு இணைந்து செயற்படும் அதிகாரம் வழங்குவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் ஆதரவளிக்காது. இவ்வாறு அந்தக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சாந்த பண்டார தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இளைஞர் முன்னணி கட்சித் தலைமையகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்கால அறிக்கையைப் பலரும் தங்கள் சுயநல அரசியலுக்காகப் பயன்படுத்திப் பொய் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டை பிளவுபடுத்த ஒருபோதும் இடமளிக்கமாட்டார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை.

அரசியல் காரணமாக நாடு பலவற்றை இழந்துள்ளது. அரசியல் கட்சிகள் அதிகாரத்தை அடைந்து கொள்வதற்காக. ஆளும் கட்சி கொண்டுவரும் நல்ல திட்டங்களை எதிர்க்கட்சி எதிர்த்துத் தடையாக இருந்து வந்துள்ளது.

நாட்டின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பண்டாரநாயக்க மற்றும் செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஐக்கிய தேசிய கட்சி உள்பட சில அமைப்புகள் குழப்பி இல்லாமலாக்கின. டட்லி மற்றும் செல்வநாயகம் ஒப்பந்தத்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்பட பல அமைப்புகள் இணைந்து பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்ட திட்டத்தை இல்லாமலாக்கின. இதன் பிரதிபலனாகவே நாட்டில் போர் ஏற்பட்டு லட்சக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டன.

நாட்டின் அனைத்துப் பிரதேச மக்களுக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடிய புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். முக்கிய பல விடயங்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் இடைக்கால அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

சிலர் வடக்கு - கிழக்கு இணைக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளனர்., அவ்வாறு இணைவது பொருத்தம் இல்லையென்றே நாங்கள் தெரிவிக்கின்றோம். வடக்கு கிழக்கு இணைந்தால் எதிர்காலத்தில் தெற்கில் இருக்கும் மாகாண சபைகள் இணைந்து செயற்பட தீர்மானித்தால் நாடு மோசமான நிலைக்குச் செல்லும் அபாயம் ஏற்படும். எந்த மாகாணமும் இணைந்து செயற்படும் அதிகாரம் வழங்குவதற்கு சிறிலங்கா சுதந்திர கட்சி ஒருபோதும் ஆதரவளிக்கப்போவதில்லை - என்றார். (5,31)

# போராட்டக்காரர்களை தாக்குதல்கள் மூலம் தடுப்பதில் தவறில்லை

## அமைச்சர் பொன்சேகா கூறுகிறார்



கொழும்பு, ஒக். 14

சட்டத்தை மீறிச் செயற்படும் ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்குதல் மூலமாகத் தடுப்பது ஒரு போதும் தவறாகாது. இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும் அமைச்சருமான சரத்பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை மீட்டெடுக்கத் தேசிய சொத்துக்களை விற்பதாகக் கூறுவது பொய்யான குற்றச்சாட்டாகும். நாம் எமது வளங்களை நீண்டகால குத்தகைக்கு விடுவதன் மூலமாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். இதனைத் தடுக்கவே சிலர் கூச்சலிட்டு வருகின்றனர்.

முன்னைய ஆட்சியைப் போன்று ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் போது துப்பாக்கிச்சூடு நடத்தி அதனைக் கட்டுப்படுத்தவில்லை. இன்றும் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. சட்டத்தை மீறிச் செயற்படும் போது நிலவரங்களை கட்டுப்படுத்த பொலிஸார் தாக்குதல் நடத்துகின்றனர். இது ஒருபோதும் தவறில்லை. ஆர்ப்பாட்டத்தை நடத்தக் கூடாது என்ற நீதிமன்ற கட்டளை இருந்த போதிலும் அதனை மீறி காட்டுமிராண்டித்தனமாக செயற்பட்டால் பொலிஸார் தடியடி தாக்குதலை நடத்தி நிலமைகளை கட்டுப்படுத்தினர். இதில் எந்தத் தவறும் இல்லை - என்றார். (5,31)

## கொழும்பு அரசின்

# திட்டங்களை மாகாணங்கள் நடைமுறைப்படுத்தவேண்டும்

## தலைமை அமைச்சர் ரணில் கண்டிப்பான உத்தரவு

கொழும்பு அரசின் செயற்றிட்டங்களை மாகாண அரசு கட்டாயம் நடைமுறைப்படுத்தியேயாக வேண்டும் என்று தெரிவித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரச ஊழியர்கள் மக்களுக்குச் சேவை செய்யமுடிந்தால் பதவியிலிருங்கள். இல்லாவிடின் பதவிவிலகல் கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிடுங்கள் என்றும் காட்டமாகக் குறிப்பிட்டார்.

மாத்தறை மாவட்டத்தின் மொரவக பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி வழங்கல் செயற்றிட்டத்தின் தற்போதைய நிலவரம் குறித்து அரச ஊழியர்களுடனான கலந்தாய்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை அரசு வழங்குவதில் பின்நிற்கவில்லை. மக்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கு அரசால் உரிய நிதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான அரசின் கடன் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டுள்ளன. அரசின் ஒதுக்கீடுகள் உரிய முறையில் மக்களைச் சென்றடையவில்லை. இடர் உதவிகள் உரிய முறையில் சென்றடையாமல் இருப்பதற்கு அரச ஊழியர்களே காரணமாகும். மக்களுக்குச் சேவை செய்வதற்கே அரச ஊழியர்கள் உள்ளனர். உங்களால் மக்களுக்கு சேவை செய்ய முடியுமாயின் பதவியில் இருங்கள். இல்லையேல் பதவி விலகல் கடிதத்தை வழங்கிச் செல்லுங்கள். உங்களால் முடியாவிட்டால் வேறு தரப்பினரை பணிக்கு அமர்த்தி எங்களால் செய்ய முடியும். அரசின் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவே அரச ஊழியர்கள் உள்ளனர்.

அரச ஊழியர்களின் அசமந்தப் போக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டுப் பணத்தை உலங்குவானூர்தி மூலம் மேல் இருந்து வீச வேண்டியுள்ளது. அரச ஊழியர்களுக்கு நவம்பர் மாதம் வரையும் காலக்கெடு வழங்குகின்றேன் என்றார்.

'கொழும்பு அரசின் செயற்பாடுகளுக்கு மாகாண அரசுகள் தடையாக இருக்கின்றது' என்று அரச ஊழியர்கள் தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு அரசின் செயற்றிட்டங்களை மாகாண அரசு நடைமுறைப்படுத்தியே தீரவேண்டும். இது குறித்து தென் மாகாணத்தின் ஆளுநருடன் பேசுகின்றேன் - என்றார். (5,31)

## தொடர்ச்சிகள்....

### வவுனியாவிலும்...

களின் உறவினர்கள் இந்த உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்தினர். வவுனியா கந்தசுவாமி கோயில் முன்றிலில்,போராட்டம் ஆரம்பமானது. விசேட வழிபாடுகளும் நடத்தப்பட்டன. மு.ப. 10 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எந்தவித விசாரணைகளும் இன்றி நீண்ட காலமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை வெளிப்படுத்த வேண்டும் என்று கோரி அவர்கள் வவுனியாவில் 233 நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவேண் டும் என்று வேண்டி நேற்று வவுனியாவில் சிறப்புப் பூசை வழிபாடுகளும் நடைபெற்றன.

குட்செட் வீதியிலுள்ள கருமாரி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூசைகள் நடத்தப்பட்டன.

மாவட்ட அந்தணர் ஒன்றியம், தமிழ் விருட்சம் அமைப்பினர் இணைந்து இதனை ஏற்பாடு செய்தனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வட மாகாண சபை உறுப்பினர் ம. தியாகராசா ஆகியோருடன் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற)

### மைத்திரிக்கு...

லும் பாதைகளில் அவருக்குக் கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பில் ஈடுபடுவோம்" என்று அவர்கள் தெரிவித்தனர்.

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும், அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கை வவுனியாவுக்கு மீள இடமாற்றுமாறு கோரியும் வடக்கு மாகாணத்தில் நேற்று முழு அடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமும் நடத்தப்பட்டிருந்தது.

போராட்டத்தின் முடிவில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனர்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கைக்கு தீர்வு என்பவற்றை முன்வைக்காமல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இங்கு வரமுடியாது.

அவர் நாளை(இன்று) நிகழ்வுகளில் பங்கேற்பதற்கு யாழ்ப்பாணத்துக்கு வந்தால், அவர் வருகின்ற பாதைகள் மறிக்கப்படும். அவருக்கு எதிராக கறுப்புக் கொடிப் போராட்டம் நடத்தப்படும். இதற்காக இன்று காலை 9 மணிக்கு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக பொதுமக்களை அணி திரளுமாறு கோரிக்கை விடுத்தனர். (உ-5,101)

### பாதுகாப்பு...

களில் அரச தலைவா மைத்திரிபால வந்து சென்றபோது காணப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை விட பன்மடங்கு அதிகரித்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்கேற்க இன்று வருகை தருகிறார். அரச தலைவரின் இன்றைய பயணத்துக்கு எதிர்ப்பு வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆயுதம் ஏந்திய பொலிஸார், சிறப்பு அதிரடிப்படையினர், பீல் பைக் அதிரடிப் படையினர் எனப் பாதுகாப்புத் தரப்பினர் குவிக்கப்பட்டுள்ளனர். அரச தலைவர் பயணம் செய்யவுள்ளதாக திட்டமிட்டுள்ள வீதிகளின் பாதுகாப்புக்கு இரு மருங்கிலும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரும், பொலிஸாரும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் இன்றைய பயண நிகழ்ச்சி நிரல் இறுதி நேரத்தில் மாற்றியமையக்கூடிய சூழ்நிலை இருப்பதாகவும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ-5)

### கிளிநொச்சியிலும்...

கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

மதத்தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் தலைவர்கள், பொது மக்கள் எனப் பல தரப்பினரும் போராட்டத்தில் பங்குகொண்டனர்.

அரசியல் கைதிகள் தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று அரச தலைவருக்கு அனுப்பப்படுவதற்காக கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மனு உரிய தரப்பினரிடம் கையளிக்கப்படும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ற-ரி4,35)

# இன்றைய தேசிய தமிழ்த்தின விழாவை அனைவரும் புறக்கணிக்க வேண்டும்

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு அனைவரையும் கோருகிறது

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெறும் தேசிய தமிழ்த் மொழித் தினவிழாவை அனைவரும் புறக்கணிக்க வேண்டும் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்புக் கோரியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

தமிழையும் தமிழர் வாழ்வையும் தமிழர் கலாசாரத்தையும் உயிரினும் மேலாகப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்க வேண்டிய பொறுப்பு நிகழ்கால ஒவ்வொரு தமிழருக்கும் உண்டு. அடுத்த சந்ததி வாழ்வதற்கான நிலம் இருந்தால் மட்டுமே எமது பொறுப்பை நிறைவேற்ற முடியும். வாழ்வுக்கான நில மீட்பு, நிலப் பாதுகாப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களான அரசியல் கைதிகள் நியாயமான கோரிக்கையை முன் வைத்து 20 நாள்களாக உணவு ஒறுப்பில் இருக்கையில், விடுதலை இன்றி சிறையில் வாடிக் கொண்டிருக்கையில் தமிழ் மண்ணில் தமிழ்த்தின விழா நடத்துவதும் அதில் பங்குபற்றுவதும் நாம் எம்மையே அவமானப்படுத்துவதாக அமையும் என்று நாம் கருதுகிறோம். கைதிகளின் கோரிக்கையை நிறைவேற்று மாறும், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனை இன்றி விடுவிக்கக் கோரியும் ஒருவார காலமாக பல்வேறு போராட்டங்களும் நிகழ்ந்திருக்கையில் அதனை அவமதிக்கும் செயலாக தமிழ்த்தின விழாவில் பங்கேற்பதை ஏற்றுக்கொள்ளவோ அங்கீகரிக்கவோ முடியாது. தன்மானத் தமிழர்கள் பரம்பரையில் வந்தவர்கள் நாம் என்பதை நிரூபிக்க தமிழ்த்தின விழாவில் பங்கு கொள்ளாது உணவு ஒறுப்புக் கைதிகளின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிப்பதோடு அனைத்து கைதிகளின் விடுதலைக்கான செயற்பாடுகளில் எங்களை இணைத்துக் கொண்டு தமிழரின் அரசியல் அபிலாசையை நிறைவேற்றும் சமூகமாகி தமிழர் வாழ்வை விழாவாக்கு மாறு வடக்கு கிழக்கு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழ்த்தின விழாவைப் புறக்கணிப்போம். தந்தை செல்வாவின் 'இனித் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" எனும் கூற்றினை தியானிப்போம். அதுவே அடுத்த கட்ட சமூக நீதிக்கான செயற்பாட்டுக்கும் அரசியல் நகர்வுக்கும் எமை வழி நடத்தும் - என்றுள்ளது. (4)

## இணக்க சபை இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.14

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இயங்கிவரும் கரவெட்டி இணக்க சபை இடமாற்றப்பட்டுள்ளது.

ஜி.சி.ஈ உயர்தர பொது தகவல் தொழில்நுட்ப பரீட்சை காரணமாக இவ்வாறு இடம் மாற்றப்படுகிறது.

நாளை ஞாயிற்றுக்கிழமை மட்டும் நெல்லியடி கொடிகாமம் சாலையிலுள்ள திரு இருதயக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக் கட்டடத்தில் இணக்க சபை இயங்கும் எனத் தவிசாளர் சி. நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (ய-35)

## லயன்ஸ் கழக பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.14

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவர் பொதுக்கூட்டம் நெல்லியடி, கொடிகாமம் சாலையில் தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகாமையில் அமைந்துள்ள "நம்பிக்கை ஒளி" எனும் இல்லதில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும்.

கூட்டத்துக்குத் தலைவர் லயன் சி.சிவரஞ்சன் தலைமை தாங்குவார். முதன்மை விருந்தினராக பிராந்தியத் தலைவர் (பிராந்தியம்-12) லயன் பி.தினேஸ்குமார் கலந்துகொள்ளவுள்ளார். (ய-35)

## யாழ்ப்பாணத்துக்கு மேலதிகமாக அரிசி

யாழ்ப்பாண மாவட்டத்தில் வறட்சி உதவிப் பொருள்கள் வழங்குவதற்கு மேலதிகமாக 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோ அரிசி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்தார். வறட்சியால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மக்களுக்கு இடர் முகாமைத்துவ அமைச்சின் ஊடாக முதலாம் கட்ட உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. தற்போது இரண்டாம் கட்டமும் வழங்கப்படுகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக மக்களுக்கு விநியோகிப்பதற்காக 2 லட்சத்து 50 ஆயிரம் கிலோகிராம் அரிசியும் கிடைக்கப் பெற்றது. அவற்றையும் பகிர்ந்தளித்துள்ளோம். மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் மக்களில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இவை பகிர்ந்தளிக்கப்பட்டன - என்றார். (ய-101)


## ஆனைக்கோட்டை சாலை சீரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14

ஆனைக்கோட்டை பழைய பொலிஸ் நிலைய சாலை சீரமைக்கப்பட்டு வருகின்றது. மேற்படி சாலையின் சீரமைப்பு வேலைகள் இடையில் நிறுத்தப்பட்டிருந்தன. மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகி இருந்தனர்.

சாலையின் நிலை தொடர்பில் வலி. தென்மேற்கு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் கணேசவேல் பிரதேசசபை செயலாளருக்குத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து 55 இலட்சம் ஒதுக்கப்பட்டு சீரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. (ய-115)



அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய மாணவர்களின் கணித விஞ்ஞான பாட ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் நிகழ்வு வித்தியாலய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
வித்தியாலய அதிபர் நா.இராதாகிருஷ்ணன் காட்சிக்கூட மண்டபத்தைத் திறந்து வைத்தார்.
காட்சிப்படுத்தலை மாணவர்களும் பெற்றோர்களும் பார்வையிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (9)

## மானிப்பாயில் வீடு மீது பெற்றோல் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஒக். 14

மானிப்பாயில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்றிரவு 7.30 மணியளவில் சிலர் பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தினர். வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் கீழ் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட இளைஞரின் வீடு மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற மானிப்பாய்ப் பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். எனினும் தாக்குதலாளிகள் தப்பிச் சென்றுவிட்டனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை நேற்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். வழக்கை விசாரணை செய்த நீதிவான் குறித்த இளைஞரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (உ-21,103)

## பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலையில் கண்காட்சி

யாழ்ப்பணம், ஒக்.14

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையின் கல்விக் கண்காட்சி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.



அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வு க்கு சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நொபேட் உதயகுமார் முதன்மைவிருந்தினராக் கலந்துகொண்டார்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கைவண்ணத்தால் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

அனைத்து மாணவர்களும் ஆக்கங்களை வழங்கியிருந்தனர். குறிப்பாக, கணித, விஞ்ஞான செயன்முறைகளும் அதற்கான விளக்கங்களும் காணப்பட்டன. வலிகாமம் கல்விவலய விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி நேசராணி தனபாலசிங்கம், தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி சுகுணா சண்முகேந்திரன், பொன்னாலை கிராம சேவையாளர் ப.தீசன், வேள்ட் விஷன் திட்ட வளவாளர் வென்சஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ய)

## நீதிமன்றுக்குச் சென்றிருந்தவர்களே இடைவேளையின்போது வெட்டினர்

### சாவகச்சேரி வாள்வெட்டுத் தொடர்பில் சிசிரிவியை வைத்து பொலிஸார் குற்றச்சாட்டு

சாவகச்சேரி ஒக். 14

சாவகச்சேரி நீதிமன்ற வழக்குக்குச் சென்றிருந்த மூவர் நீதிமன்ற இடைவேளை நேரத்தில் நீதிமன்றிலிருந்து வெளியேறி நுணாவிலில் ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு மீண்டும் நீதி மன்றுக்குச் சென்றுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

தலை மற்றும் கையில் வெட்டுக்காயங்களுக்கு இலக்கான நுணாவில் மேற்கைச் சேர்ந்த அ. அபுதன் (வயது - 27) சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். குறித்த மூவரும் ஏற்கனவே குற்றச்செயல் சம்பந்தமான வழக்கில் உள்ளனர் என்று கூறப்படுகிறது. அந்த வழக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. குறித்த வழக்கு தாமதமாக விசாரணைக்கு எடுப்பதாகக்கூறப்பட்டது. அந்த இடைவேளை நேரத்திலேயே குறித்த மூவரும் மோட்டார் சைக்கிளில் சென்று நுணாவில் மத்தியில் உள்ள மின்வாயு ஒட்டு நிலைய உரிமையாளரை கூரிய ஆயுதத்தால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு மீண்டும் நீதிமன்றுக்கு வந்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அவர்கள் நுணாவில் மேற்கு மற்றும் மட்டுவில் வடக்கைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் உள்ள வாகனங்கள் கழுவும் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த இரகசியக் கண்காணிப்புக் கமராவைப் பரிசோதித்தபோது தலைக்கவசம் அணிந்த நிலையில் மூவரும் சம்பவ இடத்தில் நின்றமை பதிவாகியுள்ளது.

அவர்களைக் கைது செய்து பொது இடத்தில் சட்டவிரோதமாக கூட்டம் கூடியதுடன் வர்த்தகரை வெட்டிக் காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அவர்கள் பொலிஸாரால் நீதிமன்றில் நேற்று முற்ப டுத்தப்பட்ட னர். விசாரணை நடத்திய நீதிவான் மூவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (4 - 9)

## மட்டுவில் பகுதியில் உரமானியப் பதிவு

தென்மராட்சி, ஒக் 14

மட்டுவில் பிரதேச விவசாயிகளுக்கான உரமானியப் பதிவுகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை மு.ப.9 தொடக்கம் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய அன்னசத்திரத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள் ளது. மட்டுவில் கிழக்கு, வடக்கு, சரசாலை தெற்கு கமக்கார அமைப்புகளின் உறுப்பினர்களுக்கான பதிவுகளே இடம்பெறும்.

கடந்த காலபோக நெற்செய்கையின் போது பதிவுசெய்தவர்கள் தமது தேசிய அடையாள அட்டை மற்றும் உரமானிய பணம் பெற்ற வங்கிக் கணக்குப் புத்தகத்தைக் கொண்டுவர வேண்டும். புதிதாகப் பதிவுசெய்பவர்கள் தேசிய அடையாள அட்டையுடன், அதன் புகைப்படப் பிரதிகள் இரண்டையும், வங்கிக் கணக்குப் புத்தகம் , அதன் பிரதி, சிறிய அளவிலான புகைப்படமும் கொண்டு வர வேண்டும் என மட்டுவில் வடக்கு கமக்கார அமைப்பின் தலைவர் க.சண்முக சுந்தரம் அறிவித்துள்ளார். (ய-9)

# புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

***இணுவில் இந்துக்கல்லூரி***

ப.கோகிலநர்த்தகா -177, கு.கோகுலன் - 158

***இமையாணன் அ.த.க.வித்தியாலயம் வல்வெட்டித்துறை***

பாக்கியநாதன் ஆர்வலன்169, உதயசேகர் ஆருகன்- 163, பவானந்தன் தமிழ்சுடர் - 161

***கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்***

அ.பாமகன்-183, எஸ்.அபிலாஸ்-180, க.தேனுப்பிரியன் -177, இ.காரு ஜா176,
வி.வருணியா174, ய.யசிந்தன்-173, அ.மேலவன்-173,
ம.அபிலாசினி-171, கோ.நாவிலினியன் -167 ,ந.நித்திலன் -169, க.அனுரேகா-166 ,சு.டினோஜா-164, பி.பிரியந்தன் -165 , அ.சரண்யா-163 , த.தருணிகா-163, ஜெ.ஆர்த்திகா-162 ,பு.வித்தியாபாரதி-160 ,த.மகீசன்-157 ,சு.கஸ்ரவர்தனன்-172

***யாழ்ப்பாணம் வயாவிளான் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம்***

ச. மதுசாயினி - 179, சே. வினோஸ் - 177, கி.றியாஸ்மன் - 177
ம.பானுஜன் - 175, சு. சாளிரான் 171, சி.திஸானி - 166, அ.அகியூத் - 164
க.இலக்கியா - 163, ஆ.பிரமிகா - 162, பி.மானசி - 156, ந.பவிசனா - 156, ம.அபிஸேக்- 156

# யாழ். குருநகரின் 11 இடங்களில் மலேரியா நுளம்பு கண்டறிவு

## நேற்றைய கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம் குடாநாட்டின் தொடருந்து நிலையத்தை அண்டிய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மலேரியாவைப் பரப்பக்கூடிய நுளம்பு குருநகர்ப் பகுதிகளில் உள்ள 11 இடங்களிலும் இனங்காணப்பட்டுள்ளதாகச் சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கின் அதிக இடங்களில் தொடர்ந்தும் மலேரியா நோயைப் பரப்பக்கூடிய இந்திய நுளம்புகள் கண்டுபிடிக்கப்படுவதாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மன்னார், வவுனியா என்று தற்போது யாழ்ப்பாணத்தில் அதிக இடங்களில் தொடர்ச்சியாக இந்த வகை நுளம்புகள் இனங்காணப்படுகின்றன. இவ்வாறு மலேரியா நோயைப் பரப்பும் நுளம்பு இனம் ஒன்று முதலில் கடந்த ஆண்டு டிசம்பரில் மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டது.

அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட நுளம்பு இனம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு ஆய்வுகள் மேற்கொண்டு அவை மலேரியாவைப் பரப்பக்கூடிய வகையான இந்தியாவில் அதிகமாகக் காணப்படும் நுளம்பு இனம் என்பது உறுதி செய்யப்பட்டது. இதனையடுத்து இந்த வகை நுளம்புகள் வவுனியாவின் இரண்டு இடங்களில் கண்டறியப்பட்டன. அதன் பின்னர் தற்போது யாழ்ப்பாணத்திலும் தொடர்ச்சியாக இனங்காணப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதன் பிரகாரம் யாழ்ப்பாணம் தொடருந்து நிலையத்துக்கு அருகாமை, அத்தியடிப் பகுதிகளில் கடந்த திங்கட்கிழமை இனங்காணப்பட்டது. நேற்று முன்தினம் குருநகரில் உள்ள 8 பாவனைக் கிணறுகளிலும் இரு பாவனையற்ற கிணறுகளிலும் தண்ணீர்க் குழி ஒன்றிலும் இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (4-101)

# பரிசளிப்பு விழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாண கொழும்புத்துத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று நடைபெறவுள்ளது. மு.ப 9 மணியளவில் பாடசாலையிலுள்ள யோகர் சுவாமி மண்டபத்தில் இடம்பெறும். இந்த நிகழ்வு பாடசாலையின் அதிபர் கே.தேவகீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் என்.விந்தன் கனகரட்ணம், சிறப்பு விருந்தினராக பிரதேச சபை உத்தியோகத்தர் எஸ்.தேவகுமரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் என்று பாடசாலைச் சமூகம் தெரிவித்தது. (4)

++++++++++++++++++++++++++

காரைநகர், ஒக். 14

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி முதன்மை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி தலைமையில் இடம்பெறும் இந்த விழாவுக்கு முதன்மை விருந்தினராக இலங்கை மத்திய கல்வியமைச்சின் செயற்றிட்டப் பணிப்பாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான க.பத்மானந்தன் கலந்துகொள்ள உள்ளார். (4-250)

++++++++++++++++++++++++++

யாழ்ப்பாணம், ஊரெழு கே.எம்.ஐ கல்வி நிறுவனத்தின் பரிசளிப்பு விழாவும், கலைநிகழ்வுகளும் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2மணிக்கு கல்வி நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கே.எம்.ஐ கல்வி நிலையம் ஆகியவற்றின் ஆசிரியர் மு.கயூகரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (உடற் கல்வி) பிரதீபா கிருஸ்ணபிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் அறிவிக்கப்பட்டது. (21)

# தேசிய தமிழ்த்தின விழாவில் 8 ஊடகவியலாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

தேசிய தமிழ்த்தின விழாவில் வடக்கின் மூத்த ஊடகவியலாளர்கள் சிலர் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த விழா யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இன்றும் நாளையும் இடம்பெறுகிறது.

குறித்த கௌரவிப்புக்காக பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட போது 26 ஊடகவியலாளர்கள் மட்டும் விண்ணப்பித்திருந்தனர் என்றும் அவ்வாறு விண்ணப்பித்தவர்களில் 8 ஊடகவியலாளர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வடக்கில் தமிழ்நேசன், மாணிக்கவாசகம், வாமதேவன, தில்லைநாதன், திருச் செல்வம், லாபீர் , கூஜ்சே மற்றும் அரசரட்னம் ஆகிய ஊடகவியலாளர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4-101)

# இருவர் மறியலில்

தென்மராட்சி, ஒக்.14

அனுமதிப் பத்திரமின்றி சிறியரக உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றிச்சென்ற இரு சாரதிகளை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. மந்துவில் பகுதியைச் சேர்ந்த இருவரே மறியலில் வைக்கப்பட்டனர்.

கொடிகாமம் பொலிஸாரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி (27.10) வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ய-9)

# பெண்ணை தாக்கியவருக்கு மறியல்

தென்மராட்சி, ஒக்.14

அயல் வீட்டுப் பெண்ணை கண்ணாடிப் போத்தலால் தாக்கிக் காயப்படுத்திய அல்லாரை தெற்கு வாசியை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை நீதிவான் விசாரித்தார். சந்தேகநபரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ய-9)

# ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணம் புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணியளவில் இடம்பெறும்.

பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்குப் பாடசாலைப் பழைய மாணவர்கள் அனைவரையும் வருகை தருமாறு பாடசாலை அதிபர் ஜெ.அ.தவநாயகம் கேட்டுள்ளார். (4)

# யாழ். நகர புதிய சிற்றங்காடியில் வியாபாரம் போதவில்லை

## தீபாவளிக்காக நாளை கடை திறந்திருக்கும் என்று அங்குள்ள வியாபாரிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாண நகரில் மாநகர சபையினால் புதிதாக அமைத்து கொடுக்கப்பட்ட சிற்றங்காடியில் ஆடைகள் கொள்வனவு செய்வதற்கு பொது மக்கள் இன்னும் அக்கறை கொள்ளவில்லை என்று வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

புதிய இடம் என்பதால் பொதுமக்கள் அதனைஅறிந்திருக்கவில்லையோ தெரியாது. எனினும் தீபாவளியை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமையும் அங்காடியில் உள்ள கடைகள் திறந்திருக்கும் என்றும் வியாபாரிகள் கூறினர்.

யாழ்ப்பாணம் முனீஸ்வரர் வீதியில் இயங்கிய நடைபாதை வியாபாரக் கடைகள் மூடப்பட்டு அவை யாழ்ப்பாண மையப் பேருந்து நிலையத்துக்கும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கும் இடைப்பட்ட பகுதியில் கடந்த மாதம் புதிதாக அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது இந்த நிலையிலேயே வியாபாரிகள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இம்மாதம் தீபாவளி பண்டிகை என்பதால் மக்கள் கூட்டத்தினரை எதிர்பார்த்தோம். ஆனால் இன்னும் அதிகரித்ததொகையைக் காணவில்லை. கடந்த வருடம் நாங்கள் கடைகளை வைத்திருந்த இடத்தில் இதே காலத்தில் சமாளிக்க முடியாத அளவுக்கு மக்கள் கூட்டமாகத் திரண்டனர். இம்முறை புதிதாக அமைக்கப்பட்டமையால் இந்தக் கடையை மக்கள் பெரும்பாலும் அறிந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறோம்.

வாடகை செலுத்திக் கடைகளைப் பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் தீபாவளி வியாபாரத்தை நம்பி அதிக தொகையை முதலீடாக இட்டு ஆடைகளையும் கொள்வனவு செய்துள்ளோம் - என்றனர். (4)

# முற்றிலும் இலவசமான தொழிற் கற்கைக்கு பதிவு செய்ய அழைப்பு


யாழ்ப்பாணம், ஒக். 14

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது தற்கால வேலை வாய்ப்புக்கான கற்கைநெறிகளை எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கவுள்ளது. இந்தப் பயிற்சி நெறி முற்றிலும் இலவசமாக நடத்தப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணம், காரைநகர், கைதடி, பண்டத்தரிப்பு, சுன்னாகம், மற்றும் பருத்தித்துறை ஆகிய இடங்களில் பயிற்சி நெறிகள் தொடங்கப்படவுள்ளன.

இவை மூன்று, ஆறு மற்றும் ஒரு வருடம் பயிற்சிக் காலத்தைக் கொண்டவை. இந்தக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை (என்.வி.கியூ) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும். இந்தக் கற்கைநெறிகளை முழுமையாகப் பூர்த்தி செய்து (என்.வி.கியூ) சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளும் அனைவருக்குமான தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

கற்கைநெறிகளைக் கற்க விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம் இல 12. கே.கே.எஸ் சாலை யாழ்ப்பாணம் (021 222 7949) அல்லது அந்தந்த தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார். (4)





# இது புதுசு

பெண்களுக்கான கைக்கடிகார வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## சுதேச வைத்தியத்தை நாடும் மக்கள் எண்ணிக்கை உயர்வு

யாழ்ப்பாணம்.ஒக்.14
வடக்கு மாகாணத்தில் சுதேச வைத்திய நிலையங்களில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை வருடம்தோறும் அதிகரித்து வருவதாக மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதன்மூலம் மேலும் தெரிய வருவதாவது:

வடக்கில் 5 மாவட்ட வைத்தியசாலைகள், 8 கிராமப்புற வைத்தியசாலைகள், 18 நடுத்தர மருந்தகங்கள், 34 சமூக மருத்துவ அலகுகள், 62 இலவச மருந்தகங்கள் உள்பட 127 நிலையங்கள் உள்ளன. இவற்றில் பயன்பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணமுள்ளது.

2013இல் 4லட்சத்து 50ஆயிரம், 2014இல் 5லட்சம், 2015இல் 5லட்சத்து 99 ஆயிரம், 2016இல் 6 இலட்சத்து 74ஆயிரம் நோயாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

நடப்பு வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 7லட்சம் பேர்வரை பயன்பெற்றுள்ளனர். இவர்களில் அதிகமானோர் வெளிநோயாளர் பிரிவுகளிலும், நடமாடும் சேவைகளிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவ்வாறான மருத்துவ சேவைகளுக்கு 35 மில்லியன் ரூபா வரையில் கடந்த வருடம் செலவிடப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகின்றது. (ய-ரி)



## விவசாயத்தை இலகுபடுத்தும் நவீன இயந்திரங்கள் 5 அறிமுகம்



யாழ்ப்பாணம், ஒக்.14
வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகளின் நன்மை கருதி இதுவரை 5 நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் அதிகமாக உள்ளனர். அவர்களின் விவசாய முறையை இலகுவாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

மாவட்டத்தில் உள்ள 5 விவசாயப் பயிற்சி நிலையங்களின் மூலம் விவசாயத்தை இலகுவாக்கும் கருவிகளை அறிமுகம் செய்துவருகிறோம். அதற்கான பயிற்சிகளையும் வழங்குகின்றோம்.

இதனால் அதிகளவு மனித சக்தியைப் பயன்படுத்திச் செய்யப்படும் வேலைகள் இலகுவாக்கப்படுகின்றன. நடப்புவருடத்தில் சில இயந்திரங்களை அறிமுகப்படுத்தியிருந்தோம். சூரிய ஒளியில் செயற்படும் நீர் இறைக்கும் இயந்திரம், தானியங்களை விதைக்கும் இயந்திரம் மற்றும் சிறு தானியங்களை அறுவடை செய்யும் இயந்திரம் போன்ற 5 வகையான நவீன இயந்திரங்களை அறிமுகப் படுத் தியுள்ளோம். இவற்றை முதன் முறையாக மானிய விலையில் விவசாயி களுக்கு வழங்கவுள்ளோம் - என்றார். (ய-

## கசிப்புடன் கைதான இரண்டு பேருக்கு 8000 ரூபா தண்டம்

கிளிநொச்சி, ஒக்.14
கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இருவருக்கு 8ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

இவர்கள் மாவட்ட மதுவரி திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றையதினம் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். 180 மில்லி லீற்றர் கசிப்பை தன்வசம் வைத்திருந்த நபருக்கு 3ஆயிரம் ரூபாவும், 200 மில்லி லீற்றர் கசிப்பை வைத்திருந்தவருக்க 5ஆயிரம் ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டது. (ய-6)

## மதுபோதையில் வாகனம் ஓட்டியவருக்கு ரூ.12000 தண்டம்

கிளிநொச்சி, ஒக்.14
சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு 12ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

பளைப் பகுதியில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 12ஆயிரம் ரூபா தண்டமும், 7 நாட்கள் சமூக சேவையும் விதிக்கப்பட்டது. (ய-6)

## கசிப்புக் குற்றம்: 5000 ரூபா தண்டம்

கிளிநொச்சி, ஒக்.14
ஒருபோத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபருக்கு 5ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபர் நேற்றைய தினம் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டடார். 5ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ய-6)

## முறையற்ற சாரத்தியம்: இருவருக்கு 3000 ரூபா தண்டம்

கிளிநொச்சி, ஒக்.14
பிரேக் லைற் இன்றி வாகனம் செலுத்திய சாரதிகள் இருவருக்கு 3ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சி மற்றும் தருமபுரத்தைச் சேர்ந்த இவர்கள் நேற்றைய தினம் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 1500 ரூபா தண்டம் விதிக்கப் பட்டது. (ய-6)

## பெரிய உற்பத்தித் தொழிற்சாலைகளை பார்வையிடும் வாய்ப்பு பயிற்சியாளர்களுக்கு

### தொழிற்றுறை திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14
வடக்கு மாகாணத்தில் பலர் தொழிற்பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பெரிய தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என மாகாண தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி உஷா சுபலிங்கம் தெரிவித்தார். அடுத்தவருட நிதி ஒதுக்கீட்டில் இதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் வாழ்வாதார உதவிகளை வழங்கக்கூடிய பல்வேறு தொழில் பயிற்சிகளை வழங்கி வருகின்றோம். அவர்களுக்கான சந்தை வாய்ப்புகள் மற்றும் உதவித் திட்டங்களையும் வழங்கி வருகிறோம். இதுவரை ஆயிரத்து 42 பேர் பயன் பெற்றுள்ளனர்.

பயிற்சிகளைப் பெறுபவர்கள் தொழில் சார்ந்த ஆளுமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அவர்களை உற்பத்தி சார்ந்த பெரிய தொழிற்சாலைகளைப் பார்வையிடுவதற்கு அழைத்துச் செல்வதன் மூலம் ஆளுமை வளர்க்கப்பட வாய்ப்பேற்படும். இவ்வாறான செயற்பாடுகளை நடப்பு வருடத்தில் மேற்கொள்வதற்கு நிதி போதாது. 2018ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இவர்களை அழைத்துச் செல்லத் தீர்மானித்துள்ளோம். கிடைக்கும் நிதியின் அளவிற்கேற்ப மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்றார். (ய-ரி)

## வீட்டுவளவில் காரணமின்றி மணல் வைத்திருந்தவருக்கு ரூ.10,000 தண்டம்

தென்மராட்சி, ஒக்.14
முறையான காரணமின்றி வளவுக்குள் மணலைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த கெற்பேலி தெற்குவாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மணல் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

தகுந்த காரணமின்றி வளவில் மணலைக் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த மைக்காக காணி உரிமையாளர் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு நீதிவான் 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார். (ய-9)

## சாவகச்சேரி தபாலகத்துக்கு விருது

சாவகச்சேரி, ஒக்.14
43 ஆவது பன்னாட்டு தபால் தினத்தையொட்டி சிறந்த சேவைகளை வழங்கியமைக்காக சாவகச்சேரி தபால் அலுவலகம் இந்த வருடமும் மாவட்ட, மாகாண மற்றும் தேசிய நிலைகளில் முதலிடத்துக்கான விருதைப் பெற்றுக் கொண்டது.

இதற்கான விருது கடந்த ஒன்பதாம் திகதி பொலன்னறுவையில் இடம்பெற்ற நிகழ்வில் அரச தலைவரினால் வழங்கப்பட்டது என சாவகச்சேரி தபால் அதிபர் லம்பேர்ட் தெரிவித்தார்.

நாட்டில் உள்ள 460 முதலாம் தர தபால் அலுவலகங்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் சிறந்த சேவைக்காக இந்த விருது வழங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். (ய-9)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய இரண்டு பேருக்கு ரூ.60000 தண்டம்

கிளிநொச்சி, ஒக்.14
அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரு உழவியந்திரச் சாரதிகளுக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.

கிளிநொச்சிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இரு சாரதிகளும் நேற்றைய தினம் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். அவர்களுக்குத் தலா 30,000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ய)

## கடலில் மீன் பிடிப்பவர்களும் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடலாம்

யாழ்ப்பாணம்.ஒக்.14
வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியை அதிகரிக்க கடல்நீர் மீன்பிடியில் ஈடுபடுபவர்களும் முன்வர வேண்டும் என்று நன்னீர் மீன்பிடி அமைச்சின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஈ. சுரேந்திரநாதன் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் நன்னீர் மீன்பிடியை அதிகரிக்க அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்காகப் பல உதவித் திட்டங்களையும் வழங்கி வருகின்றது.

நன்னீர் மீன்பிடியில் ஆர்வம் உள்ளவர்களை ஊக்குவிப்பதற்குரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் தயாராக உள்ளோம். குறிப்பாகக் கடல் மீன்பிடியில் ஈடுபடுவோரும் இதில் அக்கறை கொள்ள வேண்டும்.

கடல் மீன்பிடியுடன் சேர்த்து ஒருபகுதியாக நன்னீர் மீன்பிடியில் ஈடுபடலாம். தற்போது கடல் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் குறிப்பிட்ட காலங்களில் மீன்பிடிக்கச் செல்வதில் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்படு கின்றது. ஆகவே அவர்களும் ஒரு பகுதியாக இந்த நன்னீர் மீன்பிடியில் ஈடுபடலாம்.

அவர்கள் ஒன்றாக இணைந்து சங்கங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் அமைச்சால் வழங்கப்படும் உதவித் திட்டங்கள் அவர்களுக்குக் கிடைக்கும். அவர்களின் வாழ்வாதாரம் எந்த நிலையிலும் பாதிக்கப்படாது. ஆகவே இதற்கு முன்வர வேண்டும்.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளவர்கள் இந்த முறைக்கு முயற்சிகள் எடுத்தால் அமைச்சு உதவும் என்றார். வடக்கு மாகாணத்தில் 61 நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-ரி)

# தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் ஊழல்

## சண்.குகவரதன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.14
வடக்குத்தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. 182 பேருக்கு மட்டுமே நியமனம் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நியமனம் வழங்க அனுமதிக்கப்பட்ட 676 பேருக்கும் உடனடியாக நியமனம் வழங்குவதற்கு வடக்கு மாகாணசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி பொதுச் செயலாளரும் மேல்மாகாணசபை உறுப்பினருமான சண்.குகவரதன் தெரிவித்தார்.

தொண்டர் ஆசிரியர் சம்பந்தமாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

676 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு கொழும்பு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. எனினும், 182 பேருக்கு மட்டும் நியமனம் மட்டுப்படுத்தப்பட்டது. இதன் காரணத்தை அறிய முடியுமா? வெளியான பெயர்ப் பட்டியலில் 1996ஆம் ஆண்டு பிறந்தவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கான அதி உச்ச கல்வித் தகைமையாக ஜி.சி.ஈ. உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன் 2013 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் தொண்டராக குறைந்தது 3 வருடங்கள் கடமையாற்றி இருக்கவேண்டும். இதன்படி இவர்களது கல்வித்தகைமை அக்காலப் பகுதிக்குள் அடங்குகின்றதா?

1996 ஆம் ஆண்டு பிறந்தவர் எப்படி இக்கால எல்லைக்குள் உள்ளடங்கப்பட முடியும்? இது உள்ளூர் அரசியல்வாதிகளின் நியமனமா? அல்லது வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் ஊழலா?

எனவே கொழும்பு கல்வியமைச்சு அங்கீகாரம் வழங்கிய 676 தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்க வடக்கு மாகாணக் கல்வியமைச்சு ஆவன செய்யவேண்டும். இவ்விடயத்தை கொழும்பு கல்வி அமைச்சரினது கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றேன் - என்றார். (ய)

# மாகாணசபையில் நிறைவேறிய பல பிரேரணைகள் கிடப்பில்

## 10வீதமே செயற்பாட்டில் பேரவைச் செயலகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஒக்.14
பொதுமக்களின் பிரச்சினைகள், தேவைகள் குறித்து அரசியல்வாதிகளால் அடிக்கடி பிரேரணைகள் முன்வைக்கப்படுவது வழமை. மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் மற்றும் மாகாணசபை அமர்வுகளில் நூற்றுக்கணக்கான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் அவை முன்வைக்கப்படுவதோடு சரி. நடைமுறைக்கு வருவதென்பது முயல்கொம்பாக இருக்கின்றது.

நாட்டின் உயரிய சபையான நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் பிரேரணைகள் கூட கிடப்பில் போடப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணசபையில் கடந்த வருடத்தில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளில் 10 வீதம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாகாண பேரவைச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணசபை தோற்றம் பெற்ற பிறகு பல பிரச்சினைகளுக்கு தீர்வாக பிரேரணை முன்வைப்பது வழக்கமானது. அவையின் ஒன்றுகூடலின் போது அவை சமர்ப்பிக்கப்பட்டு அனுமதிகளும் பெறப்படும்.

ஆனால் அனுமதி கிடைக்கப்பெற்ற பிரேரணைகள் நடைமுறைப்படுத்துவது என்பது மிகக்குறைவாகவே உள்ளது. சபை ஆரம்பிக்கப்பட்டு மூன்றரை வருடங்கள் தாண்டிய நிலையில் 411 பிரேரணைகள் இதுவரையில் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் 10 வீதமானவை மாத்திரமே அனுமதிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளன.

சில விடயங்கள் இலகுவாக தீர்க்கப்படக்கூடியவையாக இருந்தாலும் அதற்கும் பிரேரணை முன்வைப்பது வழக்கமாகியுள்ளது. இவ்வாறு பிரேரணைகளின் எண்ணிக்கை அதிகரித்ததே தவிர வேலைகள் நடைபெறவில்லை.

அத்துடன் ஒரு பெரிய சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும் சில நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் இழுத்தடிப்பு நிலைமை காணப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# சிறப்புத்தேவையுடையோருக்கான கால்நடைகளை ஏலத்தில் விடுமாறு அரசியல்வாதி கோரினாரா

## வேலணைப் பிரதேச செயலர் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.14
சிறப்புத் தேவையுடையோர் அமைப்பின் வாழ்வாதாரத்துக்காக வழங்கிய கால்நடைகளை ஏலத்தில் விடுமாறு அரசியல்வாதியின் இணைப்பாளர் ஒருவர் கோரினார் எனக்கூறப்படும் சம்பவம் ஒன்று வேலணைப் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இதற்காக வேலணைப் பிரதேச செயலாளரை வழிமறித்து சர்ச்சையில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு அரசியல்வாதியின் இணைப்பாளர் ஒருவருக்கு எதிராக பிரதேச செயலாளர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இதுதொடர்பில் தெரிவிக்கப்படுவதாவது:

வேலணைப் பகுதியில் உலாவும் கட்டாக்காலி கால்நடைகளால் அப்பகுதியில் விவசாயம் பாதிக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்துவது என பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அவற்றைப் பிடித்து வளர்ப்பவர்களை இனம்கண்டு ஒப்படைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்பிரகாரம் பிரதேச செயலாளரின் ஏற்பாட்டில், அண்மையில் பிரதேசசபையினால் 30 மாடுகள் பிடிக்கப்பட்டன. ஒரு மாட்டின் உரிமையாளர் இனம் காணப்பட்டு அது அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஏனைய கால்நடைகளை சிறப்புத் தேவையுடையோர் அமைப்பு ஒன்றில் அங்கம்வகிக்கும் குடும்பத்தவர்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் அவற்றை வழங்குவதற்கு பிரதேச சபை ஏற்பாடு செய்திருந்தது. அந்தவேளையில் ஒருவர் அந்த மாடுகளை ஏலத்தில் விடுமாறு கோரியுள்ளார்.

இதுதொடர்பில் பிரதேச சபையின் செயலாளர், பிரதேச செயலாளருக்கு தகவல் வழங்கினார். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு பிரதேச செயலர் வருகைதந்துள்ளார். அப்போது குறித்த நபர் பிரதேச செயலாளரின் வாகனத்தை வழிமறித்து குழப்பம் விளைவித்தார் எனக் கூறப்படுகின்றது.

இதுதொடர்பில் பிரதேச செயலாளர் அ.சோதிநாதனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, அப்பகுதியில் உள்ள கால்நடைகளைக் கட்டுப்படுத்துவது மட்டும் எமது நோக்கமல்ல. அவை வெட்டப்படாது வளர்ப்பதையும் உறுதிசெய்யவேண்டும். இதனாலேயே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டது. வருமானத்தை ஈட்டும் திட்டமல்ல இது. அதனால் பண வருவாயைக் கருத்திற்கொள்ளவில்லை. இருப்பினும் கால்நடைகளை ஏலத்தில் விட்டால் தாம் அதிக விலையைக் கோரமுடியும் எனக்கூறியே உள்ளூர் அரசியல்வாதியின் இணைப்பாளர் ஒருவர் எனது வாகனத்தை வழிமறித்தார்.

இதனால் நான் பொலிஸாரின் உதவியை நாடவேண்டிய நிலமை ஏற்பட்டது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது - என்றார். (ய-101)

# வடக்கிலுள்ள அரச திணைக்களங்களில் மரங்களை நடப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.14
தேசிய உணவு உற்பத்தி வாரத்தை முன்னிட்டு வடக்கில் அரச திணைக்களங்கள், அமைச்சுகள், மாவட்டச் செயலகங்கள் மற்றும் சகல அரச நிறுவனங்களிலும் மரங்களை நட்டு பசுமை ஏற்படுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

உள் நாட்டலுவல்கள் அமைச்சு பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட சகல அரச அலுவலகங்களும் தலா 2 மரங்கள் வீதம் நடவேண்டும்.

இதன் விவரங்களை படம் எடுத்து உடன் அறியத்தருமாறும் அமைச்சு கோரியுள்ளது.

இந்த மாதத்தை 'வனரோபா' எனும் தேசிய மரநடுகை மாதமாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய)

# சி.க.கூ.சங்கங்களை தரமுயர்த்தத் திட்டம்

யாழ்ப்பாணம் ஒக் 14
தமிழர் பிரதேசங்களில் உள்ள சிக்கனக்கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை தரம் உயர்த்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுதொடர்பான ஆலோசனைக்கான கூட்டம் ஒன்று கடந்தவாரம் திருகோணமலையில் இடம்பெற்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் உபதலைவர் இலகுநாதன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. சமாசங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணத்தைப் போன்று கிழக்கு மாகாணத்தில் சங்கங்களை மக்கள் பயன்படுத்தக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டும்,

வடக்கு மாகாணத்தில் சங்கங்கள் மூலம் அதிகமான மக்கள் நன்மையடைந்து வருகின்றனர்.

சங்கங்கள் மிகவும் திறம்பட செயற்பட்டு வருகின்றன. அதே போன்று எமதுகடன் வழங்கும் சங்கங்களினதும் செயற்பாடுகளை அதிகரிக்க வேண்டும். இதற்கு சம்மேளனம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இப்படியான கலந்துரையாடல்களை எதிர்வரும் காலத்தில் தொடர்ச்சியாக நடத்துவது என்றும் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (ய-115)

# முறையற்ற சாரத்தியம் 13000 ரூபா தண்டம்

கிளிநொச்சி, ஒக.14
பதிவில்லாத வாகனத்தை சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி செலுத்திய நபருக்கு 13ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று

தருமபுரம் பகுதியைச் சேர்ந்த நபர் நேற்றையதினம் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

13ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ய-6)

# நிதி கிடைக்கும் பட்சத்தில் சாலை சீரமைப்பு விரைவுபடும்

## அதிகாரசபை பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம்.ஒக்.14
நிதி கிடைக்கும் பட்சத்தில் வடக்கு மாகாணத்தில் சாலை சீரமைப்பு வேலைகளை விரைவுபடுத்த முடியும் என்று சாலை அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் ஜி.ஜெ.டி குருஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் எமக்குச் சொந்தமான சாலைகள் விரைவாக சீரமைக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் சாலைகள் நூறுவீதம் முழுமையாக சீரமைக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களில் ஒரு பகுதி வேலைகள் மீதமாக உள்ளன. அவற்றைச் சீரமைப்பதற்கு பல வகைகளில் நிதிகளைப் பெற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சாலைகளை காப்பெற் சாலையாக மாற்றுவதற்கு அதிகநிதி தேவை. 100 மில்லியன் நிதியில் 2 கிலோமீற்றர் சாலையையே சீரமைக்க முடியும்.

எமது சாலை சீரமைப்பைத் தவிர ஐரோட் செயற்றிட்டத்தின் கீழ் சில கிலோமீற்றர் சாலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதுதவிர எம்மால் தலைமன்னார் சாலை மற்றும் வவுனியா மன்னார் ஊடான சாலைகளை சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன - என்றார். (ய-ரி)

# யாழ். பல்கலையில் உடற்கல்வி டிப்ளோமா

யாழ்ப்பாணம், ஒக்.14
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சிறப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

1998 ஒக்டோபர் 12ஆம் திகதி உடற்கல்வி டிப்ளோமா கற்கை ஆரம்பிக்கப்பட்டது.

250 மாணவர்கள் டிப்ளோமா பட்டம் பெற்று வெளியேறினர்.

2013 இல் கற்கைநெறி இடைநிறுத்தப்பட்டது.

கற்கையை மீள ஆரம்பிப்பது குறித்து மானியங்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ய)

# கையூட்டு வழங்கி பிணைமுறி ஏலத் தகவல்களை பேர்ப்சுவல் நிறுவனம் திரட்டியது அம்பலமாகியது

## ஆணைக்குழு முன்னிலையில் அந்த நிறுவனத்தின் பிரதான விநியோகத்தரே தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14

இலங்கை மத்திய வங்கியின் பிணை முறி ஏலம் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஊழியர் சேமலாப நிதியத்தின் விநியோகத்தர்களுக்கு 397 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை பேர்பச்சுவல் ரெசரீஸ் நிறுவனத்தினால் கையூட்டு வழங்கப்பட்டுள்ளதாக அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் தெரிய வந்துள்ளது. பேர்பச்சுவல் டெசரீஸ் நிறுவனத் தின் பிரதான விநியோகத்தரான நுவன் சல்தாது ஆணைக்குழு முன்னிலையில் நேற்றுமுன்தினம் சாட்சியமளிக்கையிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் சாட்சிப் பதிவின்போது மேலும் தெரிவித்ததாவது:

2014ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் நடத்தப்பட்ட பிணை முறி ஏலங்களின் இரகசியத் தகவல்கள் கையூட்டுக் கொடுக்கப்பட்டுப் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஊழியர் சேமலாபநிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றின் இரகசியத் தகவல்களே இவ்வாறு விநியோகத்தர்களுக்குக் கையூட்டு வழங்கிப் பெறப்பட்டது - என்றார்.

(5,31)









# கூட்டமைப்புக்கு எதிரான கட்சிகளுடன் வடக்கில் நாம் களமிறங்குவோம்

## இப்படிச் சொல்கிறார் பசில் ராஜபக்ச

கொழும்பு, ஒக். 14
வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து, கூட்டணியை உருவாக்கவுள்ளதாக, பொது ஜன முன்னணியின் அமைப்பாளர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் நாம் பொதுஜன முன்னணியிலேயே போட்டியிடுவோம். மகிந்த அணியில் உள்ள மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய சுதந்திர முன்னணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உள்ளிட்ட வற்றுடன் இணைந்து போட்டியிடுவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போட்டியிடுவதற்கும்திட்டமிட்டுள்ளோம். வடக்கிலும் போட்டியிடுவோம். மகிந்த ராஜபக்சவின் தலைமையில் ஒரே தேர்தல் அறிக்கையின் கீழ் தேர்தலில் நிற்போம்.

மேலும், மகிந்த ராஜபக்ச சர்வாதிகாரியாகச் செயற்பட்டதாகவும் அவர் எவருடைய ஆலோசனைகளை



யும் செவி மடுக்கவில்லை என்று சில தரப்பினர் குறிப்பிடுகின்றனர். எமது ஆலோசனைகளின் பிரகாரம் செயற்படாத தனால்தான் தேர்தலில் தோல்வியடைந்ததாகச் சிலர் குறிப்பிடுகின்றனர். மகிந்த ராஜபக்ச எம்மைவிட அரசியலில் மிகுந்த அனுபவம் உள்ளவர். அவருக்கு எனது உபதேசம் அவசியமல்ல. இருந்தபோதிலும் அவர் எடுத்த சகல தீர்மானங்களின் பின்னாலும் நாம் உள்ளோம். அவரது காலத்தில் இடம்பெற்ற பிழைகளுக்கு நான் பொறுப்பேற்கின்றேன்.

எமது அரசு ஒருபோதும் வைராக்கிய அரசியல் நடத்தப்போவதில்லை. எமக்கெதிராகச் செயற்படுபவர்களையும் நாம் உரிய சட்டத்துக்கு அமையத் தண்டிப்போம். சட்டத்துக்கு முரணாகச் செயற்படப் போவதில்லை. கூட்டு அரசு சட்டத்துக்குப் புறம்பாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது - என்றார். (5,31)

# கோத்தபாய ராஜபக்ச அரசியலுக்கு வருவாரா?

## பசில் சூசகமாக தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 14
நாடு பிளவடையும் அபாயம் ஏற்பட்டால், நாட்டுக்காக உயிரைக் கூட துச்சமெனக் கருதிப் போராடிய கோத்தபாய ராஜபக்ச அரசியலுக்கு வருவார் என்றே நாம் நினைக்கிறோம். இவ்வாறு கோத்தபாயவின் சகோதரரும், சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல்ச் செயற்பாட்டாளருமான பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசால் மேற்கொள்ளப்படும் நாட்டுக்கு எதிரான செயற்பாடுகள், அரச வளங்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகள், நாடு தற்போது முகம்கொடுத்து வரும் பொருளாதார வீழ்ச்சி, இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தாமை, புதிய அரசமைப்பை உருவாக்குகின்ற அரசின் செயற்பாடுகளுக்கு மக்களின் ஆதரவுடன் போராடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளமையாலேயே நாம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து மிக முக்கியமாகச் செயற்பட்டு வருகிறோம்.

இளைஞர்களுக்கு, படித்தவர்களுக்கு, பெண்களுக்கே இம்முறை அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். இதற்காக எமது கட்சி சார்பில் 25வீத ஒதுக்கீட்டையும் இளையோருக்கே வழங்கியுள்ளோம். உள்ளூராட்சியில் 200க்கும் மேற்பட்ட சபைகளை எம்மால் கைப்பற்ற முடியும்.

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அரசியலுக்கு வருவாரா எனும் கேள்வியும் எழுந்துள்ளது. அவர் 1970ஆம் ஆண்டுகளில் இருந்தே எமது அரசியலுக்குப் பின்னால் சகோதரன் எனும் வகையில் இருந்து செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார். இருப்பினும், அவர் வருவாரா இல்லையா என்பது தொடர்பில் எம்மால் உறுதியாக எந்தப் பதிலையும் வழங்க முடியாது. ஆனால், இந்த அரசால் நாடு பிளவடையும் அபாயமொன்று ஏற்பட்டால், நாட்டுக்காக உயிரைக் கூடத் துச்சமெனக் கருதிப் போராடியவர் எனும் வகையில் அவர் அரசியலுக்கு வருவார் என்றே நாம் நினைக்கிறோம்.

தற்போது யார் என்ன குறை கூறினாலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்துக்கு எதிராகக் குரல்கொடுத்து தொகுதிக்குப் பொறுப்புக் கூறும் பிரதி நிதியொருவரைக் கொண்டு வரும் தேர்தல் முறைமையை நாமே மகிந்த ஆட்சியில் அறிமுகப்படுத்தினோம் - என்றார். (5)

வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் கைலாசபிள்ளை
கணபதிப்பிள்ளை (மண்டைதீவு)
கடந்த 15.09.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத் தியம் நாளை (15.10.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு எமது இல்லத்தில் நடை பெற்று, ந.ப 12 மணிக்கு பிரார்த்தனையும், மதிய போசனமும் யாழ். நாவலர் வீதியிலுள்ள தியாகி அறக்கொடை (TCT) நிலையத்தில் நடைபெறவுள்ளதால் இவற்றில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
40/8, அரசடி வீதி,
புகையிரதப்பாதை கிழக்கு ஒழுங்கை,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

20ஆம் ஆண்டு நினைவுநாள்



அமரர்
வேலுப்பிள்ளை
நற்குணராசா
தோற்றம்
24.02.1929
மறைவு
26.09.1997
திதி:- தேய்பிறை தசமி
எந்தையே எம் நினைவே சிந்தையே
எம் முயர்வு கண்டிடவே ஏணியானாய்
முந்தை தவப்பயனாய் தந்தையாய் உங்களைப் பெற்றோம்
விந்தை உலகின் விதியினை நாம் அறிவோம் - எனினும்
சிந்தை கலங்குகிறதே உங்களைப் பிரிந்து ஆண்டுகள்
ஐநான்கு கழிந்தாலும் ஆறாது இறைஞ்சுகின்றோம் இறைசேர
ஆத்மா அவன் மறையடிக்கு
நீசாலை வடக்கு,
கொடிகாமம்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா நயினார்
(அம்பாள் பழைய பாட்ஸ்கடை உரிமையாளர்)
தோற்றம்
10.01.1947
திதி: 14.10.2017
மறைவு
14.10.2014
இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடம் மூன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில் உம் நினைவுகள்
எம்முடன் என்றென்றும் வாழும்...
நீங்கா நினைவுகளுடன்...
இல.05, 5ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

# நீதித்துறையை மேம்படுத்தும் ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை மைத்திரியிடம் கையளிப்பு



கொழும்பு, ஒக். 14
குற்றங்களுக்கான நியாயத்தை விரைவாகவும், வினைத்திற னாகவும் வழங்குவதற்கான விதந்துரைகள் அடங்கிய அறிக்கை அரச தலைவர் செயலகத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறு அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நீதி, நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை ஆகிய அமைச்சுக்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல், அவற்றின் உற்பத்தித்திறன் மற்றும் செயற்திறனை மதிப்பிடுதல், மேற்பார்வை மற்றும் தொடர்ச்சியான மீளாய்வு செய்வதற்காகச் சட்டபூர்வ செயற்பாடுகள் (ஊழல் எதிர்ப்பு) மற்றும் ஊடகச் செயற்பாடுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைச் செயற்குழுவில் அஜித் மான்னப்பெரும தலைமையில் பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பை வெற்றிகரமாகப் பேணுவதாயின் மிகவும் சரியான, நியாயமான நீதிமன்றத் தீர்ப்புகள் தாமதமின்றி மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். நீதித்துறையின் முன்னோடி களாகச் செயற்படும் சட்ட மா அதிபர் திணைக்களம், லஞ்சம் மற்றும் ஊழல்க் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு ஆகியவற்றின் வினைத்திறனான செயற்பாடுகளுக்கு தேவையான ஏற்பாடுகளை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

சமகால சமூக தேவைக்கேற்றவாறு குறித்த நிறுவனங்கள் செயற்படக்கூடிய சூழலை ஏற்படுத்துவதன் மூலம் செயற்றிறனை வலுப்படுத்த வேண்டும் என்பதனால் அதற்கான தேவைகளை இனங்கண்டு பொருத்தமான விதந்துரைகளைச் சமர்ப்பிப்பது அறிக்கையின் நோக்கமாகும்.

நீதித்துறை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன் நீதித்துறை யின் மனித வளம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்து நவீன தொழில்நுட்பத்துக்கமைய வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை அரச தலைவர் சுட்டிக் காட்டினார்.

நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரள, ராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரத்ன, பிரதி அமைச்சர்களான கருணாரத்ன பரணவிதான, அஜித் பீ பெரேரா, துஸ்மந்த மித்ரபால, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சட்ட மா அதிபர் ஜயந்த ஜயசூரிய, மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் அரச தலைவர் சட்டத்தரணி யசந்த கோதாகொட உள்ளிட்ட நீதித்துறை நிபுணர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (5)

## பொலிஸாருக்கு மன்றில் வைத்து அறைந்த பெண்

பாணந்துறை மேலதிக நீதிவான் மன்ற நடவடிக்கையின்போது, சாட்சிக் கூண்டுக்கு அருகில் வைத்து பண்டாரகம பொலிஸ் அதிகாரி சுனில் மீது, பெண் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.
நீதிமன்ற நடவடிக்கைகள் 30 நிமிடங்கள் இடைநிறுத்தப்பட்டது.
நீதிமன்ற வளாக வாசலில் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ள நிலையில், அவர் பெண் பொலிஸாரையும் கடுமையாகத் திட்டியுள்ளார். பொலிஸ் அதிகாரியைத் தாக்கிவிட்டு வெளியே சென்ற பெண்ணைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (5)

## வெளிநாடு செல்வோருக்கான ஐரோப்பிய மொழி கற்கை நெறி

**GERMAN A1** - ஜேர்மன், சுவிஸ் செல்வோருக்கான **(GEOTHEZER TIFIKAT A1)**

**FRENCH A1** - பிரான்ஸ், கனடா, சுவிஸ் செல்வோருக்கான பரீட்சை **(DELF A1)** அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.

**DUTCH A1** - நெதர்லாண்ட் செல்வோருக்கான அவசிய மொழி.

**NOS A1** - நோர்வே செல்வோருக்கான அவசிய மொழி 32 வருடம் அனுபவம் நிறைந்த பட்டதாரி ஆசிரியர் மூலம் கற்பிக்கப்படுகின்றது.

**Jaffna :-**
**No.320A, Main Street, Jaffna. (BOC அருகில்)**
**076 963 9447, 076 479 4432, 076 465 2079, 021 561 1725,**
**FB ID Training Centre**
**Email - europenlanguage02@gmail.com**
**Kilinochchi**
**No.07,Old Kachcheri Road,Kilinochchi.**
**071 382 3639, 021 561 1725, 076 668 3554**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மத்தியூஸ் றோட், அல்வின் வீதியில் 1 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 530 3198**

### விற்பனைக்குண்டு

ஆட்டுக்கிடாய்கள் விற்பனைக்கு உண்டு.

**077 900 9371**

### வீடு வாடகைக்குண்டு

730, ஆஸ்பத்திரி வீதியில் சகல அடிப்படை வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

**077 670 5137**

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ் மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு அடிப்படை வசதியுடன் 6 மாதத்துக்கு அல்லது ஒரு வருடத்துக்கு மட்டும் தேவை.

**தொடர்பு :- 077 361 1282**



### நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

**இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**வி.ஜெயந்தி**
T.P: 077 9733 183
021 221 6071

### விற்பனைக்கு

யாழ். கொக்குவில் College Lane இல் 5 பரப்புகள் கூடிய வீடும் யாழ். கொக்குவில் பிரம்படி வீதியில் ஒரு பரப்புடன் கூடிய புதிய வீடும் யாழ். நல்லூர் கோயில் வீதியில் 1 ½ பரப்பில் மாடிவீடும் யாழ். Rakka வீதியில் 2 பரப்பில் அமைந்த வீடும் கட்டடமும் யாழ். Stanle வீதியில் வின்சர் தியேட்டருக்கு அருகில் 5 பரப்புக் காணியும் யாழ். பஸ்தரிப்பிடத்துக்கு முன்பாக 30 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட காணித்துண்டும் யாழ். பலாலி வீதியில் 10 பரப்பு காணித்துண்டும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 10 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

077 723 2535

### திருமணசேவை (www.thaalee.com)

பல்லாயிரக்கணக்கான வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் உள்ள Un married, Divorce, Widower மணமக்களுடைய படங்கள் , ஜாதகம், விவரங் கள் என்பன www.thaalee.com என்கிற இணையத்தளத்தில் பதியப்பட்டுள்ளன. திருமணம் செய்ய விரும்புபவர்கள் எமது Website ஆகிய www.thaalee. com என்பதைப் பார்த்து தெரிவு செய்து கொள்ள முடியும். நீங்களாகவே அதில் பதிவு செய்து கொள்ள முடியும். இலகுவாக நீங்கள் எவ்விடத்துக்கும் போய் நேரத்தையும் பணத்தையும் செலவு செய்யாமல் எம்முடன் தொடர்பு கொள்ள முடியும்.

**T.P:- 077 539 3728. Viber - 077 829 7351**

### செவிப்புலனுக்கான முழுமையான தீர்வுகள்

**"இலவச செவிப்புலன் பரிசோதனை மற்றும் காது கேட்க வைக்கும் கருவிகளைப் பொருத்திப் பரீட்சித்தல்"**

**நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட கேட்க வைக்கும் கருவிகள்**

| Behind the ear (BTE) | Ultra Small BTE | Moxi Kiss BTE | Completely in the ear (CIC) | Micro CIC | Full Shell | Half Shell and Canal |
|---|---|---|---|---|---|---|








**தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு கண்பார்வை பரிசோதனை மற்றும் தெரிவு செய்யப்பட்ட மூக்குக் கண்ணாடிகள், காதுகேள் கருவிகளுக்கு விலைக்கழிவுகள் வழங்கப்படும்.**

**J.M.விக்கிரமராச்சி அன் கம்பனி**
No.178, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
**021 221 9288 / 021 222 8109**

**The Thinnai**
Rest Relax Reunite
An All-Suite Boutique Hotel

**அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட எமது துலா உணவுச்சாலையில் பல்வேறு தரமான சுவை நிறைந்த சிற்றுண்டி மற்றும் தின்பண்ட வகைகளை குறைந்த விலையில் த திண்ணை ஹோட்டலில் பெற்றுக்கொள்ள முடியும்.**

**Bread Selection -**
பாண் வகைகள்

| | |
|---|---|
| Rye Bread (300 gram) | - LKR 195 |
| Rossana Bread (300 gram) | - LKR 240 |
| Corn Pepp Bread (275 gram) | - LKR 264 |
| Multigrain Bread (275 gram) | - LKR 180 |
| Garlic French Bread (300 gram) | - LKR 135 |
| Sesame French Bread (300 gram) | - LKR 135 |
| Plain Bread | - LKR 150 |
| Brown Bread | - LKR 175 |

**Short Eats (Non-vegetarian)**
சிற்றுண்டி வகைகள் (அசைவம்)

| | |
|---|---|
| Chicken Puff | - LKR 80 |
| Chicken Hot Dog | - LKR 150 |
| Chicken Roll | - LKR 75 |
| Mutton Puff | - LKR 125 |
| Fish Roll | - LKR 75 |
| Fish Patty | - LKR 60 |
| Egg Roll | - LKR 75 |

**Cake by Kilo –** கேக் வகைகள் (கிலோ படி)

| | |
|---|---|
| Black Forest Cake | - LKR 2,500 |
| Opera Cake | - LKR 2,750 |
| Red Velvet Cake | - LKR 3,500 |
| Chocolate Cake (Normal) | - LKR 1,250 |
| Chocolate Cake (with Chocolate Mousse) | - LKR 3,000 |
| Coffee Cake | - LKR 1,500 |
| Caramel Cake | - LKR 1,500 |
| Fruit Cake | - LKR 1,250 |
| Eggless Fruit Cake | - LKR 1,400 |
| Ribbon Cake | - LKR 1,400 |
| Chocolate Swiss Roll | - LKR 1,500 |
| Butter Cake | - LKR 1,250 |
| Banana Cake | - LKR 1,000 |

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் ஒரு கிலோவிற்கானவை

**Sweets by Slice –**
இனிப்புப் பண்டங்கள் (ஒரு துண்டு)

| | |
|---|---|
| Opera Cake | - LKR 140 |
| Chocolate Fudge | - LKR 140 |
| Fruit Cake | - LKR 100 |
| Butter Cake | - LKR 100 |
| Brownie | - LKR 150 |
| Danish | - LKR 75 |
| Caramel Éclair | - LKR 100 |
| Chocolate Éclair | - LKR 100 |

**Baked Fresh Muffins**

| | |
|---|---|
| Almond Muffin | - LKR 100 |
| Banana Muffin | - LKR 100 |
| Chocolate Muffin | - LKR 100 |
| Plain Muffin | - LKR 100 |

**Dessert by Cup**

| | |
|---|---|
| Cream Caramel | - LKR 150 |
| Watalappam | - LKR 150 |
| Chocolate Mousse | - LKR 200 |

**Ice Cream Selection**
வழமையான **Chocolate** மற்றும் **Vanilla** சுவைகளுடன், புதிய பனம் பழ மற்றும் நெல்லிச் சுவைகளிலும் கிடைக்கிறது

| | |
|---|---|
| Cone (Small) | - LKR 60 |
| Cone (Large) | - LKR 80 |

**Short Eats (Vegetarian) –**
சிற்றுண்டி வகைகள் (சைவம்)

| | |
|---|---|
| Vegetable Puff | - LKR 75 |
| Vegetable Patty | - LKR 60 |
| Vegetable Roll | - LKR 60 |
| Vegetable Roti | - LKR 60 |




**திறந்திருக்கும் நேரம் - காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை**

**உங்கள் வீட்டு நிகழ்வுகளுக்குத் தேவையான சிற்றுண்டி மற்றும் தின்பண்ட வகைகளையும் மதிய உணவுப் பொதிகளையும் முன்பதிவு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.**

"Kiddies pool available at the Solai Veedhi on Saturdays, Sundays, Poya days and public holidays from 10.00 am to 4.00 pm for customers who visits the Thulaa café". You could also "Come with your loved ones and enjoy the great atmosphere at The Thinnai".

86, Palaly Road, Thirunelveli, Jaffna, Sri Lanka
T+ 94 21 20 30 400 | E info@thethinnai.com | W www.thethinnai.com

# மரண அறிவித்தல்கள்

## நிற்சிங்கம் பூபாலசிங்கம்

**(கேசு மாமா)**

**(இயக்குநர் - பீக்கன் கல்வி நிறுவனம் - யாழ்ப்பாணம், யாழ்.பீக்கன் - கரணவாய் தெற்கு)**

வரணியாதோட்டம், கரணவாய் தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பீக்கன் கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம், யாழ்.பீக்கன் கரணவாய் தெற்கு ஆகியவற்றின் இயக்குநர் நிற்சிங்கம் பூபாலசிங்கம் (கேசு மாமா) நேற்று (13.10.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நிற்சிங்கம் - பாறுபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான மங்களாதேவி, சுந்தரசிங்கம் (பாப்பா அண்ணா), பாலசிங்கம், குருகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**வரணியாதோட்டம்,**
**கரணவாய் தெற்கு,**
**கரவெட்டி.**

**தகவல்:**
**சு.மகேந்திரம்**
**(மருமகன்)**

## பாக்கியநாதர் ஜெயதாஸ்

(Retired Mechanical Engineer General Manager - Kantale Sugar Corporation)



**மண்ணில் 27.09.1947 விண்ணில் 08.10.2017**

யாழ்.வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், நியூசிலாந்தை வதிவிடமாகவும் கொண்ட பாக்கியநாதர் ஜெயதாஸ் 08.10.2017 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராயப்பு பாக்கியநாதன் - எமிலி எலிசபெத் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆனந்தம் - பிறிஜெட்டா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மேரி கமலாவதியின் அன்புக் கணவரும், றஞ்சன், ஜயந்தன், நிலாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மேரி வனிதா மற்றும் ஞானதாஸ், குணதாஸ், அமலதாஸ், மோகனதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சாம் மற்றும் செபஸ்ரியன், ராணி, கிறேஸ், செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், லக்ஷினி, கேஷினி, நிஷாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரிஸ்டன், லஷினி, பிறைடன், ஏட்றியல் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் செப அஞ்சலிக்காக St.Theresas Church, 210, St.Andrew's Road, Plimmerton, Porirua, Wellington, New Zealand இல் நாளை (15.10.2017) ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணிமுதல் வைக்கப்பட்டு மறுநாள் 16.10.2017 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து நல்லடக்கம் Whenua Tapu Cemetery இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**றஞ்சன் - மகன் +64 21075 4722, ஜயந்தன் - மகன் +64 210290 9026, நிலாந்தி - மகள் +64 21041 8323**

## திருமதி நகுலேஸ்வரி சரவணமுத்து



வசாவிளானைப் பிறப்பிடமாகவும், கருகம்பனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரவணமுத்து நகுலேஸ்வரி 11.10.2017 (புதன்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பு சரவணமுத்துவின் அன்பு மனைவியும், கந்தசாமி, சிவபாதம் (கண்ணன்), பாலசுப்பிரமணியம், பாலசிங்கம் (குணம்), சிவமலர், நேசமலர், சிறிஸ்கந்தராஜா, ரதிமலர் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற திருமதி இரத்தினம் செல்வநாயகியின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான சி.இரத்தினம், சி.செல்லத்துரை, த.பொன்னுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற விமலாதேவி, காலஞ்சென்ற பவளேஸ்வரி மற்றும் புஸ்பராணி, அஷ்டலட்சுமி, சிவராசா, சிவபாலன், தயாவதி, காலஞ்சென்ற செல்வகுமார் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2017) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இளவாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

077 628 8849

# மலேசியக் கடவுச்சீட்டுகளுடன் சிக்கிய இலங்கையர்கள்!

கொழும்பு, ஒக். 14

இந்தோனேசியாவின் ஊடாக ஐரோப்பாவுக்குச் செல்வதற்காக மலேசியக் கடவுச்சீட்டுக்கள் இலங்கையர்களால் விற்பனை செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக மலேசியக் குடிவரவுத் திணைக்களப் பணிப்பாளர் டட்டுக் சேரி மஸ்டாபர் தெரிவித்தார். இந்தோனேசிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ள ஐந்து இலங்கையர்கள் தொடர்பில் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

மேலும் மலேசியா மற்றும் இந்தோனேசியாவுக்கு இலங்கையின் கடவுச்சீட்டுக்களுடன் வந்து பின்னர் அந்தக் கடவுச்சீட்டுக்களைக் கிழித்தெறிந்து விட்டதாகக் கைது செய்யப்பட்ட ஐந்து பேரும் விசாரணையில் குறிப்பிட்டதாக டட்டுக் சேரி மேலும் தெரிவித்தார். (5)

# மைத்திரி அதிரடி

## மகிந்தானந்த, குமார வெல்கமவின் அமைப்பாளர் பதவிகள் பறிப்பு

### சந்திரிகா தொகுதி அமைப்பாளராக நியமனம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவிகளில் இருந்து மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கமவும், மகிந்தானந்த அழுத்கமகேயும் நீக்கப்பட்டுள்ளனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கும் குமார வெல்கம மத்துகம அமைப்பாளர் பதவியில் இருந்தும், மகிந்தானந்த அழுத்கமகே நாவலப்பிட்டிய அமைப்பாளர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமார துங்க அத்தனகல தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (5)

# கடற்படையில் வான்படை உருவாக்க அரசு திட்டம்

*பாதுகாப்பு அமைச்சின் செயலர் தெரிவிப்பு*

கடல் எல்லைகளை கண்காணிக்கும், தாக்குதல்களை நடத்தும் திறன் கொண்ட கடற்படையின் வான் படைப் பிரிவை உருவாக்க வேண்டியதன் அவசியத்தைப் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த வான்படையின் கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அச்சுறுத்தல்களும், இலங்கையின் புவிசார் மூலோபாய முக்கியத்துவமும், கடற்படையின் வான் படைப் பிரிவை உருவாக்குவதற்கான அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. ஆயுதப் படைகளுக்கு உயர்வசதிகளைக் கொண்ட கடற்படைக் கப்பல்கள் வழங்கப்பட்டுள்ளன. வான் மற்றும் கடல்சார் ஆற்றல்களைக் கட்டியெழுப்பும் வகையில், வான் படையுடன் இணைந்த கூட்டுத் தொடர்பாடல் வலையமைப்புடன் கூடிய, கூட்டுக் கட்டளை அமைப்பை உரு வாக்குவதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கு வானூர்திகளே இன்னமும் பிரதான தெரிவாக உள்ளன. உயரத்திலும், வேகமாகவும் செல்வதற்கும், விரைவாக இடத்தை அடைவதற்கும் அவற்றினாலேயே முடியும். பல அரசுகள் அதற்கே முதலிடத்தைக் கொடுக்கின்றன. நாங்கள் எமது வான்படை ஆற்றல்களைப் பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற முறைகளில் அபிவிருத்தி செய்ய விரும்புகிறோம் - என்றார். (5)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை அன்னலிங்கம்



இன்பர்சிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், தேவிபுரம், புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அன்னலிங்கம் 12.10.2017 வியாழக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் கணபதிப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துவேலு சிவபாதம் - பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகபூசணியம்மாவின் அன்புக் கணவரும், வாசுகி (தேவிபுரம்), காண்டீபன், பிரதீபன் (லண்டன்), தேவகி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகநேசன் ( குகன் - தேவிபுரம்), கல்யாணசுந்தரி, காஞ்சனா (லண்டன்), லீலாகிருஷ்ணா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷசாங்கன் (கதிர்), பகலவன், பவநிதி, கோதை, அன்பு, வானதி, ஜீவா, சுஜி, சித்தார்த், அறிவொளி, சாமி, கீர்த்தி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கதிரமலை, திருநாவுக்கரசு, இராமச்சந்திரன் மற்றும் இரத்தினேஸ்வரி (லண்டன்), அழகம்மா (இன்பர்சிட்டி), காலஞ்சென்ற சோதிலிங்கம், நடனசிகாமணி (இன்பர்சிட்டி), கருணாநிதி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தங்கமணி, இராசரத்தினம் (இந்தியா), காலஞ்சென்ற செல்லப்பாக்கியம், சண்முகசுந்தரம் (லண்டன்), இராசதுரை (இன்பர்சிட்டி), தங்கரத்தினம் (இன்பர்சிட்டி), காலஞ்சென்ற யோகமலர், வைகுந்தாதேவி (லண்டன்) காலஞ்சென்றவர்களான தங்கவேலாயுதசாமி, முத்துவேல் மற்றும் குணபூசணியம்மா (கனடா), இலட்சுமிகாந்தன் (வெள்ளை - பருத்தித்துறை), சூரியகமலா (பருத்தித்துறை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் காண்டீபன் விளையாட்டுக் கழகம் அருகில் இன்பர்சிட்டி, பருத்தித்துறையிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (15.10.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் சுப்பர்மடம், பருத்தித்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிரதீபன் (மகன்) - 077 911 0292, குகநேசன் (குகன் - மருமகன்) - 077 2661405, தேவகி (மகள்) - 0044 7983114540**

**பிறப்பு 24 . 03 . 1932**



**இறப்பு 11 . 10 . 2017**

## திருமதி பொன்னம்மா குணசிங்கம்

யாழ்.கொக்குவில் பிரம்படியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா குணசிங்கம் 11.10.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குணசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், மன்மதராசா (பிரான்ஸ்), புஸ்பராசா (இலங்கை), புஸ்பலீலா (ஜேர்மனி), புஸ்பரஞ்சிதம் (இலங்கை), சிறிகந்தராசா (சுவிஸ்), புஸ்பமலர் (இலங்கை), ஜேக்காந்தராசா (இலங்கை), காலஞ்சென்ற ஜெயச்சந்திரன், ஜெயக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகம்மா, ராசு, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விசயராணி, நகுலேஸ்வரி, தேவராசா, செல்வரத்தினம், றோசனா, ரவி, செல்வரத்தினம், றெஜினா, செல்வமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும், புவனேந்திரம், மணி, ராணி, தவம், பூவதி, பவளம், சின்னத்தங்கச்சி, ராசாத்தி, தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தர்சினி சீலன் (லண்டன்), வவா ஜெயபாலசிங்கம் (பிரான்ஸ்), குட்டிமன்னன் ஜெசிந்தா (பிரான்ஸ்), சுவந்தி மரியதாஸ் (மோகன் - பிரான்ஸ்), நிஷா பிலிப் (லண்டன்), பவுண்ா துஸ்யந்தன் (பிரான்ஸ்), பிரபா சுந்தா (இலங்கை), வவா றமா (இலங்கை), சுதா சுவி (இலங்கை), றோசி பிரசாத் (இலங்கை), ஜீவன் (இலங்கை), உமா (இலங்கை), சோபா பிறேம் (பிரான்ஸ்), செல்வி சதீஸ் (ஜேர்மனி), கண்ணன் ஜெசி (ஜேர்மனி), நிரு சுபா (லண்டன்), லிசி கிரி (இலங்கை), தச்சா (இலங்கை), டெனீஸ்வரன் விஜிதா ( இலங்கை), றஜிதா (இலங்கை), விஜய்நாத் (சுவிஸ்), ஸ்றொயானா (சுவிஸ்), சியா பிரபு (இலங்கை), மிதுஷா காண்டி (இலங்கை), மியூறன் (இலங்கை), ஜெனா றோகித் (இலங்கை), நிதுஷன் (பிரான்ஸ்), அஸ்வினா (பிரான்ஸ்), சகானா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செறின், செறிஷன், செறோன், செமியோன், ஜெர்ஷியா, ஜெர்ஷியன், ஜெறிஷன், ப்பிரிதி, ஜெஸ்வின், ப்பிரயன், அருண், அருணியா, அர்வின், நிருஷன், பிரிஷன், நிவேஷன், நிஜானி, கவின், கிஷாந்தன், கிருஷன், சஜானி, தனுஸ், சஜான், ப்பிரிஷா, சரிஷா, சபிரா, சகினா, இனிஷா, றஜன், அஜானன், சஜானன், கேசிகன், அக்ஷயா, திலக்ஷன், நிவேதிகா, மிலன், ரேஸ்மிகா, சஞ்சு, சன்வி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6/8, பிரம்படி வீதி,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பசில் ராஜபக்சவின் கனவு ஒருபோதும் பலிக்காது

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு




கிளிநொச்சி, ஒக்.14
பசில் ராஜபக்சவின் கனவு ஒரு போதும் பலிக்காது என்று கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்தார்.
கிளிநொச்சியில் அமைக்கப் பட்ட கால்நடை வைத்திய திணைக்களத்தின் விலங்கு புலனாய்வு நிலையத்தை அமைச்சர் பீ.ஹரிசன் நேற்றுத் திறந்தார். அங்கு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இருநூறு ஆசனங்களைப் பெறுவோம் என்று பசில் ராஜபக்ச தெரிவித்தார். அது தொடர்பில் ஊடகவியலாளர் கேள்வியெழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவத்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பசில் ராஜபக்ச இவ்வாறு தான் அரச தலைவர் தேர்தலுக்கு முன்னரும் கனவு கண்டார். தாங்களே 10 ஆண்டுகளுக்கு அரச தலைவர் என்றெல்லாம் கூறினார். வடக்கு, கிழக்கு மக்களின் ஆதரவுடன் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் நல்லதொரு ஆட்சியை அமைத்தனர். தேர்தல் தோல்வியின் பின்னர் பசில் ராஜபக்ச அமெரிக்கா ஓடினார். உள்ளூராட்சித் தேர்தல் முடிந்த பின்னரும் அவர் அமெரிக்காவுக்கு ஓடிவிடுவார். அவரது பகல் கனவுகள் ஒருபோதும் பலிக்காது - என்றார். (ற-35)



## லஹிருவை விடுவிக்க வலியுறுத்தி பல்கலை. மாணவர் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, ஒக்.14
அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர, பல்கலைக்கழக மத குருமார்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் டெம்பிட்டிய சுகனானந்த தேரர் ஆகியோரை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
கிழக்குப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, வந்தாறுமூலை வளாகததில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
மாணவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை மாணவர்கள் ஏந்தியிருந்தனர்.
"சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக போராடும் எமது தலைவர்களைக் கைதுசெய்வதாலோ ஆர்ப்பாட்டங்களை அடக்குவதனாலோ மாணவர் போராட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாது. இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வாக சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி மூடப்பட வேண்டும். அதுவரை நாங்கள் போராடிக்கொண்டு இருப்போம்." என்று போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.
நீதிமன்ற உத்தரவை மீறி சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக கொள்ளுப்பிட்டியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டமைக்காக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர, மற்றும் பல்கலைக்கழக மத குருமார்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் டெம்பிட்டிய சுகனானந்த தேரர் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். (ற)

## சந்தேக நபருக்கு மறியல்

சாவகச்சேரி, ஒக்.14
பெண் ஒருவரைக் கண்ணாடிப் போத்தலால் தாக்கிய குற்றச்சாட்டில் அல்லாரையைச் சேர்ந்த ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.
இது தொடர்பான வழக்கு நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-ரி2.9)



## விலங்கு புலனாய்வு நிலையம் திறப்பு

கிளிநொச்சி, ஒக்.14
கிளிநொச்சி கால்நடை வைத்திய திணைக்களத்தின் விலங்கு புலனாய்வு நிலையம் நேற்று கிளிநொச்சி நவேணசபுரத்தில் திறக்கப்பட்டது.
மத்திய கால் நடை உற்பத்திச் சுகாதார திணைக்களத்தின் சுமார் 32 மில்லியன் ரூபா நிதியுதவியில் இந்த நிலையம் அமைக்கப்பட்டது. கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் ரி.ஹரிசன் நிலையத்தைத் திறந்தார்.
மத்திய கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆரியதாச தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பணிப்பாளர் விலங்கு சுகாதார வைத்தியர் நிமால் ஜெயவீர, மேலதிக செயலாளர் வைத்தியர் நிகால் மற்றும் கால் நடை வைத்தியத் திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ற)

## வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவிகள்

மட்டக்களப்பு, ஒக்.14
வாகரைப் பிரதேசத்தில் உள்ள வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வாழ்வாதார உபகரணங்கள் நேற்று வழங்கப்படடன.
கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சரின் நிதி ஒதுக்கீட்டில் அவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
வாகரைப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.அ.அமலினி தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டார்.
செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கங்காதரன், பிரதி அமைச்சரின் இணைப்பாளர் எஸ்.றிஸ்மின், கிராம சேவை உத்தியோகத்தர்கள், செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற)

## மீள் நடுகைத் திட்டத்தின் கீழ் தென்னம்பிள்ளைகள்



பளை, ஒக்.14
பளையில் தென்னை மீள்நடுகைத் திட்டத்தின் கீழ் தென்னங் கன்றுகள் நேற்று வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.
தென்னை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன. பளை, தம்பகாமம் கிராம மக்களுக்கு தலா ஐந்து தென்னம்பிள்ளைகள் வீதம் விநியோகிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி2,9)

## 1½ கோடி ரூபாவுடன் பெண் கைது!

கொழும்பு, ஒக். 14
இலங்கைக்குச் சட்டவிரோதமான வெளிநாட்டு நாணயங்களைக் கொண்டுவர முயன்றபெண் ஒருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.
அவரிடம் இருந்த நாணயங்களின் பெறுமதி இலங்கை நாணய மதிப்பின்படி ஒரு கோடியே 50 லட்சம் ரூபா என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.
சந்தேகநபர் தமது பிரயாணப் பொதியில் வெளிநாட்டு நாணயத் தாள்களை சூட்சுமமான முறையில் மறைத்து வைத்துக் கொண்டு வர முற்பட்டார் என்றும் அவரிடம் சுமார் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் கைப்பற்றப்பட்டது என்றும்தெரிவிக்கப்பட்டது.
மட்டக்குளிப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-ரி2)

## சடலங்கள் மீட்பு

அநுராதபுரம், ஒக்.14
அநுராதபுரம், விகாரகம் மில்லகுளம் பிரதேசத்தில் வீடொன்றில் இருந்து இரு சடலங்கள் மீட்கப்பட்டன.
உயிரிழந்தவர்கள் கணவன், மனைவி எனத் தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்த பெண்ணின் உடலில் வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
உயிரிழந்தவர்கள் 45 மற்றும் 35 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ரி4)

## வாள்வெட்டுச் சம்பவம்: மூவருக்குப் பிணை

சாவகச்சேரி, ஒக்.14
வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூவரை சாவகச்சேரி நீதிமன்று நேற்றுப் பிணையில் செல்ல அனுமதித்தது.
நுணாவிலில் நேற்றுமுன்தினம் நடந்த வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றில் கைது செய்யப்பட்டவர்களுக்கே பிணை வழங்கப்பட்டது.
வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் அந்தப் பகுதியில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்புக் கமராவில் பதிவான காட்சிகளின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
வழக்கை விசாரித்த நீதிவான் மூவரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல உத்தரவிட்டார். வழக்கை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.
சந்தேகநபர்கள் மூவரும் வழக்கொன்றில் ஏற்கனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்றும், நேற்றுமுன்தினம் அவர்கள் வழக்குக்கு அழைக்கப்பட்டிருந்தனர்என்றும்தெரிவிக்கப்படுகின்றது.
வழக்கு எடுக்கப்படுவதற்கு முன்னதாக அவர்கள் நுணாவில் பகுதியில் வாள்வெட்டில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகின்றது. (ற-ரி2,9)



## தப்பமுடியாது அமெரிக்கா வடகொரியா எச்சரிக்கை

வொஷிங்டன், ஒக். 14

கொரியத் தீபகற்பத்தில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், "எமது தாக்குதல்களில் இருந்து அமெரிக்கா தப்பமுடியாது" என்று எச்சரித்தது வடகொரியா.

வடகொரியாவின் எல்லையற்ற சோதனைகளை அடுத்து, அதன்மீது ஐக்கிய நாடுகள் சபை கடும் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட தடைகள் போதாது என்றும் கூடுதல் தடைகளை விதிக்க வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார் ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே. அபே, அமெரிக்காவுடன் இணைந்து கொண்டே இவ்வாறு செயற்பட்டு வருகிறார் என்று கடும் கருத்துக்களை வெளியிட்ட வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், 'ஜப்பான் விரைவில் சாம்பராகும்' என்று தெரிவித்தார்.

இதையடுத்து தனது இரண்டு போர் வானூர்திகளை வடகொரியாவின் எல்லையில் பறக்கவிட்டு வடகொரியாவை எச்சரித்தது அமெரிக்கா.

இதையடுத்து "வடகொரியாவில் தாக்குதல்களில் இருந்து அமெரிக்கா ஒரு போதும் தப்பமுடியாது" என்று கருத்துத் தெரிவித்துள்ளார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன். (ம)

# யுனெஸ்கோவில் இருந்து வெளியேறுகிறது அமெ.


## அமெரிக்காவின் வழியில் இஸ்ரேலும்

வொஷிங்டன், ஒக். 14

யுனெஸ்கோவில் இருந்து வெளியேறப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. அமெரிக்காவின் அறிவிப்பு வந்த சில மணிநேரங்களில் அமெரிக்காவுடன் இணைந்து தானும் வெளியேறப்போவதாக இஸ்ரேலும் அறிவித்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ, இஸ்ரேலுக்கு எதிராக பாகுபாடு காட்டுவதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வந்தது. இதனால் அமெரிக்காவும் அதன் 'செல்லப்பிள்ளை' என்று அழைக்கப்படும் இஸ்ரேலும் யுனெஸ்கோவின் செயற்பாடுகளில் இருந்து விலகியே இருந்தன.

யுனெஸ்கோவுக்கு, தான் வழங்கி வந்த நிதியையும் அமெரிக்கா வெகுவாகவே குறைத்திருந்தது. ட்ரம்ப், யுனெஸ்கோவுடன் மிகமிக இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்தார்.



இதனால் எந்த நேரமும் யுனெஸ்கோவில் இருந்து அமெரிக்கா விலகிச் செல்லலாம் என்று கருதப்பட்டுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. இதன்படி 2018ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இறுதியில் யுனெஸ்கோவில் இருந்து அமெரிக்கா முழுமையாக வெளியேறும் என்று அறிவித்துள்ளது. எனினும், இந்த முடிவு மறுபரிசீலனை செய்யப்பட வாய்ப்புள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, யுனெஸ்கோ, இஸ்ரேலின் பரம எதிரியான பலஸ்தீனத்தை தனது நிரந்தர உறுப்பு நாடாக சேர்த்துக்கொண்டது. இதற்கு இஸ்ரேலும், அமெரிக்காவும் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. இந்தப் பின்னணியிலும் இருநாடுகளின் விலகல் முடிவுகளும் பார்க்கப்படுவது அவசியம்.

அமெரிக்காவின் முடிவை 'அறம் சார்ந்த சிறந்த முடிவு' என்று இஸ்ரேலியத் தலைமை அமைச்சர் நெத்தன்யாகு தனது கீச்சகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்காவின் இந்த முடிவு குறித்து யுனெஸ்கோ கவலை தெரிவித்துள்ளது. "இரண்டு நாடுகளினதும் விலகல் முடிவுகள் பன்முகத் தன்மை மற்றும் ஐ.நா. குடும்பத்திற்கு ஏற்பட்ட இழப்பு" என்று ஐ.நா. கருத்துத் தெரிவித்துள்ளது. (ம)

## வியட்நாம் வெள்ளப்பெருக்கில் உயிரிழப்பு 46ஆக உயர்ந்தது

ஹனோய், ஒக். 14

வியட்நாமில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 46ஆக அதிகரித்தது.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமின் நோயன், ஜென் பாய் உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த சில நாள்களாகக் கடுமையாக மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக அந்த மாகாணங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கி 15பேர் உயிரிழந்தனர் என்று நேற்றுமுன்தினம் முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுக் காலை வெளியான தகவலின்படி உயிரிழப்பு எண்ணிக்கை 46ஆக அதிகரித்தது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சமும் வெளியிடப்பட்டது. (ம)





துர்மெனிஸ்தான் அதிபர் குர்பாங்கில் பெர்டி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் புடினுக்கு அழகிய நாய்க்குட்டியொன்றைப் பரிசளித்துள்ளார் குர்பாங்கில் பெர்டி. (ம)

## வடகொரியாவில் நேற்று நிலநடுக்கம்

பியாங்யாங், ஒக். 14

வடகொரியாவில் நேற்று நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. 2.9 ரிச்டர் அளவில் இந்த நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. அணுவாயுதச் சோதனை அல்லது ஐதரசன் குண்டுச் சோதனையால் இந்த நில அதிர்வு ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறித் தொடர்ந்து ஆயுத மற்றும் அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது வடகொரியா. கடந்த மாதத்தின் மத்திய பகுதியில் அந்த நாடு கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையையும், அணுகுண்டை விடவும் சக்தி வாய்ந்த ஐதரசன் சோதனையையும் நடத்தியது.

இந்தச் சோதனையின் போது 6.3 ரிச்டர் அளவில் நில அதிர்வு ஏற்பட்டது என்று தென்கொரிய அரசு செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் மீண்டும் ஏற்பட்டுள்ள இந்த நில அதிர்வானது வடகொரியா நடத்திய ஏவுகணைச் சோதனை அல்லது ஐதரசன் குண்டுச் சோதனையின் விளைவாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)

## பிரிந்து செல்லக்கூடாது கட்டலோனியா; வலியுறுத்தி தொடர்ந்து போராட்டங்கள்

மட்ரிட், ஒக். 14


ஸ்பெய்னில் இருந்து பிரிந்து செல்வது தொடர்பில் எதிர்வரும் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கட்டலோனியா தனது இறுதி முடிவை அறிவிக்க வேண்டும் என்று ஸ்பெய்ன் கெடு விதித்துள்ள நிலையில் கட்டலோனியா பிரிந்து செல்லக்கூடாது என்று வலியுறுத்தி ஸ்பெய்னில் தொடர்ந்து போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

ஸ்பெய்னின் பொருளாதாரம் உள்ளிட்ட பல விடயங்களில் கட்டலோனியா காத்திரமான பங்களிப்பை வழங்குகிறது. ஸ்பெய்னின் சுற்றுலாத் தளமாகவும் கட்டலோனியா விளங்குகிறது. ஸ்பெய்னில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளில் சுமார் 20 சதவீதமானவை கட்டலோனியாவை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் கட்டலோனியாவைத் தனிநாடாக அறிவிக்க வேண்டும் என்று அங்குள்ள மக்கள் கடந்த ஐந்து வருடங்களாகக் குரல்கொடுத்து வருகின்றனர்.

இந்த மாதம் முதலாம் திகதி இது தொடர்பான வாக்கெடுப்பையும் தன்னிச்சையாக நடத்தி முடித்தது கட்டலோனியா. வாக்களித்த 2.3 மில்லியன் மக்களில் 90 சதவீதமானவர்கள் பிரிந்து செல்வதற்கு ஆதரவாகவே வாக்களித்தனர். இந்த வாக்கெடுப்பை அடுத்து பிரிவினைக் குரல்கள் கட்டலோனியாவில் மேலும் வலுப்பெற்றுள்ளன. இதனால், எதிர்வரும் 19ஆம் திகதிக்குள் பிரிந்து செல்வதா அல்லது தொடர்ந்தும் ஸ்பெய்னுடன் இருப்பதா என்பது தொடர்பில் கட்டலோனியா தனது இறுதி அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று ஸ்பெய்னின் தலைமை அமைச்சர் மரியானோ ரஜாய் கெடு விதித்துள்ளார்.



பெரும்பாலும் பிரிந்து செல்வதற்கே அதிக சாத்தியமுள்ளதால் கட்டலோனியா பிரிந்து செல்லக் கூடாது என்று வலியுறுத்தி ஸ்பெய்னில் தொடர்ந்து போராட்டங்களும், பேரணிகளும் நடைபெற்று வருகின்றன. (ம)



# புதுவிதி
PUTHU VITHI
நடத்தும்

# பரிசு மழை

போட்டி
- 01 -

**1ம் பரிசு ரூ100,000/=**

**2ம் பரிசு ரூ60,000/=**

**3ம் பரிசு ரூ25,000/=**

**இத்துடன் ரூ2000/= பெறுமதியான 10 ஆறுதல் பரிசுகள்**

வாசகர்கள் தங்கள் அறிவையும், அதிர்ஷ்டத்தையும் பரீட்சித்துப் பார்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்

**மேற்படி போட்டிகள் மூன்று சுற்றுக்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணையின்படி நடைபெறும்.**

புதுவிதி
PUTHU VITHI

## பரிசு மழை



### முதலாம் சுற்று

- முதலாம் சுற்றின் முதலாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **28.10.2017**
- முதலாம் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **04.11.2017**
- முதலாம் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **11.11.2017**
- முதலாம் சுற்றின் ஆறுதல் பரிசுக்குரிய 10 வினாக்கள் பிரசுரமாகும் திகதி **18.11.2017**

### இரண்டாம் சுற்று

- இரண்டாம் சுற்றின் முதலாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **25.11.2017**
- இரண்டாம் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **02.12.2017**
- இரண்டாம் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **09.12.2017**
- இரண்டாம் சுற்றின் ஆறுதல் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச்சுற்றில் முதலாம் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **16.12.2017**

### இறுதிச் சுற்று

- இறுதிச் சுற்றின் முதலாம் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **23.12.2017**
- இறுதிச் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **30.12.2017**
- இறுதிச் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச் சுற்றில் ஆறுதல் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **06.01.2018**
- இறுதிச் சுற்றின் ஆறுதல் பரிசுக்குரிய வினாக்கள் வினாக்கள் பிரசுரமாகும் திகதி **13.01.2018**

- சகல போட்டிகளிலும் இறுதிச்சுற்றில் பங்குபற்றி குலுக்கலுக்கு தகுதிபெற்றவர்களின் பெயர்கள் பிரசுரமாகும் திகதி **20,27.01.2018**

**குலுக்கல் இடம்பெற்று பரிசுகள் வழங்கப்படும் திகதி 15.01.2018**

**நிபந்தனைகள்:-**

- ✓ ஒருவர் ஒரு போட்டியில் ஒரு முறைதான் பங்குபற்றலாம்
- ✓ எமது பத்திரிகையில் பிரசுரமாகும் போட்டிக் கூப்பனையே நிரப்பி அனுப்ப வேண்டும். போட்டியாளர்கள் தாமே தயாரித்து அனுப்புவதை தவிர்க்க வேண்டும்.
- ✓ போட்டியாளர்கள் விண்ணப்பத்தில் தாம் குறிப்பிட்ட ஆள்அடையாள விவரத்தை அவர்கள் பரிசிலுக்கு தகுதி பெறும் பட்சத்தில் நேரடியாக சமர்ப்பித்து உறுதிப்படுத்த வேண்டும். இல்லையெனில் பரிசில் பெறும் வாய்ப்பை தவற விட்டவராவார்.
- ✓ எமது பத்திரிகை நிறுவனத்தைச் சார்ந்தவர்களோ அல்லது அவர்களது உறவினர்களோ இப் போட்டியில் பங்குகொள்ள முடியாது.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மக்களின் கோரிக்கைக்கு கட்டாயம் மதிப்பளியுங்கள்

வடக்கு முழுவதும் நேற்று முழுமையாக முடங்கியது. அரசியல் கைதிகளுக்கு ஆதரவை வெளிப்படுத்துவதற்காக அழைப்புவிடுக்கப்பட்ட முழுஅடைப்புக்குதமிழ்மக்களிடம் இருந்து முழுமையான ஆதரவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கடைகள், அரச அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள், போக்குவரத்து என்று எல்லாமும் முடங்கிப்போயிருந்தன. அரசியல்கைதிகளின்விடயத்தில்தமது மிகஉறுதியான நிலைப்பாட்டை இதன் மூலம் தமிழர்கள் தெரியப்படுத்தி இருக்கிறார்கள். அப்படி அவர்கள் தெரியப்படுத்துவது இது முதற்றடவையும் அல்ல.

பாடசாலைமட்ட தேசிய தமிழ் மொழித் தின நிகழ்வு இன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகிறது. இதில் கலந்துகொள்வதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வருகை தருகிறார். அரசியல்கைதிகள்விடயத்தில்அவர்ஓர்அரசியல்முடிவை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியே நேற்றைய தினம் அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்த விடயத்தில் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வெளிப்பாடு என்ன என்பது அதன் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அரசியல் கைதிகள்விடயத்தில்ஓர்அரசியல்முடிவை அரசதலைவர்அறிவிக்க வேண்டும் என்பதே வடக்கில் உள்ள எல்லோரதும் எதிர்பார்ப்பு. காலவரையறைஇன்றிநீண்டுசெல்லும்இந்தஅரசியல் கைதிகளின்விடயம்இனநல்லிணக்கத்தைஏற்படுத்துவதிலும் அமைதியை நிலைநாட்டுவதிலும் வலுவான தடையாகவே இருக்கும்என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்தலைவரும் எதிர்க்கட்சித்தலைவருமானஇரா.சம்பந்தனும்சுட்டிக்காட்டியிருக்கிறார்.

தேசிய தமிழ் மொழித் தின நிகழ்வில் கலந்துகொள்வதற்கு அவரும் அழைக்கப்பட்டிருக்கின்றார் என்றபோதும் அதில் அவர் பங்கேற்கமாட்டார் என்று தெரிகின்றது. அப்படிப் பங்கேற்காது புறக்கணிப்பதன் மூலம் இந்த விடயத்தில் அரச தலைவரின்அணுகுமுறைசரியானது அல்லஎன்கிறஎதிர்ப்பை சம்பந்தர்காட்டுவார். அவர்மட்டுமல்லாமல்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும்கூட அரச தலைவரின் நிகழ்வைப் புறக்கணிக்க முடிவு செய்துள்ளனர்.

இந்த ஒட்டுமொத்த எதிர்ப்பும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனமீதுதமிழ்மக்கள்கொண்டுள்ளஏமாற்றத்தின்வெளிப்பாடுகள். 2015ஆம் ஆண்டில் அவரை அரச தலைவராக்குவதற்கு உற்சாகத்துடன் வாக்களித்த மனோநிலையில் அவரை இன்று வரவேற்பதற்கு யாழ்ப்பாணத்து மக்களோ வடபகுதி மக்களோதயாரில்லைஎன்பதே இன்றையயதார்த்தம். ஒருபடி மேலேபோய் அரசியல் கைதிகள் விடயத்தில் ஒரு தெளிவான முடிவை அவர்அறிவிக்காவிட்டால்அவருக்கு எதிர்ப்புத்தெரிவித்துப் போராட்டங்களை நடத்தவும் கறுப்புக்கொடி காட்டவும்கூடத் தாம் தயாராக இருக்கின்றனர் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் எரியும் பிரச்சினைகளான காணி விடுவிப்பு, படைக் குறைப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற்போனோரின் கதியைக் கண்டறிதல், நிலைமாறு கால நீதியைஏற்படுத்துவதற்கானபொறிமுறையைஏற்படுத்துதல், போர்க்குற்றவிசாரணை, இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணுதல் போன்ற விடயங்களில் தனதும், தான்சார்ந்த அரசினதும் மெத்தனமான (சிலவிடயங்களில்அறவே செயற்பாடில்லை) செயற்பாடுகள் காரணமாக இரண்டரை வருட காலத்தில் தான் எப்படித் தமிழ் மக்களின் மத்தியில் மதிப்பிறக்கம் அடைந்துள்ளார் என்பதை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நன்கு புரிந்துகொள்ளக்கூடிய சந்தர்ப்பம் இது.

அவர் அதனைப் புரிந்துகொண்டு நடப்பாரானால், அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையளிப்பதாக இருக்கும். காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, படைக் குறைப்பு, போர்க்குற்ற விசாரணைக்கானகலப்புநீதிமன்றத்தைஉருவாக்குதல்போன்றவிடயங்களில்தெளிவானஅரசியல்முடிவுகளை எடுக்கவேண்டிய கட்டாயத்திற்குள்தான் நின்றுகொண்டிருப்பதை அரச தலைவர் புரிந்துகொண்டு அதனைச் செயற்படுத்த அவர் முன்வரவேண்டும்.

அரசியல் தீர்வும் தாமதப்பட்டுச் செல்கின்ற நிலையில், இந்த விடயங்களும் தீர்வின்றி நீண்டு செல்வது தமிழ் மக்களை விசனத்திற்கு உள்ளாக்குகின்றது. அமைதியின்மையை அதிகரிக்கின்றது. போராட்டங்களை உருவாக்குகின்றது. தீர்வு இன்றி இந்த நிலைமை அப்படியே தொடர்ந்தால் மீண்டும் ஓர் வன்முறைக் கலாசாரத்திற்குள் நாம் தள்ளப்படும் ஆபத்து இருக்கிறது என அண்மையில் சம்பந்தர் அரசை எச்சரித்திருந்தார் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இவற்றையெல்லாம்கவனத்தில்எடுத்து நல்லிணக்கத்திற்கான நல்ல சமிக்ஞையாக அரசியல் கைதிகள் விடுதலை பற்றிய அரசியல் முடிவை அரசதலைவர் யாழ்ப்பாண மண்ணில் வைத்து இன்றே அறிவிக்கவேண்டும். அதுவே வடக்கு மக்களின் எதிர்பார்ப்பு.



# புதிய அரசமைப்பின் தர்மசங்கடமான பயணம்

சிங்கள மூலம் - ஜயதிலக டி சில்வா (லங்காதீப)

தமிழில்: வீ.எஸ்.ரீ.

புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை வெளியானதைத் தொடர்ந்து அது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள்தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கூட்டு எதிரணித் தரப்பினர்புதியஅரசமைப்புயோசனைகளுக்கு எதிராக வெளியிடும் குற்றச்சாட்டுக் களை மறுத்துரைக்கும் விதத்தில் அரச தரப்பினரும் பதிலிறுத்து வருகின்றனர்.

தற்போது நடைமுறையில் உள்ள அரசமைப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள், அது அறிமுகப்படுத்தப்பட்டவேளை பெருமளவில் முன்னெடுக்கப்பட்டதுண்டு. அதனை ஐ.தே. கட்சி அரசே உருவாக்கி நிறைவேற்றியபோதிலும், பிற்காலத்தில், அதாவது 2015 ஆம் ஆண்டளவில் ஐ.தே.கட்சியே அதனை விமர்சித்துக் கருத்து வெளிப்படுத்தி வந்தது.

அரச தலைவர் தேர்தல்களில் சுதந்திரக்கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய சகல அரச தலைவர்களும் முன்னைய அரசமைப்பை இல்லாதொழிப்பதாக வாக்குறுதி வழங்கியிருந்தனர்.

2007ஆம் ஆண்டில் அரச தலைவராகவிருந்த சந்திரிகா புதிய அரசமைப்பு யோசனையொன்றை நாடாளுமன்ற அனுமதிக்காகச் சமர்ப்பித்த போதிலும், அவர் அதனை நிறைவேற்றிக் கொள்வதில் தோல்விகண்டார். அதே போன்று மகிந்த ரா்ஜபக்ச இரு தடவைகள் அரசதலைவராகப் பதவி வகித்த வேளைகளிலும் நாட்டுக்குப் புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவதாக பல தடவைகள் வாக்குறுதி வழங்கிய போதிலும் அவர் கூடத் தமது வாக்குறுதியை நிறைவேற்ற அக்கறை காட்டிச் செயற்பட்டதில்லை.

## நிறைவேற்று அதிகார நடைமுறை ஒழிப்பு, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு இவ்விரண்டுமே முக்கியமானவை

கடந்த பல ஆண்டு காலமாக இத்தகைய எதிர்ப்புச் செயற்பாடுகளுக்கு இரு முக்கிய கோரிக்கைகளே காரணங்களாக அமைந்தன.

நிறைவேற்று அரச தலைவர் நடைமுறையை ஒழித்தல் மற்றும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணல் என்பவையே அவ்விரு முக்கிய கோரிக்கைகளாகும். இப்போது கூட இவ்விரு பிரச்சினைகளுக்குச் சாதகமான விதத்தில் தீர்வு காணத் தவறினால் புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது அர்த்தமற்றதாகிவிடக் கூடும்.

தற்போது வெளியிடப்பட்டுள்ள உத்தேச அரசமைப்பு சட்ட மூலம், இறுதி ஆவணமல்ல என்ற நிலையில், அது மீண்டும் பொதுமக்களது கருத்து வெளிப்பாடுகளுக்கு உள்ளாகும் வாய்ப்பு உருவாகியுள்ளது. இவை, ஒருவர் மீதொருவர் குற்றம் குறை கூறி விமர்சிப்பதைவிடுத்துபயனளிக்கத்தக்க ஆலோசனைகளாகவோ, கருத்து வெளிப்பாடுகளாகவோ அமைய வேண்டியது அவசியமாகும்.

புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் அறிக்கையில் மேலும் பெறுமதியான விடயங்கள் இருப்பினும், குறித்த அறிக்கை தொடர்பான முக்கிய அரசியல் கட்சிகளது கருத்து நிலைப்பாடு குறித்தும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். ஐ.தே.கட்சி இந்த அறிக்கை தொடர்பாக வேறு யோசனைகளை முன்வைக்க மாட்டாது என்பதால் குறித்த அறிக்கை தொடர்பான விவாதமெதிலும் ஐ.தே.கட்சி ஈடுபட முன்வராது எனக் கருத முடியும்.

அரசியல் அங்கம் வகிக்கும் மற்றொரு முக்கிய கட்சியொன்றான சுதந்திரக் கட்சியான அறிக்கை தொடர்பான தனது கருத்தை வேறாகச் சமர்ப்பித்துள்ளது. அதில் முதலாவது பக்கத்தில் முதலாவது பகுதியில் மாற்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென அந்தக் கருத்து வெளிப்பாட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தக் கட்சியின் சில தலைவர்கள், குறித்த சட்டமூலம் தொடர்பாகக் கடும் விமர்சனங்களை மேற்கொண்டு வந்துள்ளனர். இத்தனைக்கும், தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பின் கீழ் 14 ஆண்டுகள் காலமாக சுதந்திரக் கட்சி நாட்டை நிர்வகித்திருந்தமை முக்கியமாகத்தொட்டுக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

> **புதிய அரசமைப்புக்கான வழிகாட்டல் குழுவின் அறிக்கையில் மேலும் பெறுமதியான விடயங்கள் இருப்பினும், குறித்த அறிக்கை தொடர்பான முக்கிய அரசியல் கட்சிகளது கருத்து நிலைப்பாடு குறித்தும் தெரிந்துகொள்ள வேண்டியதுஅவசியமாகும். ஐ.தே.கட்சி இந்த அறிக்கை தொடர்பாக வேறு யோசனைகளை முன்வைக்க மாட்டாது என்பதால், குறித்த அறிக்கை தொடர்பாக விவாதமெதிலும் ஐ.தே.கட்சி ஈடுபட முன்வராது எனக் கருத முடியும்.**

### நடைமுறை அரசமைப்பின் முக்கிய அம்சங்களில் மாற்றம் மேற்கொள்ள சுதந்திரக் கட்சி ஒப்புக் கொள்ளாது

நடைமுறையிலுள்ள அரசமைப்பின் 1-9 பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள பிளவுபடாத நாடு, பௌத்த மதத்துக்கு முன்னுரிமை மற்றும் நிறைவேற்று அரச தலைவர் நடைமுறை ஆகிய அம்சங்களில் ஒரு சிறு மாற்றமேனும் மேற்கொள்ள சுதந்திரக் கட்சி உடன்படமாட்டாது. பொது எதிரணித் தரப்பும்கூட நூற்றுக்கு நூறு வீதம் இதே கருத்தையே கொண்டுள்ளது. குறித்த இடைக்கால அறிக்கையை கூட்டு எதிரணி முற்று முழுதாக எதிர்க்கும் அதேவேளை சுதந்திரக் கட்சியின் தலைவர்கள் சிலர் அமைச்சுப் பதவிகளை வகிப்பதால் சுதந்திரக் கட்சி வெளிப்படையாக இடைக்கால அறிக்கையை எதிர்க்க இயலாத நிலையில் உள்ளது. சிலவேளை உரிய சந்தர்ப்பம் கிட்டும்வரை சுதந்திரக் கட்சியினர் காத்திருக்கின்றனர் என்றும் கருத முடிகிறது. ஆயினும் சுதந்திரக் கட்சியினர் கொள்கை ரீதியில் கூட்டு எதிரணியினரது நிலைப்பாட்டையே கொண்டுள்ளனர்.

அந்தவகையில் சுதந்திரக் கட்சியின் கொள்கை நிலைப்பாடு இறுக்கமானது மட்டுமன்றி எது விதத்திலும் விட்டுக் கொடுக்காத, உறுதி கொண்டதாக இருக்கக் கூடும். அரசமைப்பு சபையின் சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வேறு எந்தவொரு மேலதிக யோசனைகளுக்கும் சுதந்திரக் கட்சி ஆதரவளிக்காது என சுதந்திரக் கட்சி தெரிவித்திருப்பதிலிருந்து பிளவுபடாத நாடு, பௌத்தமதத்துக்குமுன்னுரிமை ஆகிய விடயங்களில் எவ்வித மாற்றம் மேற்கொள்வதற்கும் சுதந்திரக் கட்சி உடன்படாது என்பது தெளிவாகிறது. அதுமட்டுமன்றி இது தொடர்பான எதுவித பேச்சுக்கும் கட்சி உடன்படாது என்பதுடன் ஏனைய கட்சிகளும் அந்த நிலைப்பாட்டைப் பேண வேண்டுமென சுதந்திரக் கட்சி கருதுவதாகக் கொள்ள இயலும். 'பெரஹர' நாட்டியக்காரர் கரணம் அடித்து தலைகீழாக நிற்பது போன்று தற்போது சுதந்திரக் கட்சி நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் நடைமுறையைக் காப்பாற்ற வேண்டுமென யோசனை முன்வைக்கிறது. அதேவேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட பதவியை ஒழிப்பேனெனத் திரும்பத் திரும்ப வாக்குறுதி வழங்கி வந்த அரச தலைவர் கட்சியின் நிலைப்பாட்டை ஒட்டிச் செயற்படுவாரா? அல்லது குறித்த நிறைவேற்று அதிகாரத்தைக் கைவிடுவாரா? என்பதெல்லாம் மனச்சாட்சிக்கு உட்பட்ட பிரச்சினையே.

### மென்போக்கு நிலைப்பாட்டை பேணுகிறது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

அதேவேளை இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மென்போக்கைக் கடைக்கொண்டு வருகிறது. இடைக்கால அறிக்கை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது பிரேரணைகளை முன்வைத்திருப்பினும், இரண்டு முதன்மைக் கட்சிகளிடையே நல்லிணக்கம் இருக்குமானால், அரசமைப்பு வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய அடிப்படை அம்சங்களுடன் இணங்கிப் போக இயலுமா என்பது குறித்துப் பரிசீலிக்கத் தயாரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. லியம் பொக்ஸ்ஸின் உடன்பாட்டு முயற்சியின்படி கூட, தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டுமானால் முதன்மைக் கட்சிகள் இரண்டினதும் ஒத்துழைப்பு அவசியமே. அந்த வகையில் நோக்கும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு பாராட்டுக்கு உரியதொன்றே.




அதேவேளை குறிப்பிட்ட அரசமைப்பு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு மடங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற இயலாது தடுத்து நிறுத்திவிடுவதே கூட்டு எதிரணித் தரப்பினரது தற்போதைய திட்டமாகும். அது இதற்கு முன்னர் அரசமைப்புக்கான திருத்தச் செயற்பாடுகளை தோற்கடிக்க அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவை ஈட்ட மேற்கொண்ட முயற்சியைக் கூட கூட்டு எதிரணி மேற்கொள்ள முயன்று வருகிறது. அரசமைப்புக்கான திருத்தம் தொடர்பான குழப்பங்கள் உச்சம் பெற்றமை போன்று இனவாத அழுத்தங்கள் தலைதூக்கினால், சில சிறு கட்சிகள் கூட்டு எதிரணியுடன் இணையவும் முயலக்கூடும்.

> "இனங்களுக்கு இடையேயான சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கு வாய்த்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த முன்னர் போன்று நாம் தவறுவோமேயானால், அது பெரும் நஷ்டத்தையும், பயங்கர முடிவுகளையும் ஏற்படுத்தக் காரணமாகக் கூடும்.

### இனவாத, மதவாத கருத்துக்களுக்கு எதிராக பொதுமக்களை கிளர்ந்தெழச் செய்தல் வேண்டும்

புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் அரசுடன் ஒத்துழைக்க விரும்பும் ஏனைய கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களது பொறுப்பு, இனவாத, மதவாத தரப்பினர்களது அரசமைப்பை நிறைவேற்ற இயலாது தடுத்து நிறுத்தும் முயற்சிகளுக்கு எதிராக நாட்டு மக்களைக் கிளர்ந்தெழ வைப்பதாகும். இதில் இடதுசாரிக் கட்சிகளது பொறுப்பும் கணிசமான அளவுக்கு உள்ளது.

அவ்விதம் பொதுமக்களது ஆதரவு அலையொன்றை உருவாக்கிக் கொள்ள முடியுமானால், முன்னைய அரசின் கொள்கை நிலைப்பாட்டைப் பின்தள்ளுதல் போன்றே, விடயங்கள் தொடர்பான இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்தக் காட்டும் விருப்பவீனத்தைக் கூட, விலக்கிக் கொள்வதற்கான வாய்ப்பும் உருவாகக் கூடும்.



எது எப்படியான போதிலும் இனங்களுக்கிடையேயானசிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கு வாய்த்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப்பயன்படுத்த, முன்னர்போன்று நாம் தவறுவோமேயானால், அது பெரும் நஷ்டத்தையும் பயங்கர முடிவுகளையும் ஏற்படுத்தக் காரணமாகக் கூடும். அது நாட்டின் எதிர்காலச் சந்ததியினரது வாழ்க்கையை நாசப்படுத்த வழி வகுக்கும்.

அவ்விதம் இடம் பெறுமானால் வரலாறு ஒருபோதும் எம்மை மன்னிக்க மாட்டாது.




## இவர்களும் மனிதர்களா?

எம்மில்சிலர்மற்றவர்களுக்குப்பாதிப்பை ஏற்படுத்துகின்றசெயல்களில்ஈடுபடுவதை நினைக்கும்போது வேதனையும், ஆத்திரமும் ஏற்படுகின்றன. காங்கேசன்துறை வீதியிலிருந்துசுன்னாகம்திருஞானசம்பந்தர் மருத்துவமனைக்கு அருகில் சட்டத்தரணி செல்லத்துரை வீதி ஆரம்பித்துச் செல்கின்றது. இந்த வீதியில்தான் பிரபலமானதொலைபேசிநிலையத்தின்களஞ்சியசாலையுடன் கூடிய அலுவலகம் அமைந்துள்ளது. இதன்தெற்குப்பக்கமாக அமைக்கப்பட்டுள்ள மதிலின் ஓரத்தில் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்றன. ஆனால் அதை எவருமே கண்டுகொள்வதில்லை. பெரிய வாகனங்கள் அந்த வீதியூடாகச் செல்லும் போது ஒதுங்குவதற்கு இடம் கிடைக்காது தினமும் சிலர் அந்தரப்படுவதைஅவதானிக்கமுடிகின்றது. ஓர்அரை மணி நேரத்தில் அந்தப்பற்றைகளை அழித்துவிட முடியும். ஆனால் எவருமே அந்தக்கைங்கரியத்தை மேற்கொள்ள இதுவரை முன்வரவில்லை. இந்த நிலையில் சில தினங்களுக்கு முன்னர் நான் அந்த வீதியூடாகச் சென்றபோது மிகச் சீரானமுறையில்பொதிசெய்யப்பட்ட உரப்பையொன்று அந்தமதிலுடன்சாத்திவைக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்றேன். அப்போதுஅதுதொடர்பாகநான்அதிககவனம் செலுத்தவில்லை. மறுநாளும்நான்அந்த வீதியூடாகச் சென்றபோது உரப்பையைச் சுற்றிவர குருதி போன்றதொரு திரவம் பரவிக் காணப்பட்டது. இலையான்களும் மொய்த்துக் கொண்டிருந்தன. உரப்பையிலிருந்து கெட்ட வாடை வீசுவதை நான் உணர்ந்து கொண்டேன். அடுத்த நாள்சென்றபோதுசகிக்கமுடியாததுர்நாற்றம் அங்கு வீசியது. மூக்கைப் பொத்திக் கொண்டு உடனடியாக அந்த இடத்தை விட்டு அகன்றேன். ஒரு லீற்றர் மண்ணெண்ணெயை வாங்கி அந்த உரப்பையின் மீது ஊற்றி எரித்து விடுவதெனத் தீர்மானித்தேன்.

மாலை நேரம்தான் அதற்கு உகந்ததென்பதுஎனதுமுடிவாகும். அடுத்தநாள்மாலை நேரம் அந்த வீதியூடாகச் சென்ற போது எவரோ ஒரு புண்ணியவான் காய்ந்த தென்னோலைகளின் உதவியுடன் துர்நாற்றம்வீசிக்கொண்டிருந்தஉரப்பையை எரித்துச் சாம்பலாக்கி இருப்பதைக் கண்டேன். நான் செய்வதற்கு உத்தேசிருந்த வேலையை அந்த முகம் தெரியாதவர் செய்து முடித்துவிட்டிருந்தார்.

எவரோ நாயொன்றை அடித்துக் கொன்றுவிட்டு அதனதுஉடலைஉரப்பையில்அழகாகப் பொதிசெய்து கயிற்றினால் வரிந்து கட்டி வைத்துவிட்டிருந்த சங்கதி பின்னர் தான்தெரியவந்தது. இந்தஉலகில்இவ்வாறானகேவலமானமனிதர்களும்இருக்கத் தான்செய்கின்றனர். இதற்குயாரைத்தான் நொந்து கொள்வது?

-பா.தர்மரூபன்
சுன்னாகம் வடக்கு




### இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி



உலக மொழிகளில் பழமைவாய்ந்த மொழியாக தமிழ்மொழி இருந்துவருகிறது. உலகில் இன்று ஆயிரக்கணக்கான மொழிகள் இருந்த போதிலும் பேச்சளவிலும் எழுத்தளவிலும் புதுயுகத்தின் சவால்களை சமாளிக்கக் கூடிய உயிரோட்டமுள்ள மொழியாக தமிழ் மிளிர்கிறது. இவ்வாறான பின்னணியில் யாழில் இடம்பெறும் தேசிய தமிழ் மொழித்தின விழாவுக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் ஆட்சி மொழிகளில் ஒன்றாகவும் இன்னும் பல நாடுகளில் பயன்பாட்டு மொழியாகவும் இருந்துவரும் தமிழ் மொழியானது, நம் நாடு உள்ளிட்ட உலக கலை இலக்கிய துறைகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. தலைசிறந்த தமிழ் இலக்கிய உபதேச காவியமாக கருதப்படும் திருக்குறல் உலகில் அனைத்து முக்கிய மொழிகளுக்கும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதிலிருந்தே அம்மொழியின் வலிமை பறைசாற்றப் பட்டுள்ளது.

"தாய் மொழியின் வலிமை" எனும் தொனிப்பொருளில் தேசிய தமிழ் மொழித்தின விழா யாழில் இடம்பெறுவது மகிழ்ச்சியான விடயமாகும். மொழியை ஒரு தடையாக பார்ப்பதற்குப் பதிலாக அதனை தேசிய நல்லிணக்கத்தையும் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வையும் ஏற்படுத்தத்தக்க உறவுப்பாலமாக உபயோகப்படுத்த வேண்டியது மாணவர்களாகிய உங்களது பொறுப்பாகும். தமிழ் மொழித்தின விழா முதன்முறையாக தேசிய தமிழ் மொழித்தின விழாவாக இம்முறை யாழில் இடம்பெறுகிறது. இவ்விழாவினை ஏற்பாடு செய்துள்ள கல்வி இராஜாங்க அமைச்சுக்கும் அதற்காக முன்னின்று செயற்படும் அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதுடன் 2017 தேசிய தமிழ் மொழித்தின விழா இனிதே இடம்பெற வாழ்த்துகிறேன்.

**மைத்திரிபால சிறிசேன** - சனாதிபதி
இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

### கௌரவ கல்வி அமைச்சரின் வாழ்த்துச்செய்தி



மொழிப்பயன்பாடு மற்றும் விளக்கங்களை மிகுந்த விரிவான அடிப்படையில் தேவையான சந்தர்ப்பங்களுக்கமைய தேவையான பாடசாலைப் பிள்ளைகளின் தமிழ் மொழி அறிவு விருத்தியினை மேம்படுத்தும் வகையில் கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்படும் தமிழ் மொழித் தினப் போட்டித் தொடரின் விருது வழங்கும் விழாவிற்கு வாழ்த்துச் செய்தியினை அனுப்பக் கிடைத்ததையிட்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். தேசத்தின் சிறார்களை கோளமய சமூகத்தின் பலம்பொருந்திய பிரஜைகளாக மாற்றியமைக்கும் வகையில் பல்வேறுபட்ட மொழிப்பயன்பாடு தொடர்பில் பல்வேறு உள்ளீடுகள் ஊடாக வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கல்வி அமைச்சு பல்வேறுபட்ட செயற்பாடுகள் ஊடாக முயற்சிகளை முன்னெடுத்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

1970 ஆம் ஆண்டில் கல்வி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழித்தின விழா தற்போது நாடு பூராகவும் அமைந்துள்ள பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழ் மொழி வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் விசேட மொழித்திறமைகள் தொடர்பாக வருடாந்தம் பாராட்டிக் கௌரவிக்கப்படுகின்றது. சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் உள்ளிட்ட சகல மாணவர்களினதும் தமிழ் மொழித் திறமையினை மேம்படுத்தும் வகையில் வருடாந்தம் ஒழுங்கு செய்து அமுல்படுத்தும் வேலைத்திட்டத்திற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**அகில விராஜ் காரியவசம்** - கௌரவ கல்வி அமைச்சர்

### எதிர்க்கட்சித் தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவருமாகிய கௌரவ இரா.சம்பந்தன் அவர்கள், தேசிய தமிழ்த் தின விழாவினையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வழங்கும் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் 2017 ஒக்டோபர் மாதம் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறுகின்ற தேசிய தமிழ்த்தின விழாவிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தமிழ்மொழி மூலமாக பல்வேறு துறைகளில் நாடளாவிய ரீதியில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட அவ்வத்துறை சார்ந்த மாணவ, மாணவியருக்குப் பரிசில்களை வழங்கும் வகையிலும் தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்கும் வகையிலும் மத்திய மற்றும் மாகாணக்கல்வி அமைச்சுக்களின் அனுசரணையுடன் கல்வி இராஜாங்க அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்ற இவ்விழாவானது பாராட்டுக்குரியதாகும்.

"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்...."

என்பது புரட்சிக்கவிஞன் பாரதிதாசனின் பாடல் வரிகள். அந்த வகையில் ஒரு மொழி வாழும்போது நான் அம்மொழி சார்ந்த இனம் தனது தனித்துவத்துடனும் தனது இன அடையாளங்களுடனும் வாழமுடியும். எனவே, எமது உயிரினும் மேலான மொழியை வளர்த்தெடுத்து வாழவைப்பதில் இத்தகைய விழாக்களும் பெரும் பங்கு வகிக்கின்றன.

நாடளாவிய ரீதியில் வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டம் என தமிழ் மொழித்திறன்களுக் கான போட்டிகளை நடத்தி அவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் இத்தகைய நிகழ்வுகள், அம்மாணவர் களை மட்டுமன்றி ஏனைய மாணவர்களையும் ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகளாக அமைகின்றன.


தமிழ்த் தினப்போட்டிகள் மாணவர்களைப் பல்வேறு துறைகளில் புதிய தேடல்களுக்கும், ஆக்க முயற்சிகளுக்கும் இட்டுச் செல்வனவாகவும் அமைகின்றன. அவ்வாறான முயற்சிகள் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பங்காற்றும் கைங்கரியத்துக்கு உதவுகின்றன.

நீண்ட காலத்திற்குப் பின்னர் மாபெரும் விழாவாக தேசிய தமிழ்த்தின விழா, யாழ்நகரில் தமிழர்தம் பண்பாட்டையும் சைவ மரபையும் கல்வித்தரத்தையும் பேணிப் பாதுகாத்துவரும் பழம்பெரும் கல்லூரியாக விளங்கும் யாழ்.இந்துக்கல்லூரியின் மைதானத்தில் நடைபெறுகின்றமை சாலச்சிறந்ததாகும். இத்தேசிய தமிழ்த்தின விழா சிறப்புற நடந்தேறவும் அவ்விழா தொடர்பில் வெளிவரவுள்ள மலர் தமிழ்மொழியின் பெருமை களைப் பறைசாற்றும் காத்திரமான மலராக மலர்ந்து மணம் வீசட வும் எனது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் இறையருளையும் இறைஞ்சுகின்றேன்.

நன்றி

**இரா.சம்பந்தன் பா.உ** - எதிர்க்கட்சித்தலைவர், இலங்கைப் பாராளுமன்றம்.

### தேசிய தமிழ் மொழித் தின நிகழ்வை முன்னிட்டு வட மாகாண ஆளுனரின் வாழ்த்துச் செய்தி



இவ்வாண்டில் ஒன்பது மாகாணங்களின் பாடசாலைகள், வலயங்கள், மாகாணங்கள் மற்றும் தேசிய மட்டத்தில் தமிழ் மொழித் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டித்தொடரில் வெற்றிபெற்ற திறமைமிக்க மாணவர்களுக்காக விருது வழங்கும் வகையில் மற்றும் அவர்களைக் கௌரவிப்பதற்காக வடமாகாண கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் கல்வி அமைச்சினால் யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள தேசிய தமிழ் மொழித்தின நிகழ்வு - 2017 இற்காக வாழ்த்துச்செய்தி அனுப்பக் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மொழி என்பது மானிட நிலைப்பாட்டுக்கு அத்தியாவசிய அம்சமாகும். அது தொடர்புசாதனத்தைப் போன்று சமூக இணைப்புக்களை ஏற்படுத்தக்கூடியது. எமது சிந்தனைகளை மொழிப் பயன்பாட்டின் மூலமே காண்பிக்க முடிவதுடன் அனைத்து செயற்பாடுகளும் சிந்தனையின் வெளிப்பாடுகள் ஊடாகவே இடம்பெறுகின்றது. அத்துடன் மொழி மனிதனின் செயற்பாடுகளையும் தீர்மானிக்கின்றது. எனவே சமூக யதார்த்தத்தையும் மற்றும் கலாசாரத்தையும் சித்தரித்துக் காட்டக்கூடியதாக மொழி அமைகின்றது. ஒவ்வொருவரினதும் மொழிகளைக் கற்பதன் மூலம் இலங்கையில் வாழும் சமூகத்தின் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த பிரதான அடிப்படைச் செயற்பாடாக அமைகின்றது. சிங்களம் மற்றும் தமிழ் நாட்டின் அரச கரும மொழியாக உள்ளது. ஆங்கிலம் இலங்கையின் இணைப்பு மொழியாகக் கருதப்படுகின்றது. தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளைக் கற்பிப்பதற்குப் பொருத்தமான பண்புசார் தரமிக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம் இலங்கையின் மும்மொழி அறிவின் ஊடாக சமாதானம் பரஸ்பர புரிந்துணர்வுகளை சமூகத்திற்கிடையே கட்டியெழுப்ப வாய்ப்புக் கிடைக்கின்றது.

இலங்கைத் தமிழர்களின் கலாசாரப் பின்னணியை கொண்ட யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் தேசிய தமிழ் மொழித் தின நிகழ்வு - 2017 இந்த மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பத்தில் சகல திறமை வாய்ந்த் மாணவ மாணவிகள் மற்றும் அவர்களின் பெற்றோர், பாதுகாவலர்கள், ஆசிரியர்கள், கல்வி உத்தியோகத்தர்கள் மற்றும் நாட்டின் சுபீட்சத்திற்காக பங்களிப்புக்களை வழங்குவதைப் போன்று மாகாணங்களின் மாணவர்களின் வெற்றிக்காக அர்ப்பணிப்பு மிக்க பணிகளை முன்னெடுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் எனது மகிழ்ச்சியினைத் தெரிவிக்கிறேன். எதிர்கால ஒளிமயமான வாழ்விற்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

றெஜினால்ட் குரே - ஆளுனர்
வட மாகாணம்

## காலை 9.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை

பரிசளிப்பு விழா, கௌரவ ஊர்வலம், கலாசார நிகழ்வுகள், கலாசார இசை நிகழ்ச்சிகள் என்பனவற்றுடன்

**14.10.2017 இன்று சுகி சிவம் அவர்களின் சிறப்புரை**
**15.10.2017 ஞாயிறு திண்டுக்கல் ஐ.லியோனியின் பட்டிமன்றம்.**

### இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பிரதமர் அவர்களின் வாழ்த்துச்செய்தி



மானிட சமூகத்தின் தொடர்பாடல் செயற்பாடு இடம்பெறும் முதன்மை ஊடகமான மொழியானது அனைத்து மக்கட் பிரிவினரதும் கலாசாரத்துடன் முழுமையாகப் பின்னிப்பிணைந்திருக்கின்றது. மொழியானது கலாசாரத்தை செழுமைப்படுத்தும், மெருகூட்டும் காரணியாக விளங்குகின்றது. அதனால் அனைத்து இனத்தவர்களினதும் மொழிகளுக்கு உரிய இடத்தை வழங்கி அதன் ஊடாக கலாசார, ஆன்மீக மேம்பாட்டுக்கு வழிகோலும் நிகழ்ச்சித்திட்டங்கள் அதிகமாக செயற்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

கல்வியமைச்சின் வழிநடத்தலின் கீழ் இதுவரை பாடசாலையுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த தமிழ் மொழித் தின வைபவத்தை இன பேதமின்றி வடக்கு, தெற்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் பிள்ளைகளுடன் இணைந்து, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை கருப்பொருளாகக் கொண்டு மிகவும் விரிவான வகையில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது பாராட்டுக்குரிய விடயமாகும்.

தமிழ் மொழியைத் தமது தாய் மொழியாகக் கொண்ட பிள்ளைகளைப் போன்றே தமிழ் மொழியைக் கற்கும் பிள்ளைகளுக்கும் அது தொடர்பான அறிவு மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்திக் கொள்வதற்கும், அதன் ஊடாக சிறப்பான தொடர்பாடலை மேற்கொள்வதற்கும் இந்த வைபவத்தோடு இணையான வகையில் நடத்தப்பட்ட மொழிப் போட்டி நிகழ்ச்சிகள் பங்களிப்புச் செய்திருக்கும் என நம்புகின்றேன். எமது தாய் நாட்டில் நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காக மொழியை ஓர் தடையாக அன்றி வழிகாட்டியாகக் கொள்வதற்கு இம்முறை யாழ் நகரில் நடத்தப்படும் அகில இலங்கை தமிழ் மொழித் தின வைபவம் உந்து சக்தியாக அமையட்டும் 'எனப் பிரார்த்திக்கின்றேன்.

**ரணில் விக்ரமசிங்க** - பிரதமர்
இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

### கௌரவ இராஜாங்க கல்வி அமைச்சரின் வாழ்த்துச்செய்தி



பாடசாலை மட்டத்தில் தமிழ் மொழி, இலக்கியம் மற்றும் கலை தொடர்பாக பாடசாலை பிள்ளைகளின் ஈடுபாடு மற்றும் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்காக, வருடந்தோறும் கல்வி அமைச்சின் முன்னெடுப்பில் தேசிய, மாகாண வலய மற்றும் பாடசாலை மட்டங்களில் போட்டிகளை ஒழுங்கமைப் பது தொடர்பில் நான் மகிழ்வடைகின்றேன். நாட்டின் அனைத்து பிள்ளைகளும் தமது மொழி, கலாசாரம், கலாசாரத்தில் பொதிந்துள்ள விழுமியங்கள் தொடர்பாக பிரக்ஞைபூர்வமாக செயற்படுவது குறித்து நாம் பெருமைப்பட வேண்டும். அதற்கு பொருத்தமான சூழலை அமைத்துக் கொடுப்பது பாடசாலையினதும் பாடசாலை ஆசிரியர்களினதும் கடப்பாடாக அமையவேண்டும்.

பாடசாலை மட்டத்தில் அது சரிவர மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதாக அனைத்திலங்கை தமிழ் மொழி தின விருது வழங்கல் நடைபெற்று வருவதற்கு வழிசமைத்த அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இனிவரும் வருடங்களிலும் மொழி வளர்ச்சிக்கான நிகழ்ச்சித்திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சு முன்னுரிமை கொடுக்குமென மனப்பூர்வமாக நம்புகின்றேன்.

**வீ.எஸ்.இராதாகிருஷ்ணன்** - பா.உ
இராஜாங்க கல்வி அமைச்சர்

### வாழ்த்துச்செய்தி



2017ஆம் ஆண்டிற்கான தேசிய தமிழ்மொழி தினக்கொண்டாட்டங்கள் 14, 15ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. அச்சந்தர்ப்பத்தில் வெளியிடப்படவிருக்கும் விசேட ஞாபகார்த்த மலருக்கான வாழ்த்துச்செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். தமிழ்மொழி இலங்கையின் அரசகரும மொழிகளுள் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டமை தமிழ் மொழிக்கு கிடைக்கப்பெற்ற தற்போதைய அந்தஸ்த்தை பறைசாற்றுவதாகும். பல வருட நெருக்குதல்களின் பின்னரே இந்நாட்டின் புராதன மொழியாகிய தமிழுக்கு அரசியலமைப்பில் அங்கீகாரம் கிடைத்தது. எனினும் தமிழ் மொழிப்பாவனையில் பல குறைபாடுகள் இருந்து வருகின்றன. எனினும் தேசிய தமிழ் மொழித் தின கொண்டாட்டங்கள் தமிழை வளர்ப்பதற்கு அரும்பாடுபட்ட ஆறுமுகநாவலர் போன்ற பல்மொழி வல்லுனர்களும், புலவர்களும், பண்டிதர்களும் வாழ்ந்த யாழ்.மண்ணில் முன்னெடுக்கப்படவிருப்பது மகிழ்விற்குரியது.

இத்தேசிய தமிழ் மொழித் தின கொண்டாட்டங்களின் போது இந்நிகழ்வை சிறப்பிப்பதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களும் அவர்களுடன் இணைந்த அமைச்சரவையினர் சிலரும் இங்கு வர இருப்பது எமக்கு மகிழ்வைத்தருகின்றது. இந்நாட்டில் 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தமிழ் மொழி பாவிக்கப்பட்டு வருகின்றது. அண்மைய கல்வெட்டுக்களும் அகழ்வுகளும் அதற்கு சான்று பகிர்கின்றன. தொடர்ந்தும் எம்மொழி பல்லாயிரம் ஆண்டுகள் இந்நாட்டில் நிலைத்து நிற்க இறைவன் வழி அமைப்பானாக. நன்றி

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்** - முதலமைச்சர்
வடமாகாணம்.

### செம்மொழியாம் தமிழ் மொழியின் விழா சிறப்புற வாழ்த்துக்கள்



உலக மொழிகளில் செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டு தமிழ் மக்களால் மட்டுமல்லாது ஐரோப்பிய ஆங்கில மொழி பேசும் மக்களாலும் போற்றப்படுகின்ற தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டிற்கும் மேற்பட்ட வரலாற்றைக்கொண்ட ஒரு மொழியாகும். சங்க காலத்துப் புலவர்களில் இருந்து 21 ஆம் நூற்றாண்டு வரையான இன்றைய காலம் வரை காலம் காலமாக அவ்வக் காலங்களில் வாழ்ந்த புலவர் பெருமக்களாலும், அறிஞர்களாலும் படைக்கப்பட்டு வரும் இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்வையும், வாழ்வுரிமையையும் சிறப்பாக பேசிக்கொண்டு இருப்பதாலேயே தமிழ்மொழி இன்றும் செழுமையுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இவ்வளவு பெருமைகளையும் கொண்ட தமிழ் மொழியின் சிறப்புக்களி னால், இன்று அது ஒரு "இறை மொழி" என்ற அந்தஸ்தையும் பெற்று திராவிட மொழிகளில் முதன்மை மொழியாகப் புகழப்படுகின்றது.

செவிக்கினிய இசையையும், கண்ணுக்கு விருந்தளிக்கும் கலையையும், அறிவுக்கும், உளத்திற்கும் உரமூட்டும் இலக்கியங்களையும் இந்த மண்ணுக்குப் படைத்த தமிழ்மொழி வரலாறுகள் தமிழர்களின் புகழையும் அவர்களின் வீரத்தையும், காதலையும் பேசிவருகின்றதால் அது ஒரு மக்கள் மொழியாக நிலைத்து நிற்கின்றது. அத்தகைய இனிய மொழிக்கு கல்வி அமைச்சு கடந்த காலங்களில் இருந்து பல வருடங்களாக விழா எடுத்து வருவது தமிழர்களாகிய எங்களைப் பெருமைப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இன்று மாணவர்களிடையே வாசிப்புத் திறனும் அதனூடாக வளர்ந்து வரும் படைப்பாக்கல் திறனும் அருகி வருகின்ற நேரத்தில் தமிழ் பேசும் மாணவர்களின் மொழித்திறன் மற்றும் கலைத்திறனை வளர்க்கும் வகையிலான போட்டிகளை நடத்தி அவர்களின் மொழி ஆற்றலை மேம்படுத்துவதில் கல்வி அமைச்சு ஈடுபட்டு வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளின் பரிசளிப்பு வைபவத்தையும், தேசிய தமிழ் மொழித் தினத்தையும் இவ்வாண்டு வடமாகாணத்தில் கொண்டாடுவதற்கு முன்வந்த கல்வி அமைச்சர் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்

ஒக்டோபர் மாதம் 14 தொடக்கம் 15 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவுள்ள தேசிய தமிழ் மொழித்தின விழா சிறப்பாக நடைபெறவும், அதன் நினைவாக வெளியிடப்படவுள்ள சிறப்பு மலரும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், தமிழ் மக்களின் அடையாளத்தைப் புலப்படுத்துவதாகவும் அமைய வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி. கந்தையா சர்வேஸ்வரன்**
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,
வடமாகாணம்.

**இவ்விழாவில் பிரதம அதிதியாக**
**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சனாதிபதி**
**மைத்திரிபால சிறிசேன அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.**

## இடம் : யாழ்.இந்துக்கல்லூரி மைதானம்
## காலம் : 2017 ஒக்டோபர் மாதம் 14, 15ஆம் திகதிகளில்

**தேசிய ரீதியில் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற தமிழ் மொழித்தின போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான விருதுகள் வழங்கப்படும்.**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

### அனுசரணையாளர்கள்:

**கிருபா லேனர்ஸ்** யாழ்ப்பாணம். | **தேனு களஞ்சியம்** திருநெல்வேலி சந்தி. திருநெல்வேலி . | **விஜிதா அரிசி ஆலை** தாவடி | **சிவன் Foundation**


விசேட விலைக்கழிவு
லங்கா ரைல்ஸ் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட முதல் தர 2'x 2' அளவிலான ரைல்ஸ் வகைகளுக்கு...
NHT
LANKATILES
நிலப்பதிப்பு, சுவர்ப்பதிப்பு ரைல்களின் ஏக விநியோகஸ்தர்கள்
தரமான Commode வகைகள், குளியலறை சாதனங்களையும் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நாராயணா கட்டடப் பொருட்கள் வர்த்தகர்
92C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 5390, 021 567 5390


விசேட விலைக்கழிவு
யாழ் நகரில் நவீன
Digital 3D Wall & Floor Tiles
மற்றும்
குளியலறை சாதனங்களுடன்
HOUSE OF CERAMIC
பிரமிக்கவைக்கும் பிரம்மாண்ட காட்சியறையில்
வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ற தெரிவுகள்
3D Digital Tiles
LANKATILES
Tiles விசேட விலைக்கழிவில்
115, Stanley Road, Jaffna.
Tel: 021 221 9599
NO 581, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 9599



# குட்டிக் கதைகள்

## அப்போது இனித்தது இப்போது கசக்கிறது



அந்தத் தாய் தன் மூத்த மகன் சிறுவனாக இருக்கும் போது உறவினர்களின் சொத்துக்களைச் சுரண்டி வந்து தன் சகோதரர்களுக்கு வழங்கிய போது மகிழ்ந்திருந்தார். அந்தப் பழிக்குத் தண்டனையாக இப்பொழுது அந்த மூத்த மகன், திருமணமாகிய பின் தன் சகோதரர்களின் சொத்துக்களைச் சுரண்டித் தன் மனைவி மக்களுக்குச் சேமிப்பதைப் பார்த்து மனம் வேகிறாள்.

## அடிக்கும் அஞ்சாத ஆசிரியர்

அந்த ஆபிரிக்கப் பள்ளியில் ஒரு மாணவனால் தாக்கப்பட்ட ஆசிரியர் கூறினார் "உங்கள் தாக்குதல்களை நான் உடல் நலத்துடன் உள்ள தற்காலத்தில் தாங்கிக் கொண்டு உங்களுக்குக் கற்பிக்கத் தவறினால் நீங்கள் பிற்காலத்தில் நிலை கெட்டு அலையும் போது என்னைத் தாக்கினால் முதுமை காரணமாக அதைத் தாங்க முடியாமல் நான் இறக்க நேரிடும் ஆதலால் இப்பொழுது அடி வாங்கி வாங்கியும் உங்களுக்குக் கற்பித்தேன் தீருவேன்.




## நவீன மனிதன்



ஒரு மனித உடல் வரைந்து உடல் உறுப்புகளுக்கு பெயர் குறிக்கும்படி, ஒரு பாடசாலை ஆசிரியர் தெரிவித்தார். மாணவர்களில் அநேகர் காதில் அலைபேசி பிடித்த படியான மனித உருவை வரைந்து கண், மூக்கு, காது முதலிய வற்றுடன் அலைபேசியையும் ஓர் உடலுறுப்பாகப் பெயரிட்டிருந்தனர்.

# இரு படங்களிலும் 7 வித்தியாசங்கள் உள்ளன; கண்டுபிடியுங்கள்



# சிலேடைச் சிதறல்கள்

வேறெந்த மொழிக்கும் இல்லாத பல சிறப்புக்கள் எமது தாய் மொழியாகிய தமிழ்மொழிக்கு உண்டு. அதில் ஒன்று இரண்டு பொருள் தரும்படியான வார்த்தைகள் ஏனைய மொழிகளை விட தமிழில்தான் உள்ளன. ஒரு வார்த்தையை இரு பொருள் தரும்படி அழகாகப் பேசுவதை சிலேடை என்று அழைப்பார்கள்.

ஒரு மடாதிபதி தமிழ்ப் புலவர்களை எல்லாம் அழைத்து விருந்து ஒன்று வைத்தாராம். எல்லா ஊர்களில் இருந்தும் புலவர்கள் வந்து விருந்தில் அமர்ந்தனர். ஹீவைக் குண்டம் என்ற ஊருக்குப் பக்கத்தில் 'கடை படை' என்ற ஊர் ஒன்று இன்றைக்கும் இருக்கிறது. அவ்வூரைச் சேர்ந்த புலவர் ஒருவர் விருந்துக்கு மிகத் தாமதமாக வந்து சேர்ந்தார். மடாதிபதி அவரை வரவேற்கும் முகமாக வாரும் கடை மடையரே என இரு பொருள்பட அழைத்தாராம். கடை மடை என்ற ஊரைச் சேர்ந்தவரே என்பது ஒரு பொருள் கடைசியாக வந்த மடையரே என்பது மற்றொரு பொருள். வந்த புலவர் லேசுப்பட்டவரல்ல. அவரும் பதிலுக்கு " வந்தேன். மடத் தலைவரே என்றாராம். இதற்கு மடத்துக்கு தலைவரே என்பது ஒரு பொருள். மடையர்களுக்கெல்லாம் தலைவரே என்பது மற்றொரு பொருள்.

பெரும் புலமை பெற்ற ஒருவர் பாட்டுப் பாடுவதிலும் வல்லமை பெற்றிருந்தார். அவர் தன் ஊரில் உள்ள கடைத் தெருவுக்கு ஒருநாள் வந்த போது அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்த கிராமத்து ஆசாமி ஒருவன் அவரை நெருங்கி "ஐயா நான் உங்களைப் பாடையில் பார்க்க வேண்டும் என்றானாம். பர்டும் போது பார்க்க வேண்டும் என்பதை அப்படிச் சொல்லியிருக்கிறார். புலவரும் அசராமல் 'அப்ப சாகையில் வந்து பார்" என்றாராம். சாகை (ஜாகை) என்பது இருப்பிடத்தை குறிக்கும். "வீட்டில் வந்து பார் என்பதை இப்படி அழகாக சிலேடையில் கூறிச் சென்றுள்ளார் புலவர்.

# மாற்று வலுவுள்ளோருக்கு உதவுவோம்

- மாற்றுவலுவுள்ளோர் என்போர் மற்றவர்களோடு ஒப்பிடுகையில் ஒரு விதத்தில் உடல் வலிமையில் இயலாத் தன்மை உடையவர்களாக இருப்பர்.
- ஆனால் இவர்களுக்கு அத்தன்மையில் குறைபாடு இருப்பினும் வேறு வகைகளில் அவர்கள் கூடிய திறன் பொருந்தியவர்களாக இருப்பர். இதனாலேயே இவர்கள் மாற்றுத் திறன் உடையவர்களாகக் கருதப்படுகிறார்கள்.
- இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் குறைபாடு உடற் குறைபாடாகவோ, புலன் குறைபாடாகவோ, அறிவுத் திறன் குறைபாடாகவோ, உளவியல் குறைபாடாகவோ இருக்கும்.
- இந்தக் குறைபாடுகள் ஒருவருடைய அன்றாட வாழ்க்கைக் காலத்தில் அன்றேல் பிறப்பிலேயே ஏற்படுவது உண்டு.
- மாற்று வலுவுள்ளோரில் பெரும்பாலானோர் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைபாடு காரணமாகத் தமது அத்தியாவசிய தேவைகளுக்கு கூடியளவு மற்றவர்களைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது.
- இவர்களை நாம், நம்மைப் போல மதித்து அவர்களுக்கு உதவி தேவைப்படும் போதும் முழுமனதுடன் செய்ய வேண்டும்.
- இவர்கள் மன உறுதியும் தன்னம்பிக்கையும் கொண்டு வாழ்ந்தால் வாழ்வில் வளம் பெற முடியும்.
- இந்த மாற்று வலுவுள்ளோர் மனம் சோர்ந்து போகாது சுயமுயற்சியின் மூலம் முன்னேறி சாதனைகள் படைத்த வரலாறுகள் பல உள்ளன.
- ஊனம் உயர்வுக்கு தடையல்ல என்பதை மனதில் கொண்டு இவர்கள் செயற்பட வேண்டும்.
- இவர்களது உயர்ச்சிக்கு நாமும் ஏதோ ஒரு வகையில் உதவிட வேண்டும்.
- இவர்களை மனம் நோகும்படி ஏளனமாகப் பேசக் கூடாது.
- இவர்கள் மேல் அன்பும் பரிவும் காட்டி அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது எமது தலையாய கடமையாகும்.



# பறவைகளின் கூட்டு வாழ்க்கை


காகம் தான் கண்டடைந்த இரையை காகங்களையும் கூவியழைத்துப் பின்பு எல்லாக் காகங்களையும் பகிர்ந்து உண்ணச் செய்யும். ஆல மரங்களிலும் அரச மரங்களிலும் சிட்டுக் குருவிகளும் கனிகளும், வௌவால்களும், கொக்குகளும் கூட்டமாக வாழ்ந்திருப்பது பறவைகளின் கூட்டு வாழ்க்கைக்கு சிறந்த எடுததுக்காட்டாகும்.

பறவைகள் ஒன்று சேர்ந்து கூட்டு வாழ்க்கை நடத்துவதால் தங்கள் வாழ்விடத்தை மற்ற இனப் பறவைகள் வந்து கைப்பற்றாத படி தடுத்து காப்பாற்றிக் கொள்கின்றன. சிறிய பறவையாக இருந்து தனியே இரை தேடப் புறப்பட்டால் பெரிய பறவைகளால் அதற்கு ஆபத்து நேரிடும் ஆகவே பறவைகள் இரை தேடப் புறப்படும் போது ஓரிடத்தில் பெருங் கூட்டமாகக் கூடி பின்பு ஒன்றாகப் புறப்படும். உதாரணமாக ஒரு வகைச் சிட்டுக் குருவிகள் ஒருங்கே தந்திக் கம்பிகளில் கூடி பின்பு ஒன்றாகச் சேர்ந்து இரை தேடப் பறந்து செல்வதை நாம் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறோம். மாடப்புறாக்கள் பெருங் கூட்டமாக கூடி வாழும் இயல்புடையவை. காலையில் சிறு கூட்டங்களாகப் போய் பயிர் நிலங்களில் இறங்கி மேயந்து விட்டு மாலையில் தங்கள் இருப்பிடத்தைநோக்கித் திரும்பும் முட்டை அல்லது குஞ்சுகளைத் தங்கள் கூடுகளில் வைத்துள்ள் புறாக்கள் மட்டும் தாங்கள இரை தேடும் இடத்திலிருந்து மற்றப் புறாக்களை இடைநடுவில் விட்டுவிட்டு தங்கள் கூடுகளுக்குத் திரும்பி குஞ்சுகளுக்கு உணவளிப்பதுடன் முட்டைகளுக்கும் மற்றப் பிராணிகளுக்கு தீங்கு வராமல் பாதுகாக்கும். பறைவகளுக்குள் கொக்கு இன சோடிகளுள் ஆணோ பெண்ணோ இறக்க நேரிட்டால் மற்றது மாளாத் துயரத்தால் இறந்து போகும். வேறு துணையையும் நாடாது. பறவைகளின் கூட்டு வாழ்க்கையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை அனேகம் உள்ளன.



# வழிகாட்டுவோம்








சிகரெட் பிடிக்கக் கூடாது, குடித்துவிட்டு வண்டி ஓட்டக்கூடாது, ஹெல்மெட் அணிய வேண்டும், சீட் பெல்ட் போட்டுக்கொண்டு கார் ஓட்டவேண்டும் என்கிற அடிப்படையான விஷயங்களை எமக்கு முழுமையாக உணர்த்த யாராவது செத்துப் போக வேண்டியிருக்கிறது!

தங்கத்தை விதம்விதமா அணிகலன்கள் செய்து மாட்டிக் கொள்ளலாம்; ஆனா 'ஆதங்கத்தை' அப்படியெல்லாம் அணிய முடியாது...!




# 2.0 இல் ரோபோ தோற்றத்தில் எமிஜக்சன்

2.0 படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பு தொடங்கியுள்ள நிலையில், இயக்குநர் ஷங்கர் தனது ருவிற்றரில் எமிஜக்சனின் ஒளிப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிப்பில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் படம் 2.0. முழுக்க முழுக்க 3டி தொழில்நுட்பத்தில் தயாராகி வருகின்றது.

தற்போது இந்தப் படத்தின் இறுதிக் கட்டப் படப்பிடிப்புக்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்தப் படப்பிடிப்பைத் தொடர்ந்து, இயக்குநர் ஷங்கர் தனது ருவிற்றர் பக்கத்தில் படத்தின் நாயகி எமிஜக்சனின் புதிய ஒளிப்படத்தை வெளியிட்டுள்ளார். இந்தஒளிப்படத்தில்ரோபோ தோற்றத்தில் எமிஜக்சன் உள்ளார்.

இந்த ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் பிரபல்யமாகப் பரவி வருகிறது.

இந்தத் திரைப்படத்தை 2018 ஜனவரியில் உலகமெங்கும் பிரம்மாண்டமாக வெளியிடுவதற்கு லைகா நிறுவனம் முடிவு செய்திருக்கிறது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிறரது ஏளனப் பேச்சுக்காக மனம் வருந்த வேண்டாம். குடும்பத்தினர் ஆதரவாக நடந்து கொள்வர். பணவரவால் முக்கியத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** புதிய நண்பரின் அறிமுகமும் ஆலோசனையும் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து நல்ல இலாபம் பெறுவீர்கள்.

**மிதுனம்:** உறவினர்களிடம் விவாதம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வாய்ப்பைப் பயன்படுத்துவது அவசியம். சேமிப்புப் பணம் செலவுகளுக்குப் பயன்படும்.

**கடகம்:** நற்குணம் உள்ளவரின் நட்பு கிடைக்கும். தாமதமான திட்டங்கள் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை கடும் முயற்சியால் அதிகரிக்கும்.

**சிங்கம்:** புதிய சிந்தனையுடன் செயல்படுவீர்கள்; தொழில், வியாபாரத்தில் சிறு பிரச்சினை ஏற்படலாம். பணவரவைத் தக்க வைக்க முயற்சி எடுப்பீர்கள்.

**கன்னி:** விலகிய உறவினர் ஒருவர் சொந்தம் கொள்ள வருவார். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சிப் பணிகள் எளிதாக நிறைவேறும். .

**துலாம்:** உறுதியான மனதுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க அனுகூல காரணி பலம் பெறும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**விருச்சிகம்:** அனுபவசாலியின் ஆலோசனையால் பணி சிறப்பாக அமையும். தொழில், வியாபாரத்தில் சுமாரான உற்பத்தி, விற்பனை இருக்கும்.

**தனுசு:** திட்டங்கள் நிறைவேற கூடுதல் முயற்சி வேண்டும். தொழில், வியாபாரத்தில் குறுக்கீடு ஏற்பட்டு சரியாகும். இன்று நீங்கள் யாரிடமும் கடன் பெற வேண்டாம்.

**மகரம்:** அறிவுப் பூர்வமாக செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவால் சேமிப்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரம் நண்பர்களின் உதவியால் வளர்ச்சி பெறும். பணவரவு அதிகரிக்கும்.

**மீனம்:** உங்கள் செயலில் முன்யோசனை வேண்டும். தொழில், வியாபாரத்தில் நேற்றைய நிலையே இன்றும் தொடரும். மனைவியின் அன்பு கிடைக்கும்.

# மகிழ்ச்சிக்கு வழி

"நான் துன்பச் சிறையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.
" என்ன காரணம்?" என்று கேட்டார் ஒரு பெரியவர்.
"மற்றவர்கள் எனக்குத் துன்பம் கொடுக்கிறார்கள்"
"உனக்குத் துன்பம் கொடுப்பது உன்னுடைய மனம்தான்"
"அப்படியா சொல்கிறீர்கள்?"
"ஆமாம்!"
"அப்படியானால் துன்பத்திலிருந்து விடுபட என்ன வழி?"
"மனதைப் புரிந்து கொள்... அது போதும்."
"எப்படிப் புரிந்து கொள்வது?" என்றான் அவன்.
"இந்தக் கதையைக் கேள்" என்று கதையைச் சொல்லத் தொடங்கினார் பெரியவர் -"ஒருவர் ஆசையாக ஒரு பூனையை வளர்த்தார். அந்தப் பூனை ஒருநாள் எலியைப் பிடித்து கவ்விக் கொண்டு வந்தது. அவருக்கு அது மகிழ்ச்சியாக இருந்தது. மறுநாள் அந்தப் பூனை, அவர் ஆசையாக வளர்த்த ஒரு கிளியைக் கவ்விக் கொண்டு வந்தது. அவருக்கு அது அதிர்ச்சியாக இருந்தது.
இன்னொரு நாள் அந்தப் பூனை எங்கேயோ சென்று காட்டிலேயிருந்து ஒரு குருவியைப் பிடித்துக் கவ்விக் கொண்டு வந்தது.
இப்போது அவர் மகிழவுமில்லை: வருந்தவுமில்லை.
எதையாவது பிடிப்பது பூனையின் சுபாவம் என்பதைப் புரிந்து கொள்ள அவருக்குக் கொஞ்ச காலம் ஆயிற்று.
தனக்குப் பிடிக்காத எலியைப் பிடிக்கிறபோது இன்பம். தனக்குப் பிடித்தமான கிளியைப் பிடிக்கிறபோது துன்பம், தனக்குச் சம்பந்தமே இல்லாத குருவியைப் பிடிக்கிறபோது இன்பமுமில்லை... துன்பமுமில்லை..." என அவர் கதையை முடித்தார். இவன் சிந்திக்கத் தொடங்கினான்.
துன்பச் சிறையின் கதவுகள் திறக்கப்படுகிற ஓசை அவன் செவிகளில் விழுந்தன.

**"மனதைப் புரிந்து கொள்கிறவர்களே மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்"**




| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 4 | 9 | | 5 |
| | 1 | | | 9 | | | | |
| | 2 | | 8 | 3 | | | | |
| | 8 | | | | | 3 | | 2 |
| | | 6 | 3 | | 7 | 1 | | |
| 7 | | 1 | | | | | 6 | |
| | | | | 7 | 8 | | 5 | |
| | | | | 8 | | | 9 | |
| 3 | | 4 | 5 | | | | | |

# சுடோக்கு
## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

# வரலாற்றில் இன்றைய தினம்

## 14.10.2017

1884 - அமெரிக்கக் கண்டுபிடிப்பாளர் ஈஸ்ட்மன்புகைப்படச்சுருளுக்கான அமெரிக்க அரசின்காப்புரிமத்தைப் பெற்றுக்கொண்டார்.

1898 - பிரிட்டனில் நீராவிக் கப்பலொன்று விபத்துக்குள்ளாகி மூழ்கியதில் 106 பேர் சாவடைந்தனர்.

1940 - பிரிட்டன் மீது ஜேர்மனி நடத்திய வான்தாக்குதலால், லண்டன் ரயில்நிலையம் தாக்குதலுக்கு உள்ளானது. அதில் 66 பேர் சாவடைந்தனர்.

1944 - ஹிட்லரை கொல்லச் சதி செய்த பீல்ட் மார்சல் எர்வின் தொம்மல், தற்கொலை செய்து கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்டார்.

1968 - அப்பல்லோ விண்வெளி வீரர்களின் விண்வெளிச் செயற்பாடுகள் பூமிக்கு நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்பட்டன.

1981 - ஹொஸ்னி முபாரக், எகிப்தின் அதிபராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

2015 - பாகிஸ்தானில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்ததுடன் 15 பேர் காயமடைந்தனர்.

2007 - நிலையான தீர்வுக்கு பேச்சு நடத்த அரசு தயாராகவே உள்ளது என்று அப்போதைய இலங்கை அரச தலைவர் மகிந்த புதுடெல்லியில் வைத்துத் தெரிவிப்பு.

2007 - யாலஇராணுவமுகாம்மீதுபுலிகள் அதிரடித் தாக்குதல். 6 சிப்பாய்கள் சாவு.



1964 - இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடியமைக்காக மார்ட்டின் லூதர் கிங்குக்கு அமைதிக்கான நோபல் பரிசில் வழங்கப்பட்டது.

## நாளை

**15.10.2017**
ஞாயிற்றுக்கிழமை

**புரட்டாதி 29**

திதி: ஏகாதசி பி.இ. 02.41 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப. 09.00 வரை
சுபநேரம்: 09.02–10.32 வரை
ராகுகாலம்: 04.32–06.02 வரை

**ஏகாதசி விரதம்**

# வலம்புரிச் சங்கின் மகிமைகள்



வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்தால் இழந்த செல்வத்தை மீண்டும் பெறலாம். ஆனால் வலம்புரிச் சங்கை வீட்டில் எப்படி வைத்திருக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்....

வலம்புரிச்சங்கை வீட்டில் அல்லது தொழில் செய்யும் இடங்களில் வைத்துக் கொள்ளலாம். ஆனால் வலம்புரிச் சங்கை சுத்தமாக வைத்து தினமும் பூஜித்து வர வேண்டியது அவசியம்.

சித்திரா பௌர்ணமி, ஆனி மாத வளர்பிறை அஷ்டமி, ஆடி மாத பூர நட்சத்திரம், புரட்டாதி மாத பௌர்ணமி போன்ற ஆன்மிக சிறப்பு நாள்களில் வலம்புரிச் சங்கில் பால் வைத்து மகாலட்சுமிக்கு பூஜை செய்து வந்தால் கணவன் - மனைவி நல்ல ஆயுளுடன் இருப்பார்கள்.

தினமும் வலம்புரி சங்கில் நீர் மற்றும் துளசி போட்டு அதைத் தினமும் குடித்து வந்தால் ஆரோக்கியம் சிறக்கும்.

பஞ்சமி திதி நாளில் வலம்புரிச் சங்கில் தூய்மையான பசும் பால் ஊற்றி பூஜை செய்து வந்தால் குழந்தை இல்லாத கணவன் - மனைவிக்கு புத்திர பாக்கியம் கிட்டும்.

உங்கள் வீட்டில் வலம்புரிச் சங்கை வைத்து பூஜித்து வந்தால் பில்லி, சூனியம், செய்வினை போன்றவற்றின் தாக்கம் அண்டாது.

20/-
இந்த வாரம்
சே குவேரா என்றென்றும் நாயகன்
ஜெனீவாவில் நடந்தது என்ன?
தமிழன் அடிமைச் சமூகமா...?
சமூக ஊடகத்தின் அடிமையா நீங்கள்
செல்வங்களை அருள்பவள் மூதேவி
ஈழக்கிராமங்களின் மண் வாசனை - தொண்டைமானாறு
விடியலுக்காக எண்ணப்படும் நாட்கள்
மற்றும் பல்சுவை அம்சங்களுடன்


சனிக்கிழமைகளில் அனைத்து முகவர்களிடமும் கிடைக்கும்.
தொடர்புகளுக்கு :- 021 492 7570

# கொண்டலாத்திப் பறவைகள்

## இலக்கிய இயைபாக்கமுடைய உயிரினத் தனிமங்கள்

தமிழ்கோ




பறவைகளைப்பற்றிய ஆய்வும்,குறிப்பு சேகரித்தலும் சுமேரிய நாகரீக காலத்தில் கி.மு 3500 ஆம் ஆண்டுகளில் தொடங்கியது என்கிறார் 'சார்ஜன்ட் ஜோனாதன் டிரஷன் டிரண்ட்'. இவர் அமெரிக்க இராணுவ வீரர். சதாம் குசைனுக்கு எதிரான அமெரிக்கப் போரில் ஈராக்கிற்கு சென்றவர். போர்க்காலத்திலும் அரேபிய பறவைகளைப்பற்றிய குறிப்புகளை சேகரித்துக் கட்டுரைகள் எழுதி தன் மனப்பதட்டத்தைக் குறைத்துக் கொண்டதாக கூறுகிறார். சதாம் குசைன் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை அபகரித்து அங்குள்ள ஈச்ச மரங்களையும் ஏனைய மரங்களையும் அழித்த போது அங்கிருந்த 42 வகையினத்தைச் சார்ந்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் இடம்பெயர்ந்தன. தவிர அங்கு பறவைகளை நாட்டு மருத்துவர்கள் எவ்வாறு மருந்து தயாரிக்கப் பயன்படுத்துவர் என்பதையும் சுவைபட விவரிக்கிறார். அங்கு கொண்டலாத்தி பறவைகளைப் பிடித்து அதன் தசை, எலும்புகளிலிருந்து ஆண்மை விருத்தி லேகியம், ஆண் உறுப்பின் நீடித்த விறைப்புத் தன்மைக்கான எண்ணெய் போன்றவை தயாரிக்கப்படுவதைத்தான் பார்த்ததாகவும், அதற்காகப் பல பறவைகள் கொல்லப்பட்டதாகவும் தனது அனுபவக் குறிப்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

> ஐ.நா.வின் பறவைகள் ஆய்வு நிறுவனம் ஆசிய அளவில் அழிந்து வரும் பறவையினமாக இவற்றை பட்டியலிட்டுள்ளன. அந்தவகையிலே மரங்கொத்தி இனம் சார்ந்த இப் பறவைகளை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என பறவையியலாளர்கள் கருத்துரைத்துள்ளனர்.

### தோற்றமும் தன்மையும்

கொண்டலாத்திகள் மண் கொத்திகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை நடுத்தர அளவிலானவை. 25 தொடக்கம் 35 சென்ரி மீற்றர் அளவுடையவை. இறகுகளை விரிக்கும் போது 45 தொடக்கம் 50 சென்ரி மீற்றர் நீளம் கொண்டவை. நன்கு வளர்ச்சியடைந்த பறவையின்நிறை அரைக் கிலோ மட்டுமே.இவை மிகுந்த கூச்ச சுபாவமும், படபடப்பு தன்மையும் கொண்டவை. கும்பலாக வாழ்ந்தாலும் ஒற்றுமையாக வாழ்வதில்லை. அடர்ந்த மரங்கள் ,குளம், ஓடை அல்லது நீர் உள்ள இடங்களையே தமது இருப்பிடமாகத் தேர்ந்தெடுக்கின்றன. இதன் தலையில் அமையப்பெற்ற கொண்டை



யாலேயே இவற்றுக்கு இப்பெயர் வந்ததோ என வியக்கும் அளவுக்கு அழகிய கொண்டைகளை உடையவை.

### உணவு

தங்களுடைய வலிய வளைந்த அலகுகளைக் கொண்டு மண்ணைப் பிளந்து நண்டு, புழு, பூச்சியினங்களைப் பிடித்து உண்கின்றன.இந்தச் செயல்நிலையின் போது கொத்துவதற்கு ஏதுவாக இக்கொண்டைகள் உதவிபுரிகின்றன. வயல்வெளிகள், தோட்டங்களில் உள்ள பூச்சிகள், கூட்டுப்புழுக்கள், முட்டைகளை அழித்து விடுவதால் இவை விவசாயிகளின் உற்ற நண்பன் என்றும் அழைக்கப்படுகின்றன.

### இனப்பெருக்கம்

வண்ணக் கலப்பும், இறகு அமைப்புகளும் பார்ப்பதற்கு வெளிநாட்டுப்பறவைகளின் தோற்றத்தைத் தருகின்றன. ஏனைய பறவைகளைப் போலவே இதன் காதல் லீலைகள் இருக்கும். காதல் காலங்களில் மட்டுமே ஆண்களும் பெண்களும் இணைந்திருக்கும். இது தற்காலிக உடன்படிக்கையே. மரப்பொந்து, சுவற்றில் காணப்படும் ஓட்டைகள் அல்லது பிற பறவைகளின் கூடுகளை ஆக்கிரமித்து அதில் 4 தொடக்கம் 5 வரையான வெளிர் நீல நிற முட்டைகளை இடுகின்றன. 18 நாள்களில் அவை பொரிந்து விடும்.
குஞ்சுகள் ஒரு மாதத்தில் தாங்களாகவே இரை தேடத் தொடங்குகின்றன. அதுவரை அவை தாய், தந்தையரின் பராமரிப்பில் இருக்கின்றன. குஞ்சுகள் உள்ள கூடுகள் துர்மணத்தைக் கொண்டிருக்கும். பெண் குருவியின் கழுத்தருகே உள்ள ஒரு சுரப்பியிலிருந்து வெளிவரும் திரவமே இந்த அழகிய அருவருப்பான வாசனைக்குக் காரணம். இது எதிரிகளிடமிருந்து தன்னையும், குஞ்சுகள்ளயும் காத்துக் கொள்ளும் ஒரு உத்தியே என்கின்றனர் ஆய்வாளர்கள். தவிர துர்நாற்றம் வீசும் பல பொருள்களையும் கொண்டுவந்து கூட்டுக்குள் அடைத்து வைக்கின்றன. இதனால் குஞ்சுகளுக்கோ பறவைகளுக்கோ எந்த வித தொற்றோ வியாதிகளோ ஏற்படுவதில்லை.

### குரலின் தனித்துவமும் அழிவும்

இதையும் மீறி எதிரிகள் நுழைய முற்படும்போது குஞ்சுகளே அண்ணளவாக18 விதமான குரலோசைகளை எழுப்புகின்றன. இவை கேட்பதற்கு நாராசமாகவும், பயமாகவும் இருக்கும். செர்ரி, பிளம்ஸ் போன்ற இனிப்பும் புளிப்பும் கலந்த பழங்களை விரும்பி உண்ணுகின்றன. ஆணே தலைமை தாங்கும். பெண்ணை அடையும் முயற்சியில் இரு ஆணிற்கிடையே ஏற்படும் சண்டையில் அவற்றுள் ஏதாவது ஒன்று மரணிக்கும். அலகால் ஒன்றையொன்று குத்திக் கொள்வதால் மரணம் நிகழ்கிறது. பெண்கள் பிற குஞ்சுகளைக் கொல்வதும் உண்டு. இதுவே இதன் இனப்பெருக்க குறைவுக்குக் காரணம். மேலும் கூட்டில் சேமித்து வைக்கப்படும் உணவினை எடுப்பதற்கு வரும் இவ்வினத்தின் பிற பறவைகளாலேயே குஞ்சுகளும், தாயும் கொலை செய்யப்படுவதும் உண்டு எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.
பல்வேறு குரல் பாவங்களை உருவாக்கும் இவை எப்படியாயினும் மூன்று முறை என்ற அளவீட்டிலேயே இருக்கும். குரலிசை மாறுபாடு தான் சந்திக்கும் சூழலின் தன்மையைப் பிரதிபலிப்பதாக இருக்கும். உதாரணமாக கூட்டில் அடைகாத்துக் கொண்டிருக்கும் பெண்ணைப் பிற ஆண் சந்திக்கும்போது பெண் "க்ரீச்…க்ரீச்…க்ரீச்" என தனது இறகுகளைப் படபட வென அடித்து ஒலி எழுப்பும்.

### சூழல் இயைபாக்கம்

தனது உடலை சூரிய ஒளியில் சூடேற்றிக் கொள்ளும் போது முழு இறகுகளையும் விரித்து உறங்கும். இது பிற பறவைகளுக்கு உதாரணமாக கொக்கு, காக்கை போன்றவற்றுக்கு விநோதமாக தெரிவதால் அவை இவற்றின் அருகாக வர அஞ்சுகின்றன. விருட்டென்று அதிக வேகத்துடன் பறக்கும் கொண்டலாத்திகள் பருவ நிலை மாற்றத்தின்போது கண்டம் விட்டு கண்டம் கூட செல்லும் என உறுதியாகக் கூற முடியா விட்டாலும் மிக அதிக உயரத்தில் பறக்கும் இயல்பு கொண்டவை என்கிறார் 'டிரண்ட்'. இவை உயரத்தில் பறக்கும் போது வல்லூறுகள் போல் இறகுகளை அசைக்காமல் விரித்தவாறே சில நிமிடங்கள் ஓய்வெடுக்கின்றன. தவிர பறக்கும் போதே தூங்கிக் கொள்வதும் உண்டு.

### இலக்கியச் சிறப்பு

இத்தகு தன்மைகளை உடைய அழகிய இப்பறவை பண்டைய எகிப்திய இலக்கியங்களில் ஒரு கதாபாத்திரமாகவே சித்தரிக்கப்படுகின்றன. இஸ்ரேல் நாடு தனது தேசியப் பறவையாக அங்கீ கரித்துள்ளது. சிற்றிலக்கியங்களை எடுத்து நோக்கின் 'குற்றாலக் குறவஞ்சியில்' வேட்டைக்காரனான சிங்கனும், சிங்கியும் இப்பறவை குறித்த கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதை அவதானிக்கலாம். இன்னும் பல ஆரம்பகால மற்றும் உலக இலக்கியங்களிலும் இவை வேறு பெயர்களில் சித்தரிக்கப்பட்டி ருக்கின்றன.
ஐ.நா.வின் பறவைகள் ஆய்வு நிறுவனம் ஆசிய அளவில் அழிந்து வரும் பறவையினமாக இவற்றை பட்டியலிட்டுள்ளன.அந்தவகையிலே மரங்கொத்தி இனம் சார்ந்த இப் பறவைகளை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என பறவையியலாளர்கள் கருத்துரைத்துள்ளனர். ■


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கமலா சந்திரசேகரம்



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், கட்டைப்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலா சந்திரசேகரம் (12.10.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாம்பசிவம் பத்மாவதி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை பார்வதி தம்பதியரின் மருமகளும் சந்திரசேகரம் அவர்களின் அன்புமனைவியும் பிரசாத் (செயலாளர் வல்வெட்டித்துறை நகரசபை), பிரபாகரன், பிரதீபா ஆகியோரின் அன்புத்தாயாரும் அருட்செல்வி, ஸ்ரீதேவி, பிரபானந்தா ஆகியோரின் மாமியும் நித்திலன், அபிநயனி, டிலானி, அனோஜா, துஷாந், மிதுலா ஆகியோரின் பேர்த்தியும் இராஜேந்திரம் காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, மாதவன், திலகவதி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றைய தினம் (13.10.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

கட்டைப்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 670 1562



### ஆறுமுகம் கணேசன் (கோபால்)

கொம்பாவோடை களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கணேசன் (கோபால்) நேற்று (13.10.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவி த்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

076 897 9739 (பகீரதன் - மகன்)
0044 7475771745 (சிந் - மகன்)
077 224 7813 (மயூரன் - மருமகன் )

தகவல்:
குடும்பத்தினர்

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 13.10.2017 | 2197 | சிவப்பு |

விருச்சிகம்

வெற்றி இலக்கங்கள்: 10 39 42 49

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,791,040/=

2017.10.15 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்கள்

### முருகையா ஜெயராணி

**(அளவெட்டி வைத்தியசாலை ஊழியர்)**



பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்த முருகையா ஜெயராணி (அளவெட்டி வைத்தியசாலை ஊழியர்) (13.10.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகையா அன்னலட்சுமி தம்பதியரின் அன்புமகளும் சிவகுமார், சிவகுமாரி, சுகுமாரி, வசந்தகுமாரி, உதயகுமாரி, ஜெயக்குமாரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**பன்னாலை, தெல்லிப்பழை.**
**077 837 9173**

### மகாலிங்கம் சுரேஸ்குமார்



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு, 8 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் சுரேஸ்குமார் 12.10.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் மகனும் இராசலிங்கம் - அமராவதி தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இராசநந்தினியின் அன்புக் கணவரும் தனுசாவின் அன்புத் தந்தையும் பாமா, கலைச்செல்வன், வசந்தகுமார், கவிதா, பாமினி, சங்கீதா ஆகியோரின் சகோதரனும் உதயநேசனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2017) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் நயினாதீவு, சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**8 ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**தகவல்:**
**சு.இராசலிங்கம் (மாமன்)**

### நாகராஜா பாலசுப்பிரமணியம்

(பாலா ஓய்வுநிலை உப முகாமையாளர்(Sub Manager), இலங்கை வங்கி)



**தோற்றம் 12.08.1952 மறைவு 08.10.2017**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் காரைநகர் மாப்பாணவூரி, அல்லைப்பிட்டி, கொழும்பு ஆகிய இடங்களை வதிவிடமாகவும், கனடாவை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட நாகராஜா பாலசுப்பிரமணியம் 08.10.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற வர்களான நாகராஜா கமலாவதி தம்பதிகளின் மூத்தபுதல்வரும், அல்லைப்பிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் சிவயோக லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோகரி அவர்களின் ஆருயிர்க் கணவரும், கபிலன், கஜானன், அகிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலகிருஷ்ணன் (ஜேர்மனி), நாகேஸ்வரி(சுறோ கொழு ம்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சிவபாலன் (இலங்கை வங்கி) மற்றும் சாந்தினி, மகேந்திரன், மனோராணி, இராஜகுலன், பிரேமா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சரவணன், காலஞ்சென்ற சுமந்திரன் மற்றும் அருண்குலன், அனோஷ்குலன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், துவாரகா, ஜனகா, அனுரன், கீர்த்தன், சுரேஷ்பாபு, பவித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2017) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**சிவபாலன் நாகேஸ்வரி (சகோதரி)**
**மனைவி . 001 905 479 9852 (கனடா)**
**சகோதரி 011 273 1206 (கொழும்பு)**

## வாழைப்பழத்தை வேகவைத்த நீரை குடிப்பதால் ஏற்படும் நன்மைகள்

எமது அன்றாட வாழ்க்கையில் உணவில் பழங்களை சேர்த்து கொள்வதால் எமக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. வாழைப்பழத்தை வேகவைத்த நீரைக் குடிப்பதால் பல நன்மைகள் உண்டாகின்றன.

முதலில் வாழைப்பழத்தின் இரண்டு முனைகளையும் வெட்டி 10 நிமிடம் வரை நீரில் நன்றாக ஊறவைக்க வேண்டும். பின் அந்த நீரில் இலவங்கப் பட்டையை தூள் செய்து கலந்து



கொள்ளலாம். தினமும் உறங்கச் செல்வதற்கு ஒரு மணி நேரத்திற்குமுன்பாக வேக வைத்த நீரை குடிக்க வேண்டும்.

வாழைப்பழம் மற்றும் அதன் தோலில் நிறைந்துள்ள பொட்டாசியம் மக்னீசியம் மற்றும் கனிமச் சத்துகள்போன்றவை எமக்கு கிடைக்கும்.

இரவில் உறங்கும் முன் இந்த வாழைப்பழம் வேகவைத்த நீரை குடித்தால் மனஅழுத்தம் மற்றும் தூக்கமின்மைப் பிரச்சினையை நீங்கும்.

மேலும் நல்ல தூக்கத்தை உண்டாக்கும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 608 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 13.10.2017
வெற்றி இலக்கங்கள் 21 43 50 61 A
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 11,897,244/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 201
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 13.10.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 75,000,000/-
G 39 41 70 76
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 44
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2017.10.13
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 62,376,915/-
வெற்றி இலக்கங்கள் 34 44 49 64 B
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## மரணச்சடங்கு பிற்போடப்பட்டுள்ளது

### திருமதி அன்னலட்சுமி (ராசு) செல்வரட்ணம்



சண்முகம் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் "உமா அகம்" வதிரி மேற்கு, வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி செல்வரட்ணம் கடந்த (10.10.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நாளை (15.10.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 220 8260** **தகவல்: குடும்பத்தினர்**

## வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் இயங்கும் விருந்தினர் விடுதிக்கு Room பராமரிப்பாளர், Kitchen Helper (சமையல் உதவியாளர்) வேலைக்கு ஆள்தேவை.

**தொடர்பு - 021 222 8183**

## வாடகைக்குண்டு

யாழ் சுண்டுக்குழி பழைய பூங்கா வீதியில் பெரிய வீடு வாடகைக்கு விடப்படும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு - 076 856 3842**

## கேள்வி கோருதல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்

1. தலைவர், மாவட்டசெயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளிற்கான, தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.

2. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

3. ஒப்பந்தமானது நிர்மாணகைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA), கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழ்க்குறிப்பிடும் தரத்தினை கொண்டிருப்பதோடு, பொதுநிதி சுற்றறிக்கை, இல. 04/2016(i)இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் (தொலைபேசி இல. 021 222 2427) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் மு.ப. 8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்

5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணதொகுதி ஒன்றினை மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பித்து14.10.2017 முதல் 27.10.2017 வரை 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கீழ் குறிப்பிடப்படும் தொகையினை பணமாகசெலுத்தி பெற்றுக்கொள்ளமுடியும்.

6. கேள்விகள் 30.10.2017 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்டபெறுகைக்குழு, மாவட்டசெயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்படவேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகைதந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.

7. கேள்வி தொடர்பான முற்கேள்விச் சபைக் கூட்டம் மாவட்டசெயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 21.10.2017 அன்றுகாலை 10:30 மணிக்கு நடைபெறும்.

| இல. | கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப் படாத வைப்பு | தேவையான தரம் (CIDA) | கேள்விப்பிணை விவரம். | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1. | JF/DPS/MNIR/IFS/XII/15/2017 | யா/வேதாரணிஸ்வர வித்தியாலயத்தில் இரண்டுமாடி வகுப்பறைக் கட்டடம் அமைத்தல் - கரவெட்டி. (திட்டம் 2017/2018 ஆண்டுகளுக்கானது) | 13.040 | 3,500.00 | C6 & C5 | 130,400.00 | 24.02.2018 |
| 2. | JF/DPS/MNIR/EEP/XII/21/2017 | மீனவர் இளைப்பாற்று மண்டபம் அமைத்தல் - நெடுந்தீவு. | 2.582 | 2,000.00 | C8 & C7 | 25,620.00 | 24.02.2018 |
| 3. | JF/DPS/MNIR/EEP/XII/22/2017 | மகளிருக்கான வாழ்வாதார பயிற்சி நிலையம் அமைத்தல் - மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி | 4.210 | 2,000.00 | C8 & C7 | 42,100.00 | 24.02.2018 |

**நா.வேதநாயகன்**
**அரச அதிபர் / மாவட்ட செயலாளர்,**
**யாழ். மாவட்டம்.**

## குழப்பம்...

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் அவருடன் வரும் பிரமுகர்கள், பாடசாலை மாணவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாமல், இயல்புநிலைக்கு குந்தகம் விளைவிக்காமல், பொதுச் சொத்துக்களுக்கு ஆபத்து விளைவிக்காத வகையில் அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டங்களை இன்று முன்னெடுக்கலாம் என்று யாழ்ப்பாணம் நீதிவான்மன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

அரச தலைவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தினரால் இதற்குத் தடையுத்தரவு வழங்குமாறு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கைக்கு வழங்கிய கட்டளையிலேயே நீதிவான் சி.சதீஸ்தரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கட்டளையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவருடன் வரும் பிரமுகர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் பங்கம் விளைவிக்காதவாறு, அரச தலைவர் மைத்திரிபால பயணிக்கும் ஆளுநர் அலுவலகம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகிய இடங்களிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும், ஏ9 வீதி, இராமநாதன் வீதி, இந்துக் கல்லூரி வீதி மற்றும் அதனை அண்டியுள்ள குறுக்கு வீதிகளில் எந்தவிதத் தடையையும் ஏற்படுத்தாது பொதுச் சொத்துக்களுக்கு ஆபத்து விளைவிக்காத வகையில் அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலர் செல்வராசா கஜேந்திரன், அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சக்திவேல், வலி.வடக்கு பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் ச.சஜீபன், தம்பிராசா உள்ளிட்டவர்களுக்கும் நேற்றைய முழு அடைப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்த 19 அமைப்புக்களுக்குமே மேற்படி கட்டளை வழங்கப்பட்டுள்ளது. (உ-5,103)

## ஆளுநர்...

அலுவலகத்தின் வாயில் மூடப்பட்டு, கலகமடக்கும் பொலிஸார் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டம் மேற்கொண்டவர்கள் அலுவலகத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏ9 வீதிக்குக் குறுக்காக சுமார் 2 மணி நேரம் அமர்ந்திருந்து போராட்டம் நடத்தினர்.

"விடுதலை செய் விடுதலை செய் அரசியல் கைதிகளை விடுதலை செய், பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனே நீக்கு , சட்டமா அதிபர் திணைக்களமே இனவாதமாக செயற்படாதே , வேண்டாம் வேண்டாம் மைத்திரியும் வேண்டாம்" என்பன போன்ற கோசங்களை அவர்கள் எழுப்பினர்.

"சிறையில் வாடும் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு மறுக்கும் அரசு குறைந்தபட்சம் அவர்களின் வழக்குத் தொடர்பான கோரிக்கைகளையாவது ஏற்க வேண்டும். அவற்றையும் உதாசீனம் செய்யும் அரசின் செயற்பாடு அரசியல் கைதிகள் இறக்க வேண்டும் என்பதைப் போன்றுள்ளது" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

"நாம் விரும்புவது அரச தலைவரின் சுற்றுலாவை அல்ல. அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக்காத அரச தலைவர் குறைந்த பட்சம் அவர்களின் நியாயமான கோரிக்கைகளையாவது செவிமடுக்க வேண்டும். அநுராதபுரத்துக்கு வழக்கு மாற்றப்படுவதைத் தடுக்க வேண்டும்." என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (ற-101,8)

## அரசியல்...

சென்று "நாம் இங்கு கூடியிருப்பது அரசியல் கைதிகளின் விடுதலைக்காகவே. இங்கு தனிப்பட்ட அரசியல் செய்யவேண்டாம். அரசியல் கைதிகள் தொடர்பாகவே பேசுங்கள்" என்று எடுத்துக் கூறினார். அதையடுத்து அவ்வாறு கோசமிடுவது நிறுத்தப்பட்டது.

அதேவேளை, ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன் , சுன்னாகம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் பிரகாஸ் உட்பட 6 பேர் ஆளுநர் அலுவலகத்துக்குள் சென்று பேச்சு நடத்தினர். ஆளுநருடன் பேச்சு நடத்தியவர்கள் தமது விருப்பின்படியே அந்தச் சந்திப்பை மேற்கொண்டார்கள் என்றும், ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கும் அவர்களின் நடவடிக்கைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்றும் ஆர்ப்பாட்டத்தின்போது ஒலிபெருக்கியில் அறிவிக்கப்பட்டது.

நாளைக்குள் (இன்று) அரசியல் கைதிகள் விடயத்தில் தீர்வு தரப்படாது அரச தலைவர் யாழ்ப்பாணம் வந்தால் கறுப்புக் கொடிப் போராட்டம், தடுப்புப் போராட்டம் என்பன நடத்தப்படும். எனவே அரசியல் கைதிகள் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்றிய பின்னர் யாழ்ப்பாணம் அவர் வருவதே பொருத்தமானது என்றும் போராட்டக்காரர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது விசேட அதிரடிப் படையினர் மோட்டார் சைக்கிளில் வந்து அந்தப் பகுதியில் நின்றிருந்தனர். அவர்களை ஒளிப்படம் எடுக்க முயன்றபோது அவர்கள் அங்கிருந்து அகன்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-101)

## வடக்கு...

னர், வடக்கு முழு அடைப்புப் போராட்டம் தொடர்பில் பத்திரிகையாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பியிருந்தனர். அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறையில் உள்ள விடுதலைப் புலிகளை விடுதலை செய்யக்கோரியே தமிழ் மக்களின் ஒரு சாரார் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்கள் கோரியதற்காக அல்லது உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்துவதால் அல்லது முழு அடைப்புப் போராட்டம் நடத்துவதால் விடுதலைப் புலிகளை விடுதலை செய்ய முடியாது. இப்போது சிறையில் உள்ள அனைவரும் போரின்போது மோசமாக செயற்பட்ட முக்கியமான நபர்களே. இப்போது அரசியல்வாதிகள் தமது தேவைக்காகச் செய்யும் போராட்டங்கள் அல்லது கோரிக்கைகள் மூலமோ அவர்களை விடுவிக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிக்க வேண்டும். அதனை நாம் செய்ய வேண்டும். நீதிமன்றத்தில் ஒப்படைத்து உரிய நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும். நீதிமன்றத்தில் ஒரு தீர்வு வழங்கப்படவேண்டும். நீதி அமைச்சர் இந்த விடயங்களை நன்கு அறிந்துள்ளார். இப்போது அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக நான் கருதுகின்றேன்.

ஆனால் வடக்கின் அரசியல்வாதிகள் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள வடக்கில் மக்களைத் தூண்டிவிட்டு முழு அடைப்புப் போராட்டம், ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்த இவர்கள் முயற்சிக்கின்றனர். வடக்கு மாகாண சபைக்கு கிடைத்துள்ள நிதியில் கூட மக்களுக்குச் சேவை செய்யாத இவர்கள் மக்களைக் குழப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசியல் வாய்ப்புகளை பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர்.

எது எப்படியிருப்பினும் கைதிகளை விடுதலை செய்ய நாம் ஒருபோதும் தயாராக இல்லை. இவர்களை நீதிமன்றத்தில் நிறுத்திச் சட்ட நடவடிக்கைகளை எடுப்போம். இவர்களை அரசியல் கைதிகள் என்று கூறுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. புலிகளின் பயங்கரவாத உறுப்பினர்கள். இவர்களை விடுதலை செய்தால் மீண்டும் நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தும் சூழலை உருவாக்குவார்கள் என்ற சந்தேகம் உள்ளது. வடக்கின் அரசியல்வாதிகள் கூறும் கதைகளுக்கு ஏற்ப எம்மால் செயற்பட முடியாது - என்றார். (உ-5.31)

## முழு அடைப்பினால்...

வலர்கள் வருகை தரவில்லை. வந்திருந்த எஞ்சியோரும் கருமங்களில் அக்கறையற்றிருந்தனர். வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஒற்றைக் கதவுகளுடன் இயங்கியபோதும் மக்கள் நாளாந்த நடவடிக்கைகளுக்காக அங்கு செல்லவில்லை. பொது நிகழ்வுகள் எவையும் நடைபெறவில்லை. மக்கள் நடமாட்டம் பிரதான வீதிகளில் வழமைக்கு மாறாக மிகக் குறைவாகவே இருந்தது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களில் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டங்களும் நடைபெற்றன. தீபாவளி வியாபார காலமாக இருந்தபோதும் சகல மாவட்டங்களிலும் நடைபாதை வியாபாரிகளும் தமது வியாபாரத்தை மூடிப் போராட்டத்துக்குப் பேராதரவு வழங்கியிருந்தனர்.

அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் என்று 40 தரப்புக்கள் நேற்றைய முழு அடைப்புப் போராட்டத்துக்கு முழுமையாக ஆதரவு தெரிவித்திருந்தன.

**யாழ்ப்பாணம்**

வடமராட்சியில் சில இடங்களில் வீதிகளில் ரயர் கொளுத்தப்பட்டது. முதன்மைச் சாலைகள், உள்ளூர் வீதிகளில் வழமைக்கு மாறாக நடமாட்டம் குறைந்திருந்த போதிலும், மக்களின் நடமாட்டம், வாகனங்களின் நடமாட்டம் என்பன இருந்தன.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி ஏ-9 முதன்மைச் சாலையில் காலையில் வெளிமாவட்டங்களுக்கான பேருந்துச் சேவை நடைபெற்றது. பின்னர் சகல பேருந்துச் சேவைகளும் முடங்கின. சில உணவகங்கள் திறக்கப்பட்டிருந்தன. வர்த்தக நிறுவனங்கள், சந்தைகள் பூட்டப்பட்டிருந்தன. நகரிலிருந்த இரண்டு வங்கிகள் முழுமையாக திறந்திருந்ததுடன் மக்களின் நடமாட்டமும் அங்கு இருந்தது. நீதிமன்றம் இயங்கியது.

**முல்லைத்தீவு**

அரச மற்றும் தனியார் பேருந்துச் சேவைகள் நடைபெறவில்லை. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தன. உணவகங்கள் பல இடங்களில் திறக்கப்பட்டிருந்தன. அலுவலகங்கள், பாடசாலைகள் வெறிச்சோடியிருந்தன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்தது.

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டங்களின்போது அரச பேருந்துச் சேவைகள் இடம்பெற்றன. ஆனால் நேற்றைய போராட்டத்தின் போது அரச பேருந்துச் சேவைகளும் இடம்பெறவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த கால முழு அடைப்புக்களின் போது கிடைத்த ஆதரவை விட நேற்றைய தினம் அதிகளவிலான ஆதரவு இருந்ததாக, முல்லைத்தீவு மாவட்டச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

**மன்னார்**

மன்னார் மாவட்டத்தில் காலை 6.30 மணியிலிருந்து 9.30 மணிவரை வீதிகளில் ஓரளவு போக்குவரத்து இருந்தாகவும் அதன் பின்னரே நடமாட்டம் குறைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அரச மற்றும் தனியார் பேருந்துச் சேவை நடைபெறவில்லை. உணவகங்கள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன.

**வவுனியா**

வவுனியா மாவட்டத்திலும் சகல போக்குவரத்துச் சேவைகளும் முடங்கியிருந்தன. வெளிமாவட்டத்திலிருந்து வந்த பேருந்துகள் வவுனியாவுடன் தமது பயணத்தை முடித்துக் கொண்டன. அங்கிருந்தே திரும்பிச் சென்றன. எரிபொருள் விற்பனை நிலையங்கள், உணவகங்கள், மருந்தகங்கள் என்பன திறக்கப்பட்டிருந்தன. நீதிமன்றம் இயங்கியது. சந்தைகள் பூட்டப்பட்டிருந்தன. மக்களின் நடமாட்டம் வழமைக்கு மாறாகக் குறைவாகவே இருந்தது.

(உ-5.101.102.9.173.17.35.106.26)

## மைத்திரியிடம்...

தலைவரைச் சந்தித்துப் பேசியபோதும், அரசியல் கைதிகள் விடயம் குறித்து அரச தலைவர் மைத்திரிபால உருப்படியான பதிலை வழங்கவில்லை.

"இதுபற்றி ஆராய்ந்து முடிவை எடுப்பதாக மைத்திரி என்னிடம் கூறினார். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் திருப்திகர மான பதிலாக இல்லாமல் இந்த விவகாரம் தொடர்ந்து இழுபறியிலேயே இருப்பதையே காட்டுகிறது' என்று அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் தொடர் உணவு ஒறுப்புப் போராட்டம் , வடக்கில் முன்னெடுக்கப்பட்ட முழு அடைப்புப் போராட்டம் போன்ற விடயங்கள் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, நேற்று மதியம் அமைச்சர் மனோகணேசன் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுத் தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கில் நடைபெறும் எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக அங்கு சட்டம் ஒழுங்குக்குப் பாதகம் இல்லை என்று தனக்கு வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபரும், இராணுவத் தளபதியும் கூறியுள்ளனர் என்று அரச தலைவர் என்னிடம் கூறினார். சட்டம் ஒழுங்குக்கு பாதகம் இல்லையானாலும் அரசியல்ரீதியாக இது பெரும் நெருக்கடி நிலைமையை வடக்கில் ஏற்படுத்தியுள்ளது என்று நான் அரச தலைவருக்கு எடுத்து கூறினேன்.

சட்டமா அதிபரை அலைபேசியில் தொடர்பு கொண்ட அரச தலைவர் இதுபற்றிய சட்ட மா அதிபரின் கருத்தை கேட்டுத் தெரிந்துகொண்டார். இந்த வழக்கின் சாட்சிகளாக இருக்கின்ற தமிழீழ விடுதலை புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களே தங்களுக்கு பாதுகாப்பைக் கோரி வவுனியாவுக்குச் செல்ல இயலாது என்று கூறுகின்றனர் எனவும், இதனாலேயே சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சட்டமா அதிபர் கூறுகின்றார் என்றும் அரச தலைவர் என்னிடம் தெரிவித்தார்.

இன்று போர் முடிந்த நிலையில் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் எவரும் சென்று வரக்கூடிய நிலையில், சட்டமா அதிபர் இத்தகைய முடிவை எடுத்திருப்பது தமிழ் மக்களுக்குத் தவறான செய்தியை தருகிறது என்று நான் எடுத்து கூறினேன்.

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே மற்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ள தேசிய தமிழ் மொழித் தின விழாவைப் பொறுப்பேற்றுச் செய்யும் எமது கூட்டணியின் பிரதி தலைவரும், கல்வி இராஜாங்க அமைச்சருமான ராதாகிருஷ்ணன் ஆகியோரும் என்னை அலைபேசியில் தொடர்புகொண்டு இது குறித்துப் பேசினார்கள்.

அவர்கள் இருவரும்கூட இது தொடர்பில் எனது கருத்தையே கொண்டுள்ளனர் என்று நான் அரச தலைவரிடம் கூறினேன். இது பற்றி தான் மேலும் ஆராய்ந்து முடிவை எடுப்பதாக மைத்திரி என்னிடம் கூறினார்.

இது இன்று தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் திருப்திகரமான பதிலாக இல்லாமல் இருக்கும். இந்த விவகாரம் தொடர்ந்து இழுபறியிலேயே இருப்பதைக் காட்டுகிறது. இது நமது அரசுக்கு, தமிழ் மக்கள் மத்தியில் இருக்கின்ற நற்பெயரைப் பாதிக்கும். நியாயமான முடிவை எடுங்கள் என்று கூறிவிட்டு வந்தேன். இது தொடர்பில் தான் மேலும் ஆராய்ந்து பார்த்து முடிவுகளை எடுப்பதாக அரச தலைவர் தெரிவித்தார்" என்றுள்ளது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், அரச தலைவர் மைத்திரி, நீதி அமைச்சர் தலதா, சட்டமா அதிபர் ஆகியோரை அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இரவு சந்தித்துப் பேசியுள்ளார். அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்ற வேறு நிகழ்வில் கலந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே, பேச்சு நடைபெற்றுள்ளது.

சாட்சியமளிப்பதில் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறியவருடன் இது தொடர்பில் பேசுவதாக சட்டமா அதிபர் இந்தச் சந்திப்பில் கூறியுள்ளார். இதன் பின்னர் எந்தவொரு தகவலும் சட்டமா அத்திபரிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ-5,101)

## சம்பந்தர்...

னெடுத்துள்ளனர். வவுனியா மேல் நீதிமன்றில் நடைபெற்ற தமது வழக்கு அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டமைக்கு எதிராக அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான, இரா.சம்பந்தன், தமிழ் அரசியல் கைதிகள் எல்லோரது விடுதலையை வலியுறுத்தியும், உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள கைதிகளின் கோரிக்கைக்கு செவிசாய்க்குமாறு கோரியும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்துக்கு நேற்று இரவு வரையில் அரச தலைவரிடமிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை. அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் நேரில் சந்தித்துப் பேசுவதற்கு அரச தலைவரிடம், கூட்டமைப்பின் தலைமை நேரம் ஒதுக்கித் தருமாறு கோரியிருந்தது. அதற்கும் அரச தலைவரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை. (உ-5)

## மைத்திரி...

இரண்டு நிகழ்வுகளிலும், கிளிநொச்சியில் நடக்கும் நிகழ்விலும் பங்கேற்பதற்கு வருகை தரவுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த நிகழ்வைப் புறக்கணிக்கப் போகின்றனர் என்று" ஏற்கனவே அறிவித்திருந்தனர். இந்த நிலையில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களும் அரச தலைவரின் நிகழ்வில் பங்கேற்கப் போவதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்ததாவது: தமிழ் அரசியல் கைதிகளின் கோரிக்கை நியாயமானது. அவர்களது வழக்குகள் வவுனியாவிலிருந்து அநுராதபுரத்துக்கு மாற்றப்பட்டதில் உள்நோக்கம் இருக்கின்றது. சட்டமா அதிபர் திணைக்களம் இந்த விடயத்தில் நியாயமாகச் செயற்படவில்லை. அரச தலைவர் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கலாம். அப்படி எதுவும் செய்யாத அவரது நிகழ்வுகளில் பங்கேற்பது பொருத்தமானதாக இருக்காது. வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், அரச தலைவரின் நிகழ்வுகளைப் புறக்கணிப்பர்- என்றார். (உ-5)

# இன்றைய மோதல்கள்

**ஐயனார் ச.ச.நி. கால்பந்தாட்டம்**

ஐயனார் சனசமூக நிலையம், ஐயனார் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் 69ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தீவக கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இன்று இடம்பெறும் ஆட்டத்தில் அம்பிகைநகர் அணியை எதிர்த்து நாரந்தனை அண்ணா அணி மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் சிறுப்பிட்டி ஐங்கரன் அணியை எதிர்த்து சரவணை திருவள்ளுவர் அணியும், அனலைதீவு அருணோதயா அணியை எதிர்த்து புங்குடுதீவு காந்தி அணியும், நெடுந்தீவு உதயசூரியன் அணியை எதிர்த்து கரைநகர் கலாநிதி அணியும், மண்டைதீவு சென். பீற்றர்ஸ் அணியை எதிர்த்து நயினாதீவு ஞானவைரவர் அணியும், செட்டிப்புலம் ஐயனார் அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் 'பி' அணியும், தம்பாட்டி காந்திஜி அணியை எதிர்த்து அல்லைப்பிட்டி வெண்புரவி அணியும், புங்குடுதீவு நண்பர்கள் அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் அணியும், ஊர்காவற்றுறை ஞானவொளி அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் அணியும், நயினாதீவு அண்ணா அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி அணியும், துறையூர் ஐயனார் 'சி' அணியை எதிர்த்து ஊர்காவற்துறை பருத்தியடைப்பு அணியும், புங்குடுதீவு வயலூர் முருகன் அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை அண்ணா அணியும், புங்குடுதீவு சென். சேவியர் அணியை எதிர்த்து புங்குடுதீவு பாரதி அணியும் மோதவுள்ளன.

**கே.ஸி.ஸி.ஸி. வி.கழக கூடைப்பந்துத் தொடர்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டு கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டு கழக அணி மோதவுள்ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதவுள்ளது.

**மைக்கல் வி.கழக கால்பந்தாட்டம்**

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-108-23)

# அண்ணா அபாரம்

யாழ்ப்பாணம், ஒக். 14

சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அண்ணா அணி வெற்றிபெற்றது.

இளம்பறவைகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அண்ணா விளையாட்டுக் கழக அணிக்கும், விநாயகர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழக அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)



# சென். நீக்கிலஸ் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 14

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதியது. நீக்கிலஸின் முதல் கோலைப் பதிவு செய்தார் றொக்சன். வளர்மதியின் முதல் கோலைப் பதிவுசெய்தார் கேதீஸ். 1:1 என்ற கோல் கணக்கில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியில் அமிலன் நீக்கிலஸின் சார்பாகக் கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நீக்கிலஸ். (ம-23)

# சாவகச்சேரி இந்துவுக்கு கிடைத்தது வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 14

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ப.கிரிஜா வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 20 வயது பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் ப.கிரிஜா 2.85 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.



(ம-422)

# ஐக்கிய அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் ஐக்கியம் அணி வெற்றிபெற்றது.

திருக்குமரனின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி மாவத்தை விளையாட்டுக் கழக அணி மோதியது. ஐக்கிய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

(ம-23)



# வேலணை பிரதேச செயலகம் கால்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் வேலணை பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணியும், வேலணை பிரதேச செயலக அணியும் மோதின. 1:1 என்ற கோல் கணக்கில் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் ஆதிக்கம் செலுத்திய வேலணை பிரதேச செயலக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

(ம-108-422)

# யங்ஹென்றிஸுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 14

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:1 என்ற கோல் கணத்தில் யங்ஹென்றிஸ் அணி அபார வெற்றிபெற்றது.

(ம-23)

# மகாஜனவுக்கு ஐந்தாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 14

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான உயரம் பாய்தலில் 16 வயது பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த சந்திரகுமார் தீபிகா ஐந்தாம் இடத்தைப் பெற்றார்.

கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் 1.45 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்தே தீபிகா ஐந்தாம் இடத்தைப் பிடித்தார்.

(ம-422)

# மைலோ தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 14

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளின் 16 வயதுப்பிரிவு அணிகளுக்கான ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.

(ம-23)

## காலிறுதியில் ரபேல் நடால்

**சீன ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் காலிறுதிக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.**

ஷங்காய் நகரில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாம் சுற்று ஆட்டத்தில் நடாலை எதிர்த்து இத்தாலி வீரர் போக்னி மோதினார். முதலிரு செற்களையும் 6:3, 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி காலிறுதிக்குத் தகுதி பெற்றார் நடால்.

இந்த வருடம் நடால் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தி வருகிறார். ஸ்பெய்ன் தொடர், அமெரிக்கத் தொடர் ஆகிய பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் கிண்ணம் வென்றிருந்தார். பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரராகவும் உள்ளார். முதலிடத்தை இந்த வருடம் முடியும் வரை தக்கவைக்க வேண்டுமாயின் இந்தத் தொடரில் சம்பியனாகவேண்டும் என்ற நெருக்கடி நடாலுக்கு உள்ளது. (ம)



# ஸ்ரோக்ஸ் இல்லாவிடில் இங்கிலாந்து தோற்கும்

## ஸ்ரீவ் வோ கருத்து

இங்கிலாந்து அணி அதன் நட்சத்திர சகலதுறை வீரரான ஸ்ரோக்ஸ் இல்லாமல் ஆஷஸ் தொடரில் ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டால் நிச்சயம் படுதோல்வியடையும் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் வோ.

அண்மையில் இரவுநேர களியாட்ட விடுதிக்குச் சென்ற ஸ்ரோக்ஸ் அங்கு நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்டார். இந்த விடயம் காணொலி ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் மறு அறிவிப்பு வரும் வரை ஸ்ரோக்ஸுக்கு தடை விதித்துள்ளது இங்கிலாந்து கிரிக்கெட் சபை. இதனால் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆஷஸ் தொடரில் ஸ்ரோக்ஸ் விளையாட வாய்ப்பில்லாத நிலை உருவாகியுள்ளது. இந்த நிலையிலேயே வோ இவ்வாறு தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு ஆஷஸ் தொடர் தொடர்பாக வழங்கிய செவ்வியிலேயே வோ இவ்வாறு தெரிவித்தார்.

"பென் ஸ்ரோக்ஸ் ஆஸ்திரேலியாவுக்கு வராவிட்டால், அவர்களால் ஆஷஸ் தொடரில் வெல்ல முடியும் என்று நான் கருதவில்லை. ஆனால் இத்தகைய சர்ச்சையில் ஆஸ்திரேலிய வீரர் ஒருவர் சிக்கியிருந்தால் நிச்சயம்



அணிக்கு தேர்வு செய்திருக்கமாட்டோம். வீரர்கள் பொது இடங்களில் இதுமாதிரி நடந்து கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. இது. விளையாட்டின் புகழுக்குக் களங்கத்தை ஏற்படுத்தும். ஆஷஸ் தொடரில் ஸ்ரோக்சை விளையாடவைக்க வேண்டும் என்பதில் இங்கிலாந்துத் தேர்வாளர்கள் ஆர்வமாக இருக்கிறார்கள். அவர் தான் தற்போது அந்த அணியின் சிறந்த வீரர். பென் ஸ்ரோக்ஸ் இல்லாவிட்டால் நாங்கள் வெற்றி பெற்று விடுவோம். 3:1 என்ற கணக்கில் ஆஷஸ் தொடரை வெல்வோம் என்று நினைக்கிறேன்" என வோ மேலும் தெரிவித்தார். (ம)



## ஹாட்லிக்கு கிடைத்தது வெண்கலம்

யாழ்ப்பாணம், ஒக். 14

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான ஈட்டி எறிதலில் 16 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் 53.65 மீற்றர் தூரத்துக்கு எறிந்தே மிதுன்ராஜ் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)

## சரஸ்வதியின் பூப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 14

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் தீபத் திருநாளை முன்னிட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட ஆண்களுக்கான பூப்பந்தாட்டத் தொடர் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் பூப்பந்தாட்டத் திடலில் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. (ம-23)



ஆஸ்திரேலியாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டிக்கான கோல் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டது. விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள், சுசந்திகா ஜயசிங்க, ஸ்ரீயானி குலவங்ஸ, தமயந்தி தர்ஷா, டிலந்த மாலகமுவ உள்ளிட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகளும் நிகழ்வில் கலந்து கொண்டனர். 1930ஆம் ஆண்டு பிரிட்டனில் நடைபெற்ற முதலாவது பொதுநலவாய விளையாட்டு போட்டியின் போது பொதுநலவாய நாடுகளின் தலைவி என்ற வகையில் எலிசபெத் மகாராணி விடுத்த செய்தியைக் கொண்ட கோல் விளையாட்டுப் போட்டி நடைபெறும் காலத்தில் அங்கத்துவ நாடுகளிகளில் காட்சிப்படுத்தப்படுவது சம்பிரதாயமாகும். (ம)

## இந்து இளைஞர் - கலைமதி இறுதியில் இன்று மோதல்





யாழ்ப்பாணம், ஒக். 14

மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் முத்துலிங்கம் ஜெகநாதன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி இந்த ஆட்டத்தில் மோதவுள்ளது.

மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ள இறுதியாட்டத்தைத் தொடர்ந்து நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் கஜதீபன் கலந்துகொள்ளவுள்ளார். (ம-23)

## மனோகரா அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 14

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் மனோகரா அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மனோகரா அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் மனோகரா அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக மனோகரா அணியின் சர்வநிதி தெரிவானார். (ம-23)

பரீட்சையும் விளையாட்டும் ஒரே நேரத்தில்

## கல்வி அமைச்சின் அட்டவணையால் வீரர், வீராங்கனைகள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக். 14

தேசியமட்ட விளையாட்டு, உயர்தர மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப வியல் பரீட்சை ஆகியவற்றை ஒரே தினத்தில் வரும்படி அட்டவணை தயாரித்து மாணவர்களுக்கு பெரும் சிக்கல்களை கொடுத்துள்ளது இலங்கை கல்வி அமைச்சு.

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையில் தேசியமட்ட தடகளத் தொடர் நடைபெற்றுவரும் நிலையில், விளையாட்டுப் போட்டி அட்டவணையின் படி சில போட்டிகள் நாளை நடைபெறவுள்ளன. அடுத்த வருடம் உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பவியல் பரீட்சையும் நாளை நடைபெறவுள்ளது. இத னால் வடக்கு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் நேற்றுக் காலையும், நேற்றுமுன்தினம் மாலையும் போட்டிகளில் இருந்து விலகியுள்ளனர்.

ஆனால் மேல் மாகாண வீரர்கள் இன்றும் போட்டிகளில் கலந்து கொள்வதுடன் நாளையும் பரீட்சை முடிந்த பின்னர் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

எனவே கல்வி அமைச்சால் சரியாகத் திட்டமிடப்படாத இந்த அட்டவணைகளால் வடக்குக்கு கிடைக்க வேண்டிய பதக்கங்கள் பல கிடைக்காமல் போயுள்ளதுடன் வீர, வீராங்கனைகளும் பெரும் மனவுளைச் சலுக்கும் ஆளாகியுள்ளனர். (ம-422)

அன்பொளி கல்வியகம் - யாழ்ப்பாணம்
முக்கிய அறிவித்தல்
தேசிய தமிழ்த்தின விழாவில் மாணவர்கள் கலந்து கொள்ள இருப்பதனால் 14,15/10/2017 (சனி,ஞாயிறு) தினங்களில் சகல வகுப்புக்களும் நடைபெறமாட்டாது.
அன்பொளி கல்வியகம்
யாழ்ப்பாணம்

# தங்கம், வெள்ளி, வெண்கலம் எல்லாம் வடமாகாணத்துக்கே

## கோலூன்றிப் பாய்தலில் வழித்துத் துடைத்து சிறப்பு அடைவு

யாழ்ப்பாணம், ஒக். 14

இலங்கைப்பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்டத் தடகளத் தொடரில் 18 வயது ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் வடக்கு மாகாணத்துக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று அத்தனை பதக்கங்களும் கிடைத்தன.



கொழும்பு தியகம மகிந்த ராஜபக்ச மைதானத்தில் நேற்று இந்தப் போட்டிகள் நடைபெற்றன. 18 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த அ.புவிதரன் 4.50 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ர.யதுசன் 4.00 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கேதுசன் 3.90 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

(ம-422)

# இந்தியா ஆஸி. தொடர் சமநிலை

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நேற்று இரவு நடைபெறவிருந்த மூன்றாவது ரி-20 ஆட்டம் மைதானத்தில் நிலவிய அதிகளவான ஈரப்பதம் காரணமாக கைவிடப்பட்டதை அடுத்து தொடர் 1:1 என்று சமநிலையில் முடிவடைந்தது. ஆஸ்திரேலியா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. ஒருநாள் தொடரை இந்தியா 4:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து ரி-20 தொடர் 1:1 என்று சமநிலையில் முடிவடைந்தது.

(ம)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புவனேஸ்வரி இராசரத்தினம்



யாழ். காரைநகரைப் (மாப்பாணவூரி) பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி இராசரத்தினம் 12.10.2017 வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், ஆசைப்பிள்ளை இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், உருத்திரா (UK), நிர்மலா (Canada), சகுந்தலா (France), குலேந்திரன் (NTB Zonal Credit Manager), பிரம்மா (UK) ஆகியோரின் அன்புத் தாயும், பிருந்தா (UK), சத்திய தேவன் (Canada), சக்திகுமார் (France), வசந்தராணி, அகிலா (UK) ஆகியோரின் அன்பு மாமியும், நித்தியலட்சுமி, காலஞ்சென்றவர்களான செல்வலட்சுமி, சுந்தரமூர்த்தி மற்றும் தனபாலன், வாமதேவன், வரதராசன், கருணாகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2017)ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் 126/5, அரசடி வீதி, (இந்து மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை) கந்தர்மடம், யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


126/5, அரசடி வீதி,
(இந்து மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

தகவல்:
இ.குலேந்திரன்
(மகன்)

0773111361

### பழனி நாகேந்திரம்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 13 | 12 |
| 08 | 10 |
| 1951 | 2017 |



யாழ். காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.18, குமரபுரம், பரந்தனை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட பழனி நாகேந்திரம் கடந்த (12.10.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் சிவபாலாம்பிகை (அம்பிகா கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி), சக்திபாலாம்பிகை, சோதிபாலாம்பிகை, தேவிபாலாம்பிகை (மருத்துவ தாதி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை), அம்பிகைபாலன் (கிராமஅலுவலர்), இந்திரபாலன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தம்பிராசா, சசிதரம், பத்மநாதன் (சுதாசீலன்), தவபாலன் ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும் மேகஜனனி, இளங்கோ, ஆதுரியா, கபிஷா, பகலவன், விதுரன், விதுஷாளினி, தமிழ்நிலா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.10.2017) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரக்கன் கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

18, குமரபுரம், பரந்தன்.
0773927328

தகவல்:
குடும்பத்தினர்.

வீடு வாடகைக்குத் தேவை.
3 or 4 bed rooms உடன் சகல வசதிகளுடன், கார் Park முக்கியம்.
இடம்: நல்லூர் சூழவுள்ள இடங்கள்.
தொடர்பு:
S.Sham Mob:076 8466129

SALE
தீபாவளியை முன்னிட்டு
ஏசியன் தளபாடத்திற்கான
மாபெரும் மெகா Sale
இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திக்கும் இடையில்
076 821 9415/ 021 492 7791

CHEMISTRY
குழு / தனி வகுப்புக்கள்
2019 - இரசாயன கணித்தல்கள்
2018 - பௌதீக இரசாயனம்
Day Classes
M.Vakeesan
077 977 1936

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
இறுதி சந்தர்ப்பம்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
அமெரிக்கா செல்லும் 51 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
0768226243
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
சாவகச்சேரி 0768226242
நெல்லியடி 0776699892
பருத்தித்துறை 0768226230
வல்வெட்டித்துறை 0776697960

வீட்டுடன் காணி விற்பனைக்கு
நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு, காணி விற்பனைக்கு உண்டு.
இடம் :- கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.
076 785 1067

45th Year in God's Ministry
45 ஆண்டுகள் தேவ பணியில்
Rev. JOSIAH KSHMENDRANATH PHILIP
வண. ஜொசாயா ஷமீந்திரநாத் பிலிப்
யாழ்ப்பாணத்தில் 45 வருட போதக பணியை நிறைவு செய்யும் பெந்தகொஸ்தே போதகர்.
Arise Shine எழும்பிப் பிரகாசி
Isaiah 60:1 ஏசாயா 60:1
சீயோன் தேவாலயத்தின் 35 கிளைச்சபைகளும் இணைந்து பங்குபெறும் நன்றி ஐக்கிய ஆராதனை நாளை (15.10.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணிக்கு இல 24, இராமையாச்செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது பிரதான ஆலயத்தில் நடைபெறும்.





துதி ஆராதனை
சுவி.சுஜித் பிரியதர்ஷன்
இந்தியா
15.10.2017
தேவ செய்தியாளர்:
வண.ஜேக்கப் ரட்ணம்
அக்கிராசனர், இலங்கை சுயாதீன திருச்சபைகளின் ஐக்கியம், கண்டி.
இவ் ஆராதனையில் கலந்து தேவனை மகிமைப்படுத்த உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வண. ஜோஹனன் டி.பிலிப்
தலைமைப் போதகர்,
சீயோன் தேவாலயம், யாழ்ப்பாணம்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.